இந்தியப் பல்கலைக்கழகத்
தமிழாசிரியர் மன்றம்

பதினோராவது கருத்தரங்கு

# ஆய்வுக்கோவை

தொகுதி - 2

உஸ்மானியப் பல்கலைக்கழகம்
ஹைதராபாத்

இந்தியப் பல்கலைக்கழகத்
தமிழாசிரியர் மன்ற வெளியீடு
1979

விலை ரூ. 32-00 முதல் தொகுதி
ரூ. 20-00 இரண்டாவது தொகுதி
ரூ. 8-00 மூன்றாவது தொகுதி

கிடைக்குமிடம்:

1. பாரி நிலையம், 59 பிராட்வே, சென்னை-1
2. மீனாட்சி புத்தக நிலையம், மேலக்கோபுரத்தெரு, மதுரை-1
3. செயலர், இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம் அண்ணாமலைநகர்

அச்சிட்டோர்:
ஸ்ரீ வேலன் பிரஸ்
சிதம்பரம் - 608 001

## முன்னுரை

சுந்தரத் தெலுங்கு வழங்கும் ஆந்திர மாநிலத்தின் தலைநகரமும், இந்தியாவின் இரட்டை நகரம் எனப்புகழ் பெற்றதுமாகிய ஹைதராபாத் (செகந்திராபாத்) நகரிலுள்ள உஸ்மானியப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையின் சார்பாக, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றத்தின் பதினோராவது மாநாடு — கருத்தரங்கு 1979, ஜூன் மாதம் நடைபெறுகிறது. ஆந்திர மாநிலத்தில் இக் கருத்தரங்கு நடைபெறுவது இதுவே முதல் தடவையாகும்.

இவ்வாண்டுக் கருத்தரங்கில் படிப்பதற்காகப் பேராளர்கள் எழுதியனுப்பிய ஆய்வுக்கட்டுரைகளின் இனிய தொகுப்பே இந்த ஆய்வுக்கோவையாகும். இவ்வாண்டு ஆய்வுக்கோவையை மூன்று தொகுதிகளாக வெளியிட்டுள்ளோம். முதல் தொகுதியில் இலக்கியம் பற்றிய கட்டுரைகளும், இரண்டாம் தொகுதியில் இலக்கணம், மொழியியல் பற்றிய கட்டுரைகளும், மூன்றாவது தொகுதியில் வரலாறு, அறிவியல் முதலிய பல துறைகளைப் பற்றிய கட்டுரைகளும் உள்ளன. தமிழறிஞர்கள் தங்கள் நுண்மாண் நுழைபுலம் கொண்டு துருவி ஆராய்ந்து இக்கட்டுரைகளை எழுதி உள்ளனர். தமிழியல் ஆய்வு இக்காலத்தே அடைந்துள்ள முன்னேற்றங்களையும், வளர்ச்சியினையும் ஓரளவு இக் கட்டுரைகள் எடுத்தியம்பும் பெற்றியன ஆகும். இவற்றைத் தொகுத்து பதினோராவது கருத்தரங்கு மலராக உங்கள் முன் வழங்குவதில் உண்மையிலேயே உவகையும் பெருமையும் கொள்கிறோம்.

இம்மலரை உருவாக்கும் முயற்சியில் உறுதுணையாக நின்றோர் பலர். அவர்களில் இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றப்பொருளாளர் டாக்டர் சுப. திண்ணப்பன், அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் துறையைச் சார்ந்த டாக்டர் சு. சக்திவேல், ஆராய்ச்சி மாணவர்கள் செல்வி எம். சுசீலா திரு. எம். ஞானம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களின் அயரா உழைப்பாலும், இடையறு முயற்சியாலும்தான் இவ்வாய்வுக்கோவை எழிலுருக் கொள்கிறது. இதனைக் குறித்த காலத்தில் அச்சு ஏற்றி உயர்ந்ததோர் உருக் கொடுத்து அமைத்து தந்துள்ள பெருமை சிதம்பரம் வேலன் அச்சகத்தாரைச் சாரும். இவர்கள் அனைவருக்கும் எங்கள் நன்றி உரியதாகுக.

அண்ணாமலைநகர்
26—4—1979

ச. அகத்தியலிங்கம்
தா. ஏ. ஞானமூர்த்தி
செயலாளர்கள்

# CONTENTS


1 Conditional Participle in Old Tamil 1
S. Agesthialingom

2 Correlation of Sex with the Speech 6
P. M. Ajmal Khan

3 Traditional Concept of Nominative case in Tamil 10
V. S. Arul Raj

4 வினைப் பண்புப்பெயர் 17
ஏ. ஆதித்தன்

5 தமிழில் உகரச்சுட்டு 21
மோ. இசரயேல்

6 செயப்பாட்டு வினையா ? 27
ஜி. இந்திராபாய் ஜாதவ்

7 கலைச்சொல் ஒலிபெயர்ப்பில் மெய்ம்மயக்கங்கள் 32
இராதா செல்லப்பன்

8 Social & Structural Constraints in Linguistic Choice 38
M. Irulappan

9 The Final 'nu', 'nu:' 'vu', and 'vu:' 43
M. Elayaperumal

10 Onomatopoeia — Compared 46
Kathir Mahadevan

11 தமிழ் வளர்ச்சி 51
கி. கருணாகரன்

12 A:tticu:ti and Konrai Ve:ntan — A comparison 55
T. M. Kameswari

13 Compound words in Tamil 59
A. Karthikeyan

14 குறுந்தொகையில் முரண்தொடை 64

கா. காளிமுத்து

15 Auxiliary verbs in Telugu 69

N. P. Kilary

16 Speech Act Pronouns 75

N. Kumaraswami Raja

17 Two Problems 81

P. Kothandaraman

18 Agreement Markers in K. Verbals 85

R. Kothandaraman

19 Animate — Inanimate Distinction in Malayalam Cases 91

V. P. Gopinathan

20 Muslim Dialect of Tamil 95

S. Sakthivel

21 சிதைந்தன வரினும் இயைந்தன வரையார் 101

க. வா. சச்சிதானந்தம்

22 தொல்காப்பிய எழுத்தியல் 104

செ. வை. சண்முகம்

23 A Linguistic Approach to the Language and Logic of Periyar Ramaswamy 109

R. Shanmugam

24 மொழியும், மரபிலக்கணமும், மொழியியலும் 115

சு. சரோஜாமேரி

25 தினத்தந்தியின் தலைப்பிடும் உத்திகள் 120

அ. சாந்தா

26 Adjectives and Relative Participles in Tamil Folksongs 125

G. Santhi

27 Ablative Case 131

P. Sam Daniel

28 Historical study of Tamil Relative Participles — 137
H. Chithiraputhiran

29 மூன்று மீட்டுருவாக்கத்தில் ஒரு மறு பரிசிலனை — 143
வே. சிதம்பரநாதன்

30 Status Marking in the study of Linguistic Variation — 146
C. Sivashanmugam

31 Irregular verbs in Sangam Tamil — 152
C. Sivathanu

32 ஆவே எதிர்மறை — 158
ஆ. சிவலிங்கனர்

33 உடம்படுமெய் — ஓர் ஒப்பீடு — 163
தி. இரா. சின்னப்பன்

34 Pachaimalai Dialect of Tamil — 169
G. Srinivasa Varma

35 Syntactical Future Tense Expression in Tamil — 175
M. Suseela

36 Some Cryptotypes in Tamil — 181
M. A. Susila

37 Difficulties in learning Tamil by Native Speakers — 187
K. Suseela Bai

38 Teaching of Tamil Composition in Second Language Teaching situation — 192
G. Subbiah

39 Some Malayalam influence on Tamil — 197
K. Subbiah Pillai

40 Demonstratives in Se:re:r and Dravidian — 201
Souleymane Faye

41 தமிழில் ஐயவுறவுகள் — 207
சு. செயராசு நத்தானியல்

42 விரவுத்திணை — ஒரு மீள்பார்வை 213
தூ. சேதுபாண்டியன்

43 தமிழும் தெலுங்கும் 219
சோமலெ

44 Code — Mixing in Modern Tamil Literature 225
M. Gnanam

45 செய்யும் என்னும் ஏவல் வினைமுற்று 231
சுப. திண்ணப்பன்

46 தொல்காப்பியர் ஏழாம் வேற்றுமைக்குத் தந்திருப்பவை உருபுகளா, பொருள்களா ? 237
க. திலகவதி

47 தமிழின் உயிர் 242
சி. கோ. தெய்வநாயகம்

48 A Classification of Tamil Verbs on the basis of the Contextual features 248
N. Nataraja Pillai

49 'சாவ' என்னும் வினையெஞ்சு கிளவி 252
தி. நடராசன்

50 னகர மகரப் போலி: சில விளக்கங்கள் 256
கி. நாச்சிமுத்து

51 Auxiliary verbs in Kannada 262
V. G. Bhat

52 சொல்லுக்கு முதலில் வரும் எழுத்துக்கள் 267
இரா. பாலகிருஷ்ணன்

53 அமுதசாகரம் என்றொரு "நூல்" உண்டா ? 272
அ. பிச்சை

54 பேச்சுத்தமிழில் வேற்றுமையமைப்பு 278
க புஷ்பவல்லி

55 விளம்பரங்களில் குறைத் தொடர்கள் 284
தங்க மணியன்

56 இலக்கண வரலாற்றில் வினைபற்றிய கலைச்சொற்கள் 292
V. மல்லிகா

57 பாடாண் எட்டு 295
வ. சுப. மாணிக்கம்

58 செய்யா எனும் வாய்பாட்டு வினையெச்சம் 299
பெ. மாதையன்

59 The Complementizer *je* and *bole* in Bengali and *enru* in Tamil 305
K. Meenakshi

60 Style in Tamil Speech 309
P. Muthuswami Pillai

61 தொடர்புடைப் பதிலி 313
சண்முக. முருகானந்தம்

62 Experimental Techniques in Analysing speech sounds 319
K. Murugaiyan

63 யார் என்னும் வினுப்பெயர் 324
சி. மைக்கேல் சரோஜினிபாய்

64 Negatives in Old Tamil 328
D. Renganathan

65 Generic use of Determiners in Tamil 332
S. Radhakrishnan

66 Madras Fishermen Dialect of Tamil 336
Mrs. K. V. Rajakumari Varma

67 A Note on Causativization in Tamil 342
S. Rajendren

68 வினையாலணையும் பெயர் — வினையா ? பெயரா ? 346
J. K. வாஸந்தி

69 பேச்சில் விகாரங்கள் 351
திருமதி. விஜயலட்சுமி பாலகிருட்டிணன்

70 Some of the Phonological Features of Medieval Tamil (600 A, D. 900 A. D.) 356

S. Vaidyanathan

71 A Note on Completive Auxiliaries in Tulu 360

K. V. Jalajakshi

72 Reflexive Pronouns in Tamil 366

W. Jensey Beula

73 A Brief study of Co-ordination in Paniya 372

S Jean Lawrence

74 Modal Auxiliaries in Tamil 377

N. Joseph

# Conditional Participle in Old Tamil

S. Agesthialingom
Annamalai University

0. *Introduction*

In old Tamil (OT) the notion of 'condition' is expressed in two ways.

1. Syntactically by making use of expressions like *en̲in̲*, 'if it is so', *en̲il* 'if it is so', *a:yin̲* 'if it is so' etc in certain periphrastic constructions.

2. Morphologically by adding various suffixes like *-in̲*, *-il*, *-a:l*, and *-e:l* to various stems. *-in̲* and *-il* are added to the verbal stems as in

*ka:ṇkin̲* 'if sees'

*ka:ṇil* 'if sees'

and it has to be noted here that both of them are in free variation. *-a:l* is added to the stem with past markers as in

*kaṇṭa:l* 'if sees'

and *-e:l* is added to the finite verbs as in

*uṇṭe:l* 'if it is'

Tholkappiyam (TOL) in cu:tiram (CU) 713 lists *ceyin̲* pattern with other verbal participles and he does not mention

whether this is a conditional participle or not. From the way he has listed all the participles together, it seems that he does not intend to do so. His main purpose was just to list all the participles which are in construction with the verbs. But commentators like Cenavaraiyar (Cen. Cu. 228) consider this as a conditional participle and they give examples like

*maḻai peyyiṟ kuḷa niṟaiyum* 'if it rains the tank will be full'

(Cen. Cu. 228) is of the opinion that this pattern of verbal participle denotes only the future tense. This is also the stand taken by Naccinarkkiniyar (Nac. Cu. 230) and Deivaccilaiyar (Dei. Cu. 222).

The commentators like Nac (Cu. 230) had given *-um*, *-a:l*, *-e:l* and *e ṉ* as conditional markers of which *-um* seems to be highly doubtful.

1.0. *-iṉ*

Of all the markers *-iṉ* is found to be more predominant (See chart) and it is found to occur in all the OT texts.

| | | |
|---|---|---|
| *aṟiyiṉ* | 'if someone knows' | *Puṟana:ṉu:ṟu* (PR) 20-5 |
| *peṟiṉ* | 'if someone gets' | *Kuṟumtokai* (KR) 29-7 |
| *aṟiyiṉ* | 'if someone knows' | *Patiṟṟuppattu* (PT) 24-16 |
| *peṟiṉ* | 'if someone gets' | *Akana:ṉu:ṟu* (AK) 8-18 |
| *variṉ* | 'if someone comes' | *Aiṅkuṟuṉu:ṟu* (IN) 542-6 |
| *variṉ* | 'if someone comes' | *Naṟṟiṇai* (NR) 136-7 |
| *ceyyiṉ* | 'if someone does' | *Kalittokai* (KL) 73-14 |
| *aṇiyiṉ* | 'if someone dresses' | *Paripa:ṭal* (PAR) VI-26 |
| *celiṉ* | 'if someone goes' | *Pattuppa:ṭṭu* (PP) 3-269 |
| *uṇṇiṉ* | 'if someone eats' | *Thirukkuṟaḷ* (TK) 945 |
| *variṉ* | 'if someone comes' | *Cilappatika:ram* (CIL) 2-3 |
| *ve:ṇṭiṉ* | 'if someone requests' | *Maṇime:kalai* (MM) 154-7 |

In the case of strong verbs *-pp-* is generally added to the verbal roots before *-in̲* and also *-il*. However it is to be mentioned here that there are few occurrences (PR (2), IN (2), CIL (1) ) where we can find *-(k)k-*

| | | |
|---|---|---|
| *kiṭakkin̲* | if it remains | PR 332-4 |
| *karakkin̲* | if it is hidden | PR 1-8 |
| *kal̲ikkin̲* | if someone spends | IN 415-3 |
| *ke:ṭkin̲* | if someone hears | IN 81-5 |
| *mar̲ikkin̲* | if someone retires | CIL 28-160 |

2.0. *- il*

As mentioned earlier *- il* is found to be made use of in a few cases (AK-(5) NR (1) KL (4) PAR (1) TK (1) CIL (8) MM (21) as a conditional marker and it behaves exactly like *-in̲* and both of them are found to be in free variation.

| | | |
|---|---|---|
| *iruppil* | if someone remained | AK 280-10 |
| *a:kil* | if it is so | NR 350-9 |
| *eṇṇil* | if someone counts | KL 95-12 |
| *kan̲r̲iṭil* | if something grows intense | PAR VI-98 |
| *uṇil* | if someone eats | TK 922 |
| *eytil* | if someone attains | CIL 25-101 |
| *ku:r̲il* | if someone says | MM 29-189 |
| *ka:ṭṭil* | if someone shows | MM 29-444 |
| *tantaruḷil* | if someone gives | MM 6-154[1] |

Note that in PAR *-il* is used after the auxiliary *iṭu*. In MM also the auxiliary *aruḷ* is attested.

1 See also AK 149-2; 160-9; 230-9; 352-11; KL 140-13 14; 22; CIL 5-115; 7-49-3; 16-152; 200; 21-30; 26-15; 21-27; MM 14-94; 29-344; 29-369 etc.

3.0. *-a:l*

*-a:l* is also found to occur in seven of the OT texts and totally there are forty occurrences. In this connection it has to be noted that *-a:l* always occurs after various past tense markers and this is not the case with *-in̲* and *-il*.

| | | |
|---|---|---|
| *kaṇṭa:l* | if someone sees | PR 390–25 |
| *en̲r̲a:l* | if it is so | IN 248–3 |
| *el̲unta:l* | if someone proceeds | KL 118–3 |
| *maṭutta:l* | if someone joins | PAR-XX-42 |
| *kaṇṭa:l* | if someone sees | TK 1246 |
| *uraitta:l* | if someone says | CIL 11–122 |
| *po:n̲a:l* | if someone goes | MM 6-158 |

It is found to occur in PR (1), IN (1), KL (2), PAR (2), TK (15), CIL (13) and MM (6).

4.0 *-e:l*

*-e:l* is also another marker which denotes condition and it is found to occur in KL (11), TK (13), CIL (7) and MM (3) and it is generally added to various finite verbs. This might have sprung from *en̲in̲*.

| | | |
|---|---|---|
| *viṭuva:ye:l* | if you leave | KL 93–33 |
| *ceyva:n̲e:l* | if he does | TK 655 |
| *varume:l* | if it comes | CIL 17–19–2 |
| *en̲r̲iye:l* | if you ask | MM 3–73[1] |

1 See also KL 3–10; 38–13; 38–17: 38–21; 60–21; 91–81; 142–19; 144–28; 144-43; 147–50; TK 18; 308; 368; 556; 573; 577; 926; 1014; 1075; 1118; 1144; 1151; CIL 7–9–4; 7–10–4; 14–57; 19–13; 17–202; 17–21–2, MM 23-74: 23–76.

5.0 *-ka:l*

Expressions like *-ka:l*, *-kaṭai* (*vantakka:l* 'if someone comes etc are considered by many (Ramaswamy Aiyar, L V. 1938) as conditional expressions. It is true that they also denote conditional but in OT texts under analysis, these forms do not generally denote condition. However there is a solitary instance in AK where it denotes negative conditional.

*varutta:kka:l* if someone does not make suffer, AK 74–17

6.0 *Chart*

| | *-in̲* | *-il* | *-a:l* | *-e:l* | *-ka:l* |
|---|---|---|---|---|---|
| PR | 156 | ... | 1 | ... | ... |
| KR | 141 | ... | ... | ... | ... |
| PT | 41 | ... | ... | ... | ... |
| AK | 264 | 5 | ... | ... | 1 |
| IN | 97 | ... | 1 | ... | ... |
| NR | 86 | 1 | ... | ... | ... |
| KL | 136 | 4 | 2 | 11 | ... |
| PAR | 14 | 1 | 2 | ... | ... |
| PP | 56 | ... | ... | ... | ... |
| TK | 217 | 1 | 15 | 13 | ... |
| CIL | 100 | 8 | 13 | 7 | ... |
| MM | 63 | 21 | 6 | 3 | ... |

Ramaswamy Aiyar, L. V. 1938 'The morphology of Old Tamil verbs' Anthropos, 33.

# Correlation of Sex with the Speech

P. M. Ajmal Khan
Madurai Kamaraj University, Madras

1.0 Linguistic variations are correlated simultaneously with other factors in the social and cultural context. There are some important social factors viz., ethnic group or caste, sex, socio-economic status etc., that have been found to influence linguistic rules in one sociolinguistic context. This essay explains the correlation of sex with the speech.

2.0 In Sakkiliyankulam *kaḷḷars* Tamil Dialect (Madurai District) some of the linguistic variations are correlated on the basis of the sex with the identity of the person spoken to and the identity of the person speaking. A good example for establishing the correlation of the sex with the speech is the interjections found in *kaḷḷars* dialect.

2.1 Men and Women of Sakkiliyankulam *kaḷḷars* use different forms of interjections to express the same feelings. For instance, let us take the interjections expressing relief or relax.

2.1.1 Mostly, after having indulged in hard works or after finishing a conceived action, when one relaxes, some interjections are used to indicate that the person is relieved from the work. For this type of expression Sakkiliyankulam

*kaḷḷars* use distinct interjections according to the masculine and feminine gender distinctions.

*appa:ṭa:* 'an exclamation of relief'

*amma:ṭi* 'an exclamation of relief'

The first one is used by men and the second interjection by women. But the interfection *appa:ṭi* 'an exclamation of relief' is used by both men and women to express the feeling of relief or relax.

2.1.1.1. All these three interjections are kinship terms joined with the suffixes of masculine gender and feminine gender.

*appa:* + *ṭa:* > *appa:ṭa:*

*amma:* + *ṭi* > *amma:ṭi*

*appa:* + *ṭi* > *appa:ṭi*

Among these interjections, in the case of first one the form '*appa:*' and the gender suffix -*ṭa:* refer to masculine gender and hence the interjection '*appa:ṭa:*' is used only by men. In the same manner the form '*amma:*' and the suffix -*ṭi* found in '*amma:ṭi*' refer to the feminine gender, and hence this interjection is used only by women. But in the interjection '*appa:ṭi*' the form '*appa:*' refers to the masculine gender and the gender suffix -*ṭi* refers to the feminine gender and hence this interjection formed by the combination of these two different gender forms is used by both men and women.

2.1.2. The another example is the interjections expressing surprise. In the course of conversation, if the speaker's information is surprising or when one sees a surprising event, this type of interjections are used.

*appe*! 'oh'

*a:tta:ṭi*! 'oh'

Of these two interjections of expressing surprise, the first one is used by men and the second one is used only by women. In this dialect the word 'appe' is also used as an address term to refer to a male. Perhaps this may be the reason for the usage of this interjection by men. We can take the interjection '*a:tta:ṭi*' as the form derived from the kinship term *a:tta:* 'mother' by adding the feminine gender suffix - *ṭi*.

*a:tta:* + *ṭi* > *a:tt:ṭi*

As the word '*a:tta:*' is a kinship term referring to feminine gender, the interjection derived from this word is also used only by women.

2.2 Similarly the form *enna:ṇke* 'look here please' is used as a vocative form in Sakkiliyankulam *Kaḷḷar* Tamil. Though men and women are using this form, a man can use this only while addressing another man of higher social or economic status.

| addresser | addressee |
|---|---|
| *enna:ṇke* | 'look here please' |
| (male) | ± kinship ± affection ± intimacy |
| | + social or economic status. |

Though it is common to both sexes a man can never use this vocative form to address a woman of any higher status. In such circumstances a man can use the following vocative form.

| | |
|---|---|
| *enna: mma*; | 'look here please' |
| | + social or economic status |
| | — Kinship ± affection – intimacy |
| | + female. |

Similarly a woman can use the vocative from '*enna:ṅke*' only to address her husband. She never uses this at any other situation to address another man or woman. The usage of different suffixes according to their gender distiction is also familiar example for the correlation of sex with the speech.

3.0 Therefore let us conclude that in Sakkiliyankulam *Kaḷḷar* Tamil, the masculine and feminine gender distinctions which are found used unconsciously in all the levels of the linguistic structure simply reflect the society's deep involment in the distinction of men and women. Sociolinguistic analysis supports this view strongly.

# Traditional Concept of Nominative Case in Tamil

V. S. Arul Raj
Annamalai University

The cases in Tamil are traditionally considered to be eight in number. Generally there are two kinds of definition for case. One of the definitions is as follows. "Case means the distinguishing of the capacities of the nouns in a sentence". The other definition is "case means the expression of the different relationships that may obtain between noun and verb". The purpose of this paper is to bring out the different views of the Tamil grammarians about Nominative case For this purpose I have referred the following books. *Tolka:ppiyam*, *vi:raco:ḻiyam*, *Ne:mina:tam*, *Nan̲n̲u:l*, *Ilakkaṇaviḷakkam*, *Ilakkaṇakkottu*, *Pirayo:kavive:kam*, *Ton̲n̲u:lviḷakkam*, *Muttuvi:riyam* and *Swa:mina:tam*.

*Ce:n̲a:varaiyar* says Nominative is that which does not address anyone nor take any case-sign. Except *vi:raco:ḻiyam*, *Ilakkaṇakkottu* and *Pirayo:kavive:kam* all the other grammarians say that the Nominative case has no marker and said that the nominal base itself gives the Nominative sense. *Vi:raco:ḻiyam* gives the following markers.

*-cu -ar -a:r -a:rkaḷ*

*-a:rkaḷ -kaḷ -ma:r.*

*Vi:raco:ḻiyam* author says that *-cu* will occur in singular alone. In the neuter plural *-cu* or *-kaḷ* occurs. In all the other places *-cu* is lost. The other six markers occur in the epicine plural and also in the masculine and feminine plural.

According to *Ilakkaṇakkottu* author the case markers for nominative are thus of three kinds.

1. the alternation of the word itself, as *taṉ* becoming *ta:ṉ* etc.
2. suffixes as in *iṟaivaṉ* etc.
3. *a:yavaṉ a:ṉavaṉ a:va:ṉ a:kiṉṟavaṉ* etc.

According to the author of *pirayo:kavive:kam* the following markers are considered to be the Nominative case.

*-aṉ -ar -a:ḷ -a:r -kaḷ*

It also refers to *vaṉai, varai, varo:ṭu, vaṉku, varkku, vaṉiṉ, variṉ, varatu, vaṉkaṇ, vaṟkaṇ* as case markers.

*Tolka:ppiyam* S 550 and *Ne:mina:tam* S. 16 enumerate the types of predicate which the subjects take. They are as follows.

1. Verbs denoting Existence of things. Ex. *a: uṇṭu.*
2. Optative verbs. Ex. *a: celka.*
3. Verbs expressing the action in the Past, Present and Future. Ex. *a: kiṭantatu.*
4. Interrogative words Ex. *a: ya:tu.*
5. Words denoting quality. Ex. *a: karitu.*
6. Noun. Ex. *a: pala.*

*Vi:raco:l̲iyam* S. 40 speaks of Five kinds of Agent.

1. *ka:raṇak karutta:* Ex. *ca:ttan̲ kor̲r̲an̲ai añcuvitta:n̲*
2. *ta:n̲ teri karutta:* Ex. *ca:ttan̲a:l er̲iyappaṭṭatu kal.*
3. *ta:n̲ teriya:k karutta:* Ex. *te:vatattan̲ co:r̲r̲ai aṭukin̲r̲a:n̲.*
4. *karumak karutta:* Ex. *nan̲maiyaic ca:ttan̲ veḷippaṭuttin̲a:n̲*
5. *talaimaik karutta:* Ex. *ca:ttan̲ uṇṭa:n̲*

*Nan̲n̲u:l* S. 295 states that the predicate for the first case may be a verb, noun or an interrogative. Examples are given below.

| | |
|---|---|
| *Ca:ttan̲ vanta:n̲* | [verb takes predicate] |
| *Ca:ttan̲ ivan̲* | [Noun takes predicate] |
| *avan̲ ya:r* | [Interrogative takes predicate] |

*Ilakkaṇaviḷakkam* s. 198 says that in some cases the Nominative case is not explicitly seen. For instance,

*Karuvu:rukku cella:yo: catta:*
gives the answer
Celval.

Here the Agent *na:n̲* is not explicitly seen.

Regarding Nominative case, *Ilakkaṇakkottu* gives the following types of Agent.

1. Objects as Agent:- [Intransitive]
   Ex. *in̲n̲a: ta:me: varum.*
2. Objects as Agent:- [transitive]
   Ex. *tiṇṇai mel̲ukir̲r̲u.*

3. Cause Agent:- Ex. *ka:ṟṟu paḻam utirttatu.*

4. Voluntary Agent:- Ex. *Ca:ttaṉ uṇṭa:ṉ*

5. Implicit Agent:- Ex. *ma:ṭam ceyappaṭṭatu.*

6. Confusing Agent:- Ex. *otta kiḻavaṉum kiḻattiyum ka:ṇpa.*

7. verbal Noun Agent:- Ex. *kolla:mai aṟaviṉai ella:m tarum.*

In s. 26 it gives three types of Agent.

1. *karuvi karutta:* Ex. *kaṇ ka:ṇum*

2. *iṭam karutta:* Ex. *tu:ṇ po:tikaiyait toṭṭatu.*

3. *koḷvo:ṉ karutta:* Ex. *irappavar eṉ peṟiṉuṅ koḷvar.*

It also says in s. 27 that one action may result from 2 Agents.

Ex. *ta:y makavukku u:ṭṭiṉa:ḷ.*

In S. 28 it says that the Agents may be

1. *e:vutal viṉaimutal* (Commanding Agent)

   Ex. *aracaṉ te:r ceyta:ṉ.*

2. *iyaṟṟutal viṉaimutal* (Executing Agent)

   Ex. *taccaṉ te:r ceyta:ṉ.*

3. *ivaṟṟiṉ ve:ṟa:m viṉaimutal* (The Agent which is neither commanding nor Executing).

   Ex. *ca:ttaṉ uṟaṅkiṉa:ṉ.*

*Pirayo:kavive:kam* S. 11 speaks of the varieties of Agent.

1. *apikita karutta:* 2. *anapikita karutta:*

*apikita karutta:* is of three types.

1. *karumak karutta:* Ex. *ku:rai ve:yntatu.*

2. *cutantira karutta:* Ex. *te:vatattan co:rrai atta:n*

3. *e:tu karutta* Ex. *a:ca:riyan ma:na:kkanai arivitta:n*

*anapikita karutta:* is of two types.

1. *pa:va karutta:* Ex. *ko:ral piravinai ella:m tarum*

2. *tatuma:ri nirral* Ex. *otta kilavanum kilattiyum ka:npa*

*Tonnu:l vilakkam* shows *vinaimutal, karutta:* and *ceypavan* are Synonyms. Here also it says that the Nominative case takes verbs, nouns and interrogatives as its predicate. Examples are same as in *Nannu:l.*

*Muttuvi:riyam* S. 510 gives that some of the nouns will not take the other case markers except the Nominative sense. They are *ni:yir, ni:vir* and *na:n.* It gives the meanings of the Nominative case are as follows.

1. *viyanko:l* Ex. *a: va:lka.*

2. *vinainilai* Ex. *a: vantatu.*

3. *vina:* Ex. *a: ya:tu.*

4. *peyar* Ex. *a: kanru.*

5. *panpu* Ex. *a: karitu.*

*Swa:mina:tam* follows mainly *ilakkanakkottu.* It states that the Agent will take verbs as well as nouns as its predicate. Examples are given below.

*avan vanta:n* (Agent takes verb as its predicate)

*ca:ttan nanpan* (Agent takes noun as its predicate)

| S. No. | Texts | Nominative Case Markers |
|---|---|---|
| 1 | *Tolka:ppiyam* | ø |
| 2 | *Vi:raco:ḻiyam* | *–cu -ar –a:r –arkaḷ –a:rkaḷ –kaḷ –ma:r* |
| 3 | *Ne:mina:tam* | ø |
| 4 | *Naṉṉu:l* | ø |
| 5 | *Ilakkaṇaviḷakkam* | ø |
| 6 | *Ilakkaṇakkottu* | *a:yavaṉ, a:ṉavaṉ, a:kiṉṟavaṉ, a:va:ṉ etc.* |
| 7 | *Pirayo:kavive:kam* | *–aṉ –ar -a:ḷ –a:r -kaḷ* |
| 8 | *Toṉṉ:l viḷakkam* | ø |
| 9 | *Muttuvi:riyam* | ø |
| 10 | *Swa:mina:tam* | ø |

# வினைப் பண்புப் பெயர்

ஏ. ஆதித்தன்
காமராஜ் பல்கலைக் கழகம், மதுரை

பெயர்களைத் தொடரியல் நிலையில் வினையடை, வினையெச்சம் ஆகியவற்றை ஏற்று வரும் பெயர்களெனவும், பெயரெச்சம், பெயரடை ஆகியவற்றை ஏற்றுவரும் பெயர்களெனவும் இருவகையாகப் பகுப்பர் அறிஞர். இவற்றில் வினையடை வினையெச்சம் ஆகியவற்றை ஏற்றுவரும் பெயர்கள் வினையாலணையும் பெயரும் தொழிற்பெயருமாகும். அமைப்பு நிலையில் இவ்விரு பெயர்களையும் பால்காட்டும் ஈறுகளை அடிப்படையாகக் கொண்டு வேறுபடுத்திக் காட்டுவர் இலக்கண அறிஞர். இம்முறையில் அனைத்து வினையாலணையும் பெயர்களையும் தொழிற் பெயர்களையும் வேறுபடுத்துதல் இயலாத ஒன்றாகும். என்னவோ வெனின் அஃறிணை ஒன்றன்பால், அஃறிணைப் பலவின்பால் வினையாலணையும் பெயரின் அமைப்பினைக் கொண்ட தொழிற் பெயரும் காணக்கிடைக்கின்றன. (செய்வது – நற்றிணை : 27, பிறழ்வன – களவழி : 33)

மாற்றிலக்கண மொழியியலார் 'செய்வது' எனும் அமைப்பில் வரும் இறுதி '– (அ)து' என்னும் பகுதியின் antecedent 'செய் –' என்னும் வினையாக அமையுமாயின் 'செய்வது' அமைப்பினைத் தொழிற்பெயரெனவும், அதுவல்லாது இவ்விறுதி '– (அ)து' என்னும் பகுதியின் antecedent தொடரின் எழுவாயாக அமையுமாயின் 'செய்வது' அமைப்பினை வினையாலணையும் பெயரெனவும் விளக்கம் தந்து ஒரே வடிவத்தினைக் கொண்ட தொழிற்பெயரையும் வினையாலணையும் பெயரையும் வேறுபடுத்திக் காட்டுவர்.

இன்னமும் புதை வடிவத்தினைச் சுட்டும் பான்மையில் வினையாலணையும் பெயர்களைப் பெயரெச்சத் தொடரின் சுருங்கிய வடிவமாகவும் கொள்வர். ஆனால் எல்லோராலும் தொழிற்பெயர்களாக ஏற்றுக் கொள்ளப்பட்ட 'வந்தமை' 'சென்றமை' போன்ற வடிவங்கள் மேலே காட்டப்பெற்ற இலக்கணத்தினின்றும் முரண்பட்டுக் காணப்படுகின்றன. இத்தகு வடிவங்களை ஆய்வதே இக் கட்டுரை.

'வந்தமை' என்னும் அமைப்பில் வரும் இறுதி '-மை' எனும் பகுதியின் antecedent 'வந்த் –' எனும் வினையாகவே அமைகின்றது. எனவே இதனைத் தொழிற்பெயராகக் கருதலாம். இன்னமும் பெயரெச்சத் தொடரின் சுருங்கிய வடிவமே வினையாலணையும் பெயரெனக் கொண்டால் 'வந்த தன்மை' என்ற பெயரெச்சத்தொடரின் சுருங்கிய வடிவமாகிய இவ் 'வந்தமைப் என்ற வடிவத்தினை வினையாலணையும் பெயராகவும் கொள்ளலாம். எனவே 'வந்தமை' என்ற வடிவம் தொழிற்பெயரா அன்றி வினையாலணையும் பெயரா என்பது ஆய்வுக்குரிய ஒன்றாக அமைகின்றது. மரபு நிலையில் இத்தன்மையாய வடிவங்களை '– மை' யீற்றுத் தொழிற் பெயராகக் கொண்டுள்ளோம். ஆயின் இம் '- மை' யீற்று வடிவம் வினையாலணையும் பெயராகச் செயல்படுவதனைக் கீழ்க்கணக்கு நூற்களில் ஒன்றாகிய முதுமொழிக் காஞ்சியில் காணமுடிகின்றது. (செய்யாமை; முதுமொழிக்காஞ்சி, 35:1)

தொழிற்பெயரையும், வினையாலணையும் பெயரையும் பொருண்மைநிலையில் எளிதாகப் பிரித்தறிதல் இயலும். தொழிற் பெயர் என்பது தொழில் நிகழ்வாகிய வினை (doing of an action தொடரில் பெயராகச் (noun) செயல்படுவதாகும். இந்நிலையில் வினையடி என்று கருதப்படுபவைகளிலிருந்து தோன்றி தொழில் நிகழ்வினைச் சுட்டும் எந்த அமைப்பும் தொழிற்பெயராகச் செயல் படலாம். வினை ஒன்றற்கு உரித்தாகி, அவ்வாறு உரித்தாகி வரும் பெயர் வினையினை அணைந்து வருவதே வினையாலணையும் பெயரெனப்படும்.

தொழிற்பெயர், வினையாலணையும்பெயர் என்ற இரண்டினது பொருளணுக்களை (semantic atoms) ஈண்டுக் குறிப்பிடுதும்.

| தொழிற்பெயர் | | வினையாலணையும் பெயர் | |
|---|---|---|---|
| + | தொழில் | + | தொழில் |
| ∓ | எதிர்மறை | ∓ | எதிர்மறை |
| + | காரணம் | + | காரணம் |
| — | காலம் | + | காலம் |
| — | கருத்தா | + | கருத்தா |
| — | உரித்தாகும் நிலை | + | உரித்தாகும் நிலை |
| — | (திடப்) பொருள் நிலை | + | (திடப்) பொருள் நிலை |
| + | வினை நிலை | + | பெயர் நிலை |
| + | நிகழ் நிலை | — | நிகழ் நிலை |

'வந்தமை' என்ற வடிவம் 'வந்த தன்மை' என்ற பொருண்மையில் செயல்பட்டு தொழிற்பெயர், வினையாலணையும் பெயர் ஆகியவற்றினின்று வேறுபட்டு நிற்றலை அறிகுதும். தொழிற்பெயர் தொழில் நிகழ்வினை மட்டும் சுட்டிநிற்கின்றது. ஆனால் 'வந்தமை' என்ற வடிவம் தொழில் நிகழ்வோடு வேறுசில பண்புகளையும் சுட்டி நிற்றலைக் காண்குதும். இப்பண்புகளே இவ்வடிவத்தினைத் தொழிற்பெயரினின்றும் வேறுபடுத்துவதற்கு அடிப்படையாக அமைகின்றன. இவ்வடிவம் தொழில் நிகழ்வினை மட்டுமே சுட்டிநின்று தொழிற்பெயராகச் செயலாற்றும் இடனும் உண்டு. பெரும்பான்மையும் இவ்வடிவம் எதிர்மறைப் பொருண்மையில்தான் தொழிற்பெயராகச் செயல்படுகின்றது.

'அவள் நடந்து வந்தமை இனிது'. இத்தொடரில் வரும் 'வந்தமை' என்ற வடிவம் தொழில் நிகழ்வோடு தொழில் நிகழ்வின் பண்பு, தொழில் நிகழ்வின் முறைமை, தொழில் நிகழ்வின் நிறைவு நிலை என்ற மூன்று பண்புகளையும் தன்னகத்தே கொண்டு தொழிற்பெயரினின்றும் வேறுபட்டு நிற்கின்றது. இவ்வமைப்பு சில பண்புகளில் தொழிற்பெயர்களினின்று வேறுபட்டும் பல பண்புகளில் வினையாலணையும் பெயர்களினின்றும் வேறுபட்டு நிற்றலையும் அறிகின்றோம்.

ஈண்டு 'வந்தமை' என்ற வடிவத்தின் பொருளணுக்களைக் குறிப்பிடுதும்.

வந்தமை

+ தொழில்

+ காலம்

+ காரணம்

∓ எதிர்மறை

— கருத்தா

+ உரித்தாம் நிலை

+ பெயர் நிலை

+ முறைமை

+ நிகழ்வு நிலைப் பண்பு

+ நிறைவு நிலை

இவ்வாறு தொழிற்பெயர், வினையாலணையும் பெயரினின்றும் வேறுபட்டு தொழில் நிகழ்வின் பண்பினைச் சுட்டி நிற்கும் பெயர் களை ஈண்டு வினைப்பண்புப் பெயர் (verbal qualitatives) எனக் குறிப்பிடுதும். ஆகவே வினையடை, வினையெச்சம் ஆகியவற்றை ஏற்றுவரும் பெயர்களைத் தொழிற்பெயர், வினையாலணையும் பெயர் என்பனவற்றோடு வினைப்பண்புப் பெயரினையும் சேர்த்து மூன்றாகக் கொள்ளலாம்.

துணைநூற் பட்டியல்

அண்ணாமலை, இ., 'தமிழில் வினையாலணையும் பெயர்', திராவிட மொழியியல் மூன்றாவது கருத்தரங்கு, (1972), பக் – 93–122.

ஆதித்தன், ஏ., 'வினையாலணையும் பெயரா? தொழிற் பெயரா?' தமிழ்ப்பொழில், 51; 586 (1977), பக். 153–154.

இசரயேல், மோ., 'தொல்காப்பியத்தில் தொழிற்பெயர்'. தென்மொழி, 2(1961), பக். 35–38.

இசரயேல், மோ., 'வினையாலணையும் பெயர்', தமிழ்ப் பொழில், 39(1964), பக். 300-304.

முத்துச்சண்முகன், 'வினையாலணையும் பெயர்', இக் காலத்தமிழ், பக். 125-136, மதுரை, 1967,

# தமிழில் உகரச் சுட்டு

மோ. இசரயேல்
மதுரை காமராசர் பல்கலைக் கழகம் மதுரை

## முன்னுரை

தமிழ்மொழியில் மரபுவழியில் வந்த சுட்டுக்களில் உகரமும் ஒன்று. இது இன்றைய மொழியில் வழக்கிறந்துவிட்டது. உகரச் சுட்டு தொல்காப்பியத்தில் பல இடங்களில் சுட்டப்படுதலும் அன்றி, சங்க இலக்கியங்களிலும், பதினெண்கீழ்க்கணக்கு, இரட்டைக் காப்பியங்கள் போன்ற சங்கம் மருவிய கால நூற்களிலும், நாலாயிர திவ்யப் பிரபந்தம், திருக்கோவையார், சீவகசிந்தாமணி, கந்தபுராணம், சேதுபுராணம் போன்ற பிற்கால இலக்கியங்களிலும் ஓரளவு ஆட்சி பெற்றுள்ளது. உகரச் சுட்டிற்கு இதுகாறும் கொள்ளப்பட்டு வருகின்ற பொருளைச் சுட்டிக்காட்டி, அதன் உண்மைப் பொருளை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

## உகரத்தின் பொருள்

இன்று பலர் இகரம் அண்மையினையும், அகரம் சேய்மையினையும், உகரம் இரண்டிற்கும் இடைப்பட்ட நடுவிடத்தினையும் சுட்டுகின்றனவாகக் கருதுகின்றனர். இலக்கியங்களில் உகரச்சுட்டு பெரும்பாலும் நடுவிடம், சிலவிடங்களில் மேலிடம், ஒரோவிடங்களில் அப்பால் உள்ள இடம் ஆகியவற்றைச் சுட்டுவதாகப் பொருள் கூறப்படுகின்றது. இகரமும் அகரமும் இன்றைய மொழியிலும் ஆட்சி பெற்றுள்ளன. உகரத்திற்கு உரையாசிரியர்கள் தரும் விளக்கமும் பல அறிஞர்கள் தரும் கருத்துக்களும், பழந்

தமிழ் இலக்கியங்களையும் உகரச்சுட்டின் பிற திராவிடமொழி வழக்குகளையும் கூர்ந்து நோக்கி ஆயுங்கால் ஏற்புடையனவாக அமையவில்லை.

## உகரச்சுட்டின் வழக்கு

### தொல்காப்பியம்

தொல்காப்பியனுர் உகரச் சுட்டிற்குப் பொருள் சுட்டவில்லை. அவர்,

'அஇ உ அம் மூன்றும் சுட்டு' (தொ. எ. 31)

என்கிருர். மேலும் அவர் உகர ஈற்றுப் புணர்ச்சிக்கண் இச் சுட்டும் புணர்ச்சி பற்றிக் குறிப்பிடுகின்ருர் (தொ. எ. 255-257); சொல்லதிகாரத்தில் உவன், உவள், உவர் (தொ. சொ. 192), உது, உவை, உவ் (தொ. சொ. 197) போன்ற சொற்களையும் தந்து உள்ளார். தொல்காப்பிய உரையாசிரியர்கள் சுட்டு முதலாகிய இகர இறுதி (தொ. எ. 159) உதோளி என்ற சொல்லையும், 'சுட்டுச்சினை நீடிய ஐயென் இறுதி' (தொ. எ. 159) என்பதற்கு ஊண்டை, ஊங்கவை போன்ற சொற்களையும், சுட்டு முதல் உகரம் அன்ஞேடு சிவணுதற்கு (தொ. எ. 176) உதன் என்ற வடிவத்தையும் ஐகார ஈற்று உகரப்புணர்ச்சிக்கு (தொ. எ. 177, 183, 263, 281) உவற்றை என்பதையும், சுட்டு முதலாகிய வகர இறுதிச் சொற்கள் (தொ. எ. 378-381) புணர்தல் பற்றிக் கூறுங் கால் உஃகடியது, உஞ்ஞாண், உவ்யாது போன்ற எடுத்துக்காட்டுக் களையும், சுட்டுச்சினை நீடிய மென்ருெடர் மொழியின்கண் (தொ. எ. 427, 429) ஊங்கு என்ற சொல்லையும் தருகின்றனர்.

### சங்க இலக்கியம்

சங்ககாலத்தில் எட்டுத்தொகையில் இச்சுட்டடியாகப் பிறந்த உம்பர், ஊங்கு, உதுக்காண், உவக்காண், உது, ஊங்கண், ஊங்கணோர், உவன், உவள், உவ், உப்பால், உம்மை போன்ற சொற்கள் மட்டுமே ஆட்சிபெற்றுள்ளன. உம்பர் என்னும் சொல் நன்னுட்டும்பர் (அகம். 113.17; 311.12; 386.16; 393.19; குறு. 11.6), வேங்கடத்தும்பர் (அகம். 209.9; 211; 213.3). குன்றத்

தும்பர் (அகம். 215.1), ஊணூர் உம்பர் (அகம். 227.18), ஏழிலும்பர் (குறு. 138.1) என்னுமிடத்தில் அப்பால் – சேய்மையில் உள்ள (கண்ணுக்கு எட்டாத) இடங்களையும் முன்னுள் உம்பர் (நற். 198.3) என்னும் .இடத்தில் கடந்த காலத்தையும், உம்பர் (ஐங். 401.5) என்னும் இடத்தில் தேவருலகத்தையும் சுட்டுகின்றது. ஊங்கு என்னும் சொல் காண வூங்கே (நற். 101.9; 160 10; 199.11; குறு. 352.6; புறம். 88.6; 141.7), மணவா வூங்கே (குறு. 357.8), தணவாவூங்கே (குறு.386.6) உணரா வூங்கே (குறு. 297.7). இல்லா வூங்கே (நற். 145.5) என்னுமிடங்களில் கழிந்தது போயது – முன்பு என்ற பொருளிலும், நகர் வூங்கே (நற். 135·9), ஈங்கு ஊங்கு (பரி. 4.5) இருங்கடல் ஊங்கு (பரி. 16.27), பரவா ஊங்கே (பதிற். 29.15) என்னும் இடங்களில் சேய்மை இடம் என்ற பொருளிலும் ஆட்சி பெற்றுள்ளது. உது (குறு 179.3; நற். 963; 415.2) சேய்மையான அன்றேல் காண இயலாத இடத்தைக் குறிப்பதாக உள்ளது.

ஊங்கண் ( நற். 246. 1 ) சேய்மையான மூன்றும் இடத்தை யும், ஊங்கணோர் (புறம். 39.6) முன்னுள்ளோர்—மறைந்தோரை யும் குறிக்கின்றது. பரிபாடலில் உவன் ( பரி. 11.12 ) உவள் ( பரி. 12.55 ) உவ் ( பரி 2. 58, 59 ) என்பவையும் மூன்றும் நிலை யிலுள்ள ஆள் அல்லது இடத்தைக் குறிப்பனவாக உள்ளன. உப்பால் ( பரி. 11.8 ) மேலிடத்தையும், உம்மை ( புறம். 236.10 ) மறுமையையும் குறிப்பனவாக உள்ளன.

**உதுக்காண்:, உவக்காண்:**

எட்டுத்தொகை நூற்களில் உதுக்காண் என்ற தொடர் 16 இடங்களிலும் உவக்காண் 6 இடங்களிலும் ஆட்சி பெற்றுள்ளன- உதுக்காண் என்பது ஓரிடத்தில் உதுவக்காண் ( அகம். 330.11 ) என்ற வடிவில் உள்ளது.

இத்தொடர்களில் உது என்னும்சொல் தேர் ( அகம். 380.9 ) வான் ( நற். 387.9 ) பொழுது ( அகம். 204:8 ), புலவிநிலை (குறு. 191.1), உழி (= அப்பொழுது, கலி. 144.32), கருவி (= மேகம், நற். 329.9), குறுஞ்சுனை (கலி. 108.39), சிறுநல்லூர் (குறு.

81.4), பிரிய ஓர்பிழிபு (நிகழ்ச்சி, ஐங். 101.1), கார் (ஐங். 453.2), தேர் (ஐங். 453.4) போதல் (புறம். 210.12), படர்தந்தோன் (புறம். 301.11), எந்தை (புறம். 307.3), பெருந்தகுநிலை(நற். 21.5), தேர் (அகம். 330.11) ஆகியவற்றையும், உவ என்னும் சொல் சிறுநல்லூர் (அகம். 350. 15), நளிசுடர் (அகம். 114.8), சுவண் (= சேய்மை, குறு. 367.3). மாரிக்குளத்துக் காப்பாளன் (ஐங். 206.1), குன்று (ஐங். 207.2), குறும்பொறைநாடன் (அகம். 4.13) ஆகியவற்றையும் சுட்டுவனவாகச் சங்க இலக்கியத்தில் காணப் படுகின்றன. இவ்விடங்களில் எல்லாம் இவை மிகச் சேய்மையான அல்லது கடந்து போன ஓரிடத்தை, ஒருகாட்சியை அல்லது பொழுதை அன்றேல் ஒருவனைச் சுட்டுவனவாகவே உள்ளன.

உதுக்காண் தெய்ய உள்ளல் வேண்டும்
நிலவும் இருளும் போலப் புலவுத்திரை
கடலும் கானலும் தோன்றும்
மடல்தாழ் பெண்ணையெந் சிறுநல்லூரே (குறு. 84. 1-4)

உவக்காண் தோன்றுமெஞ் சிறுநல்லூரே (அகம். 350. 15)

இவண் உதுக்காண், உவக்காண் என்னும் இருதொடர்களும் சிறுநல்லூரைச் சுட்டுவனவாக அமைகின்றன. இவற்றையும் பிற வழக்குகளையும் ஆயுங்கால் இவை தம்முள் பொருள் வேறுபாடு உடையன அல்ல எனத் தோன்றுகிறது.

எனவே சங்க இலக்கிய வழக்குகளின் அடிப்படையில் உகரச் சுட்டு பெரும்பாலும் மூன்றும் நிலையிலுள்ள அதாவது அகரத்திற்கும் அப்பாற்பட்ட சேய்மையிடத்தைக் குறிப்பிடவும் இறந்தகால நிகழ்ச்சியை எண்ணிப் பார்க்கின்ற நிலையினை விளக்கவும், அப்போதைய நிலையில் காண முடியாத ஒருபொருளை (இடத்தை) அன்றேல் ஆளைக் குறித்துச் சுட்டவும், நடந்து அனுபவித்த இறந்தகால நிகழ்ச்சியைக் கூறவும், ஒரேவிடங்களில் விளக்க முடியாத - கண்ணுக்கு எட்டாத மேலுலகத்தைச் சுட்டவும் பயன் பட்டது என அறியலாம். எனவே, உகரச்சுட்டு இடம், காலம் ஆகியவற்றின் அகரச்சுட்டு சுட்டுதற்கப்பாற்பட்ட சேய்மையைச் சுட்டவே வழங்கிற்று எனலாம்.

பிற்கால இலக்கியங்கள்

உகரச் சுட்டடியாகப் பிறந்த சொற்கள் பலவும் பிற்கால இலக்கியங்களில் மிகச்சேய்மையில் உள்ள - கண்ணுக்கெட்டாத விண்ணுலகத் தொடர்பானவற்றைக் குறிக்கப் பெரும்பாலும் பயன்படலாயிற்று. எனவே, உகரச்சுட்டு காலப்போக்கில் சமயக் கருத்தை உணர்த்துவதாக - சமயச் சார்புடையதாக ஆட்சி பெற்று சமயச்சார்புப் பொருளை ஓரளவு ஏற்றுக்கொண்டது எனலாம். எ-டு. உம்மை (மறுமை), உம்பர் (மேலுகம், தேவர்), உம்பரான் (தேவர்), உப்பால் (மேல் உலகம்). இத்தகைய சமயக் சார்பு வழக்கிற்கு அடிப்படை பரிபாடலில் அமைந்துவிட்டது என்று எண்ண வாய்ப்பு உள்ளது.

உம்மை வினைவந் துருத்த லொழியாது (மணி. 26.32)

எம்மை இகழ்ந்த வினைப்பயத்தால் உம்மை
எரிவாய் நிரயத்து வீழ்வர் கொல் (நாலடி. 58, 2, 3)

உம்மையே என்பார் ஓரார் காண் (திணைமாலைநூற். 123.2)

உம்ப ருறையு மொளிகிளர்வானூர் படும் (பரி. 11.70)

வாய்வாய் மீபோய் உம்பர் இமைபிறப்ப (பரி. 17.31)

ஆறைங் காத நம்மனுட் டும்பர் (சிலம். 10.42)

உம்ப ரில்வழி யிம்பரில் பல்பிறப்பு (மணி. 26.38)

உம்பர்க் கிடந்து உண்ணப் படும் (நாலடி. 37.4)

உம்பர் உறைவான் பதி (நாலடி. 137.4)

ஒலிகடல் சூழு லகாளு மும்பர் தாமே (திவ். பெரியதிருமொ. 7.8.10)

யான் வருந்தி யும்பரிழைத்த நூல்வலயம் (பெரியபு. கோச் செங். 5)

இல்லத் துணைக்குப் பால்எய்த இறையவள் (பரி. 11.8)

உப்பா லுயர்ந்த வுலகம் புகும் (நான்மணி. 27)

இவண் உம்மை மறுமையையும், உம்பர் பெரும்பாலும் தேவர் அன்றேல் தேவருலகத்தையும், உப்பால் விண்ணுலகத்தையும் குறித்து வழங்குதல் காண்க மேலும் உவன் (சீவ. 28.5), மேலுலகத்தையும், உங்ஙனம் (கந்தபு. தக்கன். மக 52), விண்ணுலகத்தையும், உம்பர்கோன் இறையவர் தலைவனையும் (திவ். பெரியதிருமொ. 5.4.5), உம்பரர் (சீவ. 16.78) உம்பரான் (கந்தபு. மாயை. 33) ஆகியன இறையவனையும் குறித்து வழங்குகின்றன. உங்ஙன் (திருக்கோ. 16) உவ்வாறு என்ற பொருளிலும், ஊங்கண் (சேதுபு. அக்கினி. 32) உவ்விடம் (சேய்மையிடம்) என்ற பொருளிலும் அமைகின்றன.

முடிவுரை

எனவே உகரச்சுட்டு நடுவிடத்தைச் சுட்டவில்லை எனவும், அது அகரத்திற்கும் அப்பாற்பட்ட சேய்மையை-மூன்ரும் நிலையான சேய்மையைச் சுட்டப் பயன்பட்டது எனவும் காணுதற்கியலாத இறந்தகால நிகழ்ச்சி சேய்மையான இடம் கடந்தகால எண்ணங்கள் ஆகியவற்றையும் சுட்ட வழங்கியது எனவும், காலப்போக்கில் கண்ணுக்கு எட்டாத இறைவனையும் விண்ணுலகத்தைச் சுட்ட மிகுதியும் பயன்படுத்தப்பட்டு, சமயத்தொடர்பான சொல்லாக மிகுதியும் ஆட்சிபெற்று விட்டது எனவும் அறிகின்ரேம்.

இலங்கைத் தமிழில் இச்சுட்டு இன்று ஆட்சி பெற்றுள்ளது. அங்கு இது மூன்ருவது ஆளை / பொருளைச் சுட்டப் பயன்படுத்தப் படுகிறது. சுட்டப்படுகின்றது அண்மையிலும் சேய்மையிலும் இருக்கலாம்; அல்லது அது பற்றிய செய்தி உரையாடலில் இடம் பெறலாம். இங்கும் உகரம் நடுவிடத்தைச் சுட்டவில்லை; ஆனல் மூன்ரும் நிலையினதைச் சுட்டப்பயன்படுகிறது என்பது குறிப்பிடத் தக்கது.

# செயப்பாட்டு வினையா?

ஜி. இந்திராபாய் ஜாதவ்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை

முகப்பு:

செயப்பாட்டு வினை, பல்வேறு வினைவடிவங்களுள் ஒன்றாகும். 'பட்ட' என்றமையும் வடிவம் இதனைத் தெரிவிக்கும் உருபனாகும். நீல. பத்மநாபன் மொழியில் கையாளப்படும் இவ்வடிவம் செயப்பாட்டு வினைப் பொருளிலேயே அமைந்து வருகிறதா என்று காணலே இவ் ஆய்வின் நோக்கம்,

செயப்பாட்டு வினைத்தோற்றம்:

திராவிட மொழிகளில் செயப்பாட்டு வினை இல்லை என்பதும் ஐரோப்பிய மொழிகளில் அமைந்துள்ளது போன்று அவ்வினைக்குரிய பொருட் சிறப்பு இல்லை என்பதும் கால்டுவெல் கருத்து, ஆங்கிலத்தில் இது Passive voice என்ற சொல்லால் குறிக்கப் பெறும். இச்சொல் இலத்தீன் மொழியிலிருந்து உருவானது என்பர் டாக்டர். அ. சிதம்பரநாதன்.[1]

செயப்பாட்டு வினை விளக்கம்:

செய்வினையாக அமைந்த தொடரின்,

1) எழுவாய் கருவிப்பொருளாக

2) செயப்படுபொருள் எழுவாயாக

வரும்போது அது செயப்பாட்டு வினையெனப்படுகிறது.

எடுத்துக்காட்டு:

கண்ணன் கம்சனைக் கொன்றான்

கம்சன் கண்ணனால் கொல்லப்பட்டான்.

செய்வினை – செயப்பாட்டுவினை – வேறுபாடு:

செய்வினை நிலையில் வினைசெய்பவனே எழுவாயாக வரும். செயப்பாட்டு வினையில் செயப்படுபொருளே எழுவாயாகும். செய்வினையின் எழுவாய், செயப்பாட்டு வினையில் மூன்றாம் வேற்றுமை கருவிப்பொருள் உருபைப் பெறும். செயப்படு பொருளுக்குச் சிறப்புக் கொடுக்க எண்ணும் போதும், எழுவாய் தெரியாத நிலையிலும், எழுவாயை அறிவிக்க வேண்டாத நிலையிலும் செயப்பாட்டு வினையமைப்புக்கள் தமிழில் இடம் பெறுகின்றன.

தொல்காப்பியக் குறிப்பு:

''செயப்படு பொருளைச் செய்தது போலத்
தொழிற்படக் கிளத்தலும் வழங்கியல் மரபே''[2] என்பர் காப்பியர். இதற்குக் காட்டாக,

"சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே"[3] என்பது அகச் சான்றாக அமைந்த நூற்பா வரியாகும்.

நில. பத்மநாபனின் ஆளுகை:

'பட்ட' என்ற சொல் வழக்கு, நீல. பத்மநாபனிடம் மிகுதியாக (தலைமுறைகளில் மிக அதிகமாக) இடம் பெறுவது நோக்கியே இவ் ஆய்வு மேற் கொள்ளப்படுகிறது.

மூவகை நிலைகள்:

இவ்வமைப்பு,

1) எச்சங்களுடன் இணைந்து வரல் –($t_1$) Infinitive + *Paṭṭa*

2) செயப்படு பொருள் குன்றா வினையுடன் இணைந்துவரல் -($t_2$) Transitive + *Paṭṭa*

3) செயப்படுபொருள் குன்றிய வினையுடன் இணைந்துவரல் -($t_3$) intransitive + *Patta*

என்ற மூவகை நிலைகளில் வரக் காணலாம்.

உணர்த்தும் பொருள்:

இவை உணர்த்தும் பொருளும் மூவகையாக அமைந்துள்ளது

| | |
|---|---|
| | $M_1$ Infinitive + *Patta* Passivity |
| *Patta* | $M_2$ Transitive + *Patta* Non - Passivity |
| | $M_3$ Intransitive + *Patta* Unwanted or deceptive passivity |

எச்சங்களுடன் இணைந்து வரல்:

எச்சங்களுடன் 'பட்ட' என்னும் வடிவம் இணைந்து வரும்போது அவை செயப்பாட்டு வினைப் பொருளையே தருகின்றன.

எடுத்துக்காட்டு:

பிரிக்கப்பட்ட பாட்டப் பணம் – த. மு. ப. 109
அடக்கி ஆளப்பட்ட உணர்வு - ப. கொ. பு. 113
எக்ஸ்ரே எடுத்துப் பார்க்கப்பட்டது – உறவு – ப. 30

செயப்படு பொருள் குன்று வினையுடன் இணைந்து வரல்:

எடுத்துக்காட்டு;

1. "பண்டே தீங்க கூடெக் கூடெச் சொல்லப்பட்ட மாதிரி உங்களுக்கு இஷ்டமான ஒரு டாக்டர் கிட்டே அக்காளைக் கூட்பிட்டுப் போய் கேட்டுப் பாருங்களேன்" (த. மு. ப – 355)

2. பள்ளிக்கூடம் தெறக்கப்பட்ட நாள் நெருங்கியதும் (ச. ச. ப - 124)

3. இந்த நாப்பது வருசமா நா கிருசி செய்யப்பட்ட நிலம் (மு. நா. ப – 11!)

மேற்கண்ட இடங்களில் இடம் பெறுகின்ற செயப்பாட்டு வினை உருபன் தேவையற்றதாகத் தோன்றுகிறது. 'சொன்னமாதிரி', 'திறக்கக்கூடிய நாள்' 'செய்த நிலம்' என்று அமைப்பதே பொது இயல்பு. அதை மீறி அமைகின்ற இவ்வியல்பு குமரி வாழ்நர் பலருடைய பேச்சு வழக்கில் காணப்படுகிறது. ஆசிரியரின் 'தனியார் பேச்சுமொழி' (idiolect) யிலும் வருகின்ற இவ்வமைப்பு உரையாடலில் (conversation) இடம் பெறுகின்றது.

செயப்படு பொருள் குன்றிய வினையுடன் இணைந்துவரல்

இவ்வமைப்பு தலைமுறைகள் நாவலில் மட்டும் 44 இடங்களில் இடம் பெறுகிறது. பிறவற்றிலும் இவ்வமைப்பு உண்டு. ஆயின் அவற்றில் வருகை (frequency) குறைவே.

எடுத்துக்காட்டு:

1. வலிய வரப்பட்ட சீதேவி சவிட்டித்தள்ளக்கூடாது
– த. மு ப 332

2. உயிரோடே இருக்கப்பட்ட ஆளுக்கு பசிருசி இல்லாமையா இருக்கும்? மூ. நா. ப – 26.

இவ்வமைப்பு செய்வினையாக அமைந்திருந்தாலே விளக்க வேண்டிய செய்தியினை விளக்கிவிடும். இது பெரும்பாலும் விவரிப்பு நடையிலும் (narrative style) உரையாடலிலும் (conversation) இடம் பெறுகின்றது.

பேச்சு வழக்கு வடிவங்கள்:

ஆனனப்பட்ட

லேசுப்பட்ட

எப்படிப்பட்ட

என அமைந்து வரும் பேச்சு வழக்கு வடிவங்கள் மேற்கண்ட மூவகைப் பகுப்பினுள்ளும் அடங்கா.

சில முடிவுகள்:

1. எச்சங்களுடன் இணைந்து வரும் 'பட்ட' என்ற அமைப்பு செயப்பாட்டுப் பொருளைப் பெறுகின்றது. செயப்படுபொருள் குன்றிய, குன்ரு வினைகளுடன் இணைகின்ற இவ்வமைப்பு செயப்பாட்டு வினைப்பொருளையும், அமைப்பையும் பெறவில்லை.

2. இது பிறமொழித் தாக்கத்தால் ஏற்பட்டதன்று. ஆசிரியர் நன்கறிந்த மொழியான மலையாளத்தில் இவ்வமைப்பு இல்லை.

3. இவ்வமைப்பு கூடிய என்பதற்கு நிகராகவும், நிகழ்காலக் குறிப்பிற்கு ஏற்றதாகவும் அமைகிறது.

4. இவ்வமைப்பு வட்டார வழக்கின் செல்வாக்கால் ஏற்பட்டதாகும்.

5. 'தலைமுறைக'ளில் இவ்வமைப்பின் வருகை (frequency) மிகுதி. அது வட்டார நாவல் என்ற தகுதியைப் பெறுவதற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

குறிப்புக்கள்:

1. Chidambaranathan Chettiar A., "Passive Voice in Tamil", *Journal of the Annamalai University. Vol.* VII. No. 2.

2. தொல்-சொல்-246

3. தொல்-பொருள்-253.

# கலைச்சொல் ஒலிபெயர்ப்பில் மெய்ம்மயக்கங்கள்

இராதா செல்லப்பன்
பூ. சா. கோ. கலைக்கல்லூரி, கோவை

அறிவியல் வளர்ச்சியின் வேகத்திற்கு ஈடு கொடுக்கப் போராடிக் கொண்டிருக்கும் காலம் இது. இவ்வளர்ச்சியைத் தத்தம் மொழிகளின் வாயிலாக வெளிப்படுத்துவதற்காக மொழியில், மொழியைப் பயன்படுத்துவதில் தேவையான மாறுதல்களை ஏற்படுத்த வேண்டியதாக இருக்கிறது எல்லாமொழிகளும் காலத்திற்குக் காலம் மாறிவந்துள்ளன என்பது மறக்கவோ, மறுக்கவோ முடியாத ஒரு உண்மையாகும். தமிழ் மொழியும் அதற்கு விலக்கு அன்று. தமிழ்மொழி அமைப்பு பண்டைக் காலத்தில் இருந்ததுபோல் தற்காலத்தில் இல்லை. எழுத்து, சொல், சொற்றொடர் ஆகிய பலநிலைகளிலும் பலவித மாறுதல்களுக்கு உட்படுத்தப்பட்டதே இன்றைய தமிழ்.

அறிவியல் தமிழும் இலக்கியத் தமிழும்

அறிவியல் தமிழ் இலக்கியத் தமிழினின்றும் தேவையான இடத்தில் வேறுபடும் என்ற உண்மை ஒலிபெயர்ப்பில் ஒரு முக்கிய இடத்தை வகிக்கிறது. இலக்கியம் படைக்கும் ஆசிரியர்கள் எழுத்திலக்கணத்தைப் பின்பற்றுதல் ஒப்புடையது. ஆனால் அறிவியல் படைப்பில் ஒலிகள் அதாவது எழுத்துக்கள் இலக்கண முறை வழுவாது அமைந்திருக்க வேண்டுவதில்லை. தமிழில்

முன்வரா ஒலிகள், பின்வரா ஒலிகள் என ஒலிகள் வரையறுக்கப் பட்டுள்ளன. இவ்விதிப்படி tangent என்ற சொல் ·தேன்செண்டு என்று ஒலிபெயர்க்கப்பட்டிருக்கிறது அறிவியல் தமிழில் இவ்விதி முறைகளைக் கையாளுவதில் பல இடர்ப்பாடுகள் தோன்றுகின்றன. எனவே தேவையான இடத்தில் அவற்றிற்கு விதி விலக்குகள் அளித்தல் இன்றியமையாததாகும்

**கலைச்சொற்கள்**

அறிவியல் கருத்துக்களைத் தமிழில் தருவதில் கலைச்சொற்களே உயிர்நாடியாக விளங்குகின்றன. பிறமொழிக் கலைச்சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களை ஆக்கிக் கொள்ள நாம் இருமுறை களைக் கையாளுகிறோம். 1) ஒலி பெயர்ப்பு 2) மொழி பெயர்ப்பு மொழி பெயர்ப்பு என்பதில் சொல்லாக்கமும் அடங்கும். பிற மொழிச் சொற்களைக் கடன் வாங்கும்போது அம்மொழியின் சிறப்பு ஒலிகளைத் தமிழில் எழுதுவதே ஒலிபெயர்ப்பாகும். அங்ஙனம் பெயர்க்கும் போது தமிழோசைப் படுத்தி ஒலிபெயர்க்க வேண்டும்.

வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே (தொல். 401)

தொல்காப்பியர் கூறும், வடமொழிச் சொற்களைத் தமிழ்ப் படுத்தும் இம்முறையை நாமெல்லாம் பிறமொழிச் சொற்களுக்கும் பொதுவாக்கிக் கையாளலாம். தொல்காப்பியம் முதலான ஏனைய இலக்கண நூல்கள் கூறும் இலக்கண விதிகளைத் தொகுத்து ஆராய வேண்டும். இம் முயற்சியில் ஏற்கனவே வழக்கிற்கு வந்துவிட்ட ஆனால் இலக்கண நூல்கள் கூறாத ஒலியமைப்புக்களையும் தொகுத்து ஆராயவேண்டும். இவ்வகையான ஆய்வு, ஒலி பெயர்ப்பு விதிமுறைகளை ஆக்கிக் கொள்ளப் பெரிதும் உதவும். தொல்காப்பியம் கூறும் மெய்ம்மயக்கங்களையும், தற்போது கலைச் சொல் ஒலிபெயர்ப்பில் பயன்படுத்தப்படும் மெய்ம்மயக்கங்களையும் ஒப்பிட்டு ஆய்வதே இக்கட்டுரையின் குறிக்கோள். இக்கட்டுரை யில் தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் வெளியிட்ட கலைச்சொல் தொகுதிகளிலுள்ள ஒலிபெயர்ப்புச் சொற்களில் காணப்படும் மெய்ம்மயக்கங்களும், தொல்காப்பியம் கூறும் மெய்ம்மயக்கங்களும் ஒப்பு நோக்கப்பட்டுள்ளன.

### தனிமொழியா? புணர்மொழியா?

தொல்காப்பியர் கூறும் மெய்ம்மயக்கங்கள் தனிமொழிக்கு உரியனவா? புணர்மொழிக்கு உரியனவா? அல்லது தனிமொழிக்கும் புணர்மொழிக்கும் பொதுவானதா என்பதில் உரையாசிரியர்கள் வேறுபடுகின்றனர். இம்மெய்ம்மயக்கங்கள் தனிமொழிக்கே உரியன என்பது நச்சினர்க்கினியம். ஆனல் சில ஒற்றிணைகளுக்கு, அவர் புணர் மொழிகளையே சான்றுகளாகக் காட்டியுள்ளார். இளம்பூரணரோ மெய்ம்மயக்கம் ஒருமொழிக்கும், புணர்மொழிக்கும் பொது என்று கூறியுள்ளார். தொல்காப்பியர், தனிமொழி, இரு மொழி என்ற பாகுபாடில்லாது, புணர்ச்சியில் மாற்றமில்லாது இயல்பாய் நிற்கும் ஒற்றிணைகள் எல்லாவற்றையும் குறிப்பிடுகிருர் என்பது பேராசிரியர் டாக்டர். மா. இளையபெருமாள் அவர்களின் கருத்து.

### மொழியிடை மெய்ம்மயக்கம்

தொல்காப்பியர் கூறும் விதிகளிலிருந்து மெய்ம்மயக்கங்கள் மொழியிடையிலும், மொழி இறுதியிலுமே இடம் பெறுகின்றன என்பதை உணரலாம். மொழியிறுதி என்ற நிலையிலும் செய்யுளில் அமைகின்ற 'போன்ம்' என்ற ஒரே ஒரு மெய்ம்மயக்கச் சொல்லைத் தான் தொல்காப்பியர் சுட்டியுள்ளார். தமிழ் ஒலியமைப்பில் தொல்காப்பிய விதிப்படி, மொழி முதல் மெய்கள் மயங்குவதில்லை. கலைச்சொல் பெயர்ப்பில் மொழி முதல், இடை, ஈறு ஆகிய மூன்று நிலைகளிலும் மெய்கள் மயங்குவதைக் காண்கிறேம். சில சொற்களில், வேற்றுமொழிச் சொற்களிலுள்ள மொழி முதல் மயக்கங்கள், தமிழ் ஒலியமைப்பிற்கேற்ப பெயர்க்கப்பட்டிருப்பதையும் காணலாம். (எ.டு) chlorine – குளோரின்.

### உடனிலை மெய்ம்மயக்கம்

ஒரு மெய்யெழுத்து அதே மெய்யோடு மயங்கி வருவது உடனிலை மெய்ம்மயக்கமாகும். 18 மெய்களுள் ர, ழ நீங்கிய ஏனைய 16 மெய்களும் உடனிலை மெய்ம்மயக்கத்தையே பெறும் என்பது தொல்காப்பியம் (எழு. 30). கலைச் சொற் பெயர்ப்புகளிலும் 'ழ்ழ்' என்ற உடனிலை மெய்ம்மயக்கம் கையாளப்படவில்லை. 'ர்ர்'

என்பது மிகக் குறைந்த அளவில்தான் பயன்படுத்தப்பட்டுள்ளது. (berry - பெர்ரி என்ற ஒரே ஒரு சொல்தான் கட்டுரையாளரால் கண்டு பிடிக்கப்பட்டது). 'கசதப' வேற்றுநிலை மெய்ம்மயக்கத்தைப் பெருது உடனிலை மயக்கத்தையே பெறும் என்பது இலக்கணம் கூறும் விதி 'கசதப' வேற்றுநிலை மெய்ம்மயக்கத்தையும் பெற்று அறிவியல் தமிழில் பரவலாகக் கையாளப்பட்டுள்ளன.

**வேற்றுநிலை மெய்ம்மயக்கம்**

ஒரு மெய் பிற மெய்யோடு மயங்குவது மெய்ம்மயங்கு அதாவது வேற்றுநிலை மெய்ம்மயக்கம் எனப்படும். இவ்வகை மயக்கத்தில், இலக்கணம் கூறும் மயக்கங்களுக்கும், ஒலிபெயர்ப்புச் சொற்களில் கையாளப்படும் மயக்கங்களுக்குமிடையே பல வேறு பாடுகள் காணப்படுகின்றன.

தொல்காப்பியர் கூறும் பல மெய்ம்மயங்கங்கள் கலைச்சொற் பெயர்ப்பில் இடம் பெறவில்லை. ஆனல் அவற்றுள் பலவற்றிற்கும் உரையாசிரியர்கள் தொடர்மொழிகளையே எடுத்துக் காட்டுகளாகத் தருகின்றனர். கலைச் சொற்களில் பெரும்பாலான தனிமொழிச் சொற்களே. எனவே இம்மெய்ம்மயக்கங்கள் கலைச்சொல் ஒலி பெயர்ப்பில் இடம் பெருததில் வியப்பில்லை. ட்ச், ட்ப், ற்க், ற்ச், ற்ப், ல்ய், ள்க், ள்ச். ள்ப். ள்ய், ள்வ், ண்க், ண்ச், ண்ஞ், ண்ப், ண்ம், ண்ய், ண்வ், ன்ற், ன்ஞ், ன்ப், ன்ம், ன்ய், ன்வ், ஞ்ச், ஞ்ய், ந்ய், ம்ய், வ்ய், ம்வ், ய்க், ய்ச், ய்ச், யஞ், ய்த், ய்ந ய்ப், ய்ம், ய்வ், ர்ங், ர்ஞ், ர்த், ர்ந், ழக், ழ்ங், ழ்ச், ழ்ஞ், ழ்த், ழ்ப், ழ்ம், ழ்வ், ழ்ய் ஆகியவை தொல்காப்பியரால் கூறப்பட்ட, ஆனல் கலைச் சொல் பெயர்ப்பில் காணப்பெருத மெய்ம்மயங்களாகும்.

| மெய்ம் மயங்கங் கள் | உரையாசிரியர்கள் கூறும் எடுத்துக் காட்டுகள் | கலைச்சொல் ஒலிபெயர்ப்பில் இடம் பெறும் சொற்கள் |
|---|---|---|
| 1 டக் | கட்க | கேட்கின் '*catkin*' |
| 2 ல்க் | செல்க | ஆல்கா '*alga*' |
| 3 ல்ச் | வல்சி | கால்சியம் '*calcium*' |
| 4 ல்ப் | செல்ப | ஆல்புமின் '*albumen*' |
| 5 ல்வ் | செல்வம் | பல்வைனஸ் '*pulvinus*' |

| மெய்ம் மயக்கங் கள் | உரையாசிரியர்கள் கூறும் எடுத்துக் காட்டுகள் | கலைச்சொல் ஒலிபெயர்ப்பில் இடம் பெறும் சொற்கள் |
|---|---|---|
| 6 ங்க் | கங்கன் | கோலங்கைமா '*collenchyma*' |
| 7 ண்ட் | கண்டன் | ஆண்ட்ரோஸைட் '*androcyte*' |
| 8 ந்த் | கந்தன் | ஆந்தரோஸாயிட்'*antherozaid*' |
| 9 ம்ப் | கம்பன் | அக்கும்பன்ட் '*accumbent*' |
| 10 ன்க் | புன்கு | கேன்கர் '*cankar*' |
| 11 ன்ச் | புன்செய் | சின்சின்னஸ் '*cincinnus*' |
| 12 ர்க் | ஆர்க | கார்க் '*cork*' |
| 13 ர்ச் | வேர்சாலே | கார்செருலஸ் '*carcerulus*' |
| 14 ர்ப் | ஆர்பவை | அலிலோமார்ப் '*allelomorph*' |
| 15 ர்ம் | நேர்மை | எண்டோதெர்மிக் '*endothermic*' |
| 16 ர்ய் | போர்யானே | |
| 17 ர்வ் | சேர்வது | கேர்யோகமி '*karyogamy*' |
| | | டார்வினிஸம் '*Darvinisim*' |

தொல்காப்பியரால் கூறப்படாத, ஆனல் கலைச்சொல் ஒலி பெயர்ப்பில் காணப்படும் மெய்ம்மயக்கங்கள்

| | | |
|---|---|---|
| 1 ட்ர் | நைட்ரஜன் | *nitrogen* |
| 2 ட்ம் | காட்மியம் | *cadmium* |
| 3 ல்ட் | வோல்டேஜ் | *voltage* |
| 4 ல்ம் | பால்மெல்லா | *palmella* |
| 5 ண்ட் | ஆண்டிஜென் | *antigen* |
| 6 ம்ன் | ஹைபோலிம்னியன் | *hypolimnion* |
| 7 ய்ட் | ஆல்கலாய்ட் | *alkaloid* |
| 8 ர்ட் | கார்டிகேஷன் | *cartication* |
| 9 ர்ன் | அல்பர்னம் | *alburnum* |
| 10 க்ர் | அக்ரோகைனஸ் | *acrogynous* |
| 11 க்ட் | எக்டோபிளாசம் | *ectoplasm* |
| 12 க்ல் | ஸ்பைக்லட் | *spikelet* |
| 13 க்ம் | டெக்மன் | *tegmen* |
| 14 க்ய் | வாக்யூல் | *vacuole* |
| 15 க்ன் | டைக்னசிஸ் | *diakonesis* |
| 16 க்ள் | நூக்ளியஸ் | *nucleus* |
| 17 ப்ள் | அப்ளனோ கேமீட் | *aplanogamete* |
| 18 ப்ர் | கேப்ரிர்கேஷன் | *cabrification* |
| 19 ப்ட் | கான்ஸெப்டகிள் | *conceptacle* |

In the earlier stage the compositional writing can be administered by showing single or multi picture(s) of same sequences, which is being orally described by the teacher before the students begin to write the composition. This is known as picture-composition. In the later stages, texts with appropriate questions/Notes/cues are being administered. In the advanced stage, the students themselves choose the topics of their own interest. Here starts the creative writing of the second language learners.

*Selected Bibliography*:

1 L. G. Alexander, 1971
"*Guided Composition in English Language Teaching*'
Longman Group limited. London.

2 D. A. Spencer. 1965
"*Two types of Guided composition Exercises*" Elt. Vol. 19. No. 4

3 G. D. Sanders, et. al. 1954
"*Unitied English Composition*" Appleton-Centuary Crofts. New York.

4 G. Subbiah 1978
"*Teaching of composition*". (mimeo) Vth workshop of Principals & Lecturers Proceeding. Patiala.

# Some Malayalam influences on Tamil

K. Subbiah Pillai
Annamalai University

It is clear from the grammar and literature that there were dialects even in the Sangam Tamil. Tolkappiyar says about twelve dialects (*Tol, Col, Sutra 400; nannul Sutra 273*) and names as 'ticaiccol'. Many scholars worked in the field of dialectology. It is Kamil Zvelebil (1964) who classified Tamil dialects into five viz.,

1. Southern Dialect 2. Eastern Dialect or (Central Dialect) 3. Western Dialect 4) Northern Dialect and 5. Ceylon Dialect.

The Southern dialect is spoken according to him, in the districts Madurai Tirunelveli, Ramanathapuram and Kanyakumari. Zvelebil also pointed out that the Kanyakumari Tamil (Ka. TA) can also be considered as a separate dialect.

Ka. Ta has enough characteristic features to be classified as a separate dialect. Yesudhason (1976) classified Kanyakumari Tamil. (Ka.Ta) as a separate regional dialect giving suitable evidences. In Kanyakumari itself we can find some local dialects as Vilavancode Tamil, Nanjil Nadu Tamil etc. Kanyakumari is a bilingual area where we can see many bilinguals

speaking Tamil and Malayalam. So there is a possibility for Tamil to be influenced by Malayalam. This paper tries to bring out the evidences of the influences of Malayalam (Phonological, Morphological and also lexical) on Tamil.

*Phonological level*

We can see some phonological evidences of Malayalam influence on Ka. Ta

a) The cluster -*ṅṅ*- is not possible in any other dialects of Tamil and it is there in the Ka.Ta

| | | |
|---|---|---|
| eg.) | *aṅṅaṇe* | 'There' |
| | *iṅṅaṇe* | 'here' |
| | *aṅṅaṇam* | 'Place where vessals are washed' |

The cluster -*ṅṅ*- is very common in Malayalam. So it should be the influence of Malayalam.

b) The cluster -*ṟṟ*- is found in Ka Ta, in the word *oṟṟai*- and it is changed to *ottai* in other dialects. Howeve -*ṟṟ*- cluster in other words has been changed.

eg.) *ka:ṟṟu* > *ka:ttu* 'air'

*Morphological level*:

a) *negative Prefix*

The negative prefix *a*- is found in Ka.Ta.

| | | |
|---|---|---|
| eg.) | *asa:ttiyam* | 'not possible' |
| | *asouriyam* | 'not well' |

Though the negative prefix *a*- is a Sanskrit borrowing it is only because of Malayalam it is retained in Ka. Ta. where as in other dialects it is gradually lost.

b) *Cardinal suffix*

The Cardinal suffix *a:matte* is found in Ka. Ta. where as, n other dialects of Tamil it is *a:vatu*

| | | |
|---|---|---|
| eg.) | *oṇṇa:matte* | 'first' |
| | *a:ra:mätte* | 'sixth' |
| | *mu:ṇamatte* | 'third' etc. |

c) *Verbalising English nouns*

In. Ka. Ta. *cey* is used as the verbaliser where as *-paṇṇu* is used in all other dialects. (O. Ta)

| | Ka. Ta | O. Ta | |
|---|---|---|---|
| eg.) | *rejisṭar cey* | *rejisṭar paṇṇu* | 'register' (V) |
| | *po:st cey* | *po:st paṇṇu* | 'Post' (V) |

*cey* is the verbaliser in Malayalam and it may be the influence of Malayalam on Ka. Ta., having the same. However, *paṇṇu* is aiso there in Ka. Ta.

d) *Instrumental case marker*

The instrumental case marker *-iṭṭu* is found in Ka. Ta.

eg.) *kattiyiṭṭu* 'with the knife'

This maker is not found in any other dialect and it is there in Malayalam also.

e) *Other suffixes*:

i) *ma:r*

*-ma:r* is used as a human plural suffiix

| | | | |
|---|---|---|---|
| eg.) | *aṇṇan* | *aṇṇanma:r* | 'brothers' |
| | *ma:man* | *ma:manma:r* | 'uncles' |
| | *akka:* | *akka:ma:r* | 'sisters' |

ii) *a:kkama:r*

-a:kkama:r is used as a human plural in cases like

eg.) *na:da:r* *na:da:kkama:r* 'nadars'

*ca:ṇa:r* *ca:ṇa:kkama:r* 'canars'

which are supposed to be Malayalam influence.

iii) *ku:r*

The suffix *-ku:r* is added to refer the time.

*mu:ṇumaṇikku:r* 'three hours'

*araimaṇikku:r* 'half an hour'

*Lexical level*

There are many lexical items which have been borrowed due to close contact with the Malayalam. This borrowing can also be considered as an influence of Malayalam. Some of the lexical items are given below which have been borrowed from Malayalam.

| Ka. Ta. | S.Ta | Glossary |
|---|---|---|
| *iri* | *iru* | 'sit' |
| *učča* | *mattiya:nam* | 'mid-day' |
| *i:čci* | *i:* | 'fly' |
| *koḷḷa:m* | *parava:yillai* | (its satisfying) |
| *čakka* | *pala:* | 'jack fruit' |
| *kuṟukku* | *muduku* | 'back' |

The words *iri, učča, i:čči. koḷḷa:m. čakka. kurukku* etc. are Malayalam words and they are used very commonly in Ka. Ta.

It can be said that it is due to the influence of Malayalam, Tamil spoken in Kanyakumari has some peculiar charactristics to be considered as a separate dialect.

# Demonstratives in Se:re:r and Dravieian

Souleymane Faye
Annamalai University

Se:re:r is one of the main languages spoken in Senegal, a West African Country. According to the classification of African Languages, it belongs to the West Atlantic group. Its comparison with Dravidian Languages leads me to find out some similarities, of which resemblance of the basic morphemes of their demonstratives is one.

In Dravidian, the demonstratives are founded on certain bases to which are added suffixes of gender and number, and suffixes of human or non-human. The same fact is observed in *Se:re:r*, with the difference that the gender does not exist in its structure.

Frist of all, let us examine the different bases of each language.

1 *Dravidian bases*:

Four demonstnative bases are recognized by one on other of the Dravidian dialects, each of which is a pure vowel, viz.

*a*, *i*, *u* and *e*: (which is a suffix of emphasis in most of the dialects, but is a demonstrative in Ku. (Caldwell 1856)

*a*, is the remote demonstrative base.

*i*, is the proximate demonstrative base.

*u*, is the medial demonstrative base.

The first two are the most widely and frequently used. *u* is occasionally used by the Tamil poets, more frequantly in classical Kannada and in Tulu, to denote a person or object which is intermediate between the remote and the proximate.

2 *Se:re:r bases*

As for *se:re:r*, three demonstrative bases are to be recognized, each of which is also a pure vowel, viz.

*a:*, the remote demonstrative bsse.

*e*, the proximate demonstrative base,

*e:*, the medial demostrative base.

The length of the remote demonstrative base, viz, *a*: is exagerated when the person or the object to be denoted is really very remote. Concerning the proximate demonstrative base, *e*, its use denotes not only the proximity of the object indicated. but also a nuance of situation in regard to the speaker and his hearer.

On one hand, *e* denotes what is nearer to the speaker than to his hearer. On another hand it is said as if the speaker were holding the object. But in return the speaker will use *e*: in the meaning of "that which is close to you"

However, to other indication of medial position, the same base is of use. In the case of a person or an object not seen but only alluded to by the speaker.

For any pronoun an adjective used thenafter by the interlocutor, the base is the medial one *e:*, as if the evoked object were with that speaker. In fact that means, so to speak, "that which you have in mind", so that it is not far from him.

*Representation* I

| | | | |
|---|---|---|---|
| *Drav:-* | *i* | *u* | *a* → |
| *Se:r:-* | *e* | *e:* | *a:* → |

The remote demonstrative base is common to both Dravidian and *Se:re:r* inspite of length of the *se:re:r* one, which could be compensated by the fact that it is possible in Dravidian to stress an important remoteness in the lenghtening of the base *a* as a distant proximate demonstrative ba e.

As for the remaining couples *i/e* and *u/e:*, their elements might be drawn closer in examining their phonological characteristics.

a) *i/e alternation*

The alternation *i/e* and *u/o* between the two groups Tamil-Malayalam and Kannada-Telugu with the front vowels could be compared with the same type of alternations, viz, *i/e* and *u/o* between *se:re:r* and Wolof, one of its most related languages.

Concerning the first case. Dr. R. Caldwell remarks: "It is a particularity of the Tamil system of sounds, as distinguished from that of the other languages of the family, that the vowels *i, î, e, ê* and *u*, acquire before certain consonants followed

by *a* and its cognate *ei* a compound diphtongued sound which is different from the sound which they have as simple vowels. Thus, *i* before *ṭ*, *ṇ*, *r*, *ṛ* and *ḷ* followed by *a* or *ei*, acquires something of the sound *e*......"

Eg.

| *Tamil – Malayalam* | | *Kannada – Telugu* |
|---|---|---|
| *Ta: ilai/Ma: ila* | "leaf" | *ela* |
| *Ta: irai/Ma: ira* | "food" | *era* |
| *Ta: tirai/Ma: tira* | "screan" | *tera* |

$\Rightarrow$ Ta – Ma *i* $\longrightarrow$ Ka – Te *e*

The same type of alternation is exsiting in the two groups with *u* and *o*.

As for the second case, *i. e*, between *Se:re:r* and Wolof, *i* and *u* in *Se:re:r* are alternating with *e* and *o* respectively in Wolof.

Eg.

| *Se:re:r* | *Wolof* | | |
|---|---|---|---|
| *nge:le:m* | *gile:m* | "a camel" | $\Rightarrow$ *e:/i* |
| *Sadaxiṭ* | *saraxe* | "to give alms" | $\Rightarrow$ *i/e* |

The alternation, as it appears, does not occur in a single direction, and the long vowels are very often concerned with.

| *Se:re:r* | *Wolof* | | |
|---|---|---|---|
| *ndu:ba:li* | *do:ba:li* | "a kind of tree" | $\Rightarrow$ *u:/o:* |

b) *Dravidian, u and Se:re:r, e*

The Dravidian medial demonsirative base, *u* corrosponds with the *Se:re:r* interrogative base, *u* and inversely, the *Se:re:r*

medial demonstrative base, *e* corresponds with the Dravidian interrogatice base, *e*. This correspondance is all the more striking that even the second interrogative base of *Se:re:r*, viz, *a*, which matches with the remote demonstrative of *Se:re:r a:*

Eg.

| | *Dravidian* | | *Se:re:r* | |
|---|---|---|---|---|
| *i/e* = | *inta na:ḷ* | "this day" | *ña: nene* | "this day" |
| *e/u* = | *enta na:ḷ?* | "which day?" | *ñ:a:ḷ num?* | "Which day?" |
| *a/a:* = | *anta na:ḷ* | "that day" | *ñ:a:ḷ na:ga* | "that day" |
| *u/e* = | *utu* | "that one" | *ke:ne* | "that one" |
| *e/a* = | *eṅke* | "where" | *mam* | "where" |

We can make the representation of these correspondances as follows.

| *Bases* | *Drav.* | *Se:r.* |
|---|---|---|
| Proximate base | *i* | *e* |
| medial base | *u* | *e:* |
| remote base | *a* | *a:* |

*The a: base in Dravidian and Se:re:r*

As remarks Dr. N. Lahovary (1963) "In Southern Dravidian, *a* serves as a demonstrative (or as a personal pronoun) for the third person;

Tamil: *avan*

*a* + *v* (euphonic) + *an* (sign of the masculine)

In *Se:re:r* too, it has been above that 'a' serves as a demonstrative for the third person. And whereas it serves in Dravidian as a personal pronoun for the third person, in *Se:re:r* it serves 'a' interrogative pronoun for the third person, as well as it is used as a personal pronoun for the same third person.

Eg.

| | | | |
|---|---|---|---|
| inter. pronoun | *an garu* | Who came? | } → *an* |
| pers. pronoun | *a gara* | He has come | } → *a* |

Dr. Lahovary adds that "In Southern Dravidian, there are properly speaking, no articles, demonstrative pronouns, taking their place in their suffixal functions. It will be noted that in these languages, the articles, or whatever takes its place in these languages, is suffixed."

In *Se:re:r* the term demonstrative article is to be used, for the demonstrative base is absolutely undiscociable from the morpheme suffixed to the noun, as a definite article. This article is usually reduplicated form of the class marker which is *a* or *o*, according to the class of the noun, to which is added the morpheme/*-l-*/ Thus the complete demonstrative article is formed of *a* (or *o*) + *l* + demonstrative base.

Eg.

| | | | |
|---|---|---|---|
| *a ie:x ale* | "the stick" | *o dal-ole* | "the dead body" |
| *a te:x-ala:* | "that stick" | *o dal-ola:* | "that dead body" |

As for the noun which don't have class marker, the demonstrative base is added to the single morpheme /*-l-*/ or /*-n-*/ (a variant of /*-l-*/).

Eg.

| | |
|---|---|
| *to:l-ne* | "the skin, the leather" |
| *to:l-na:* | "that skin" |

# தமிழில் ஐயவுறவுகள்

சு. செயராசு நத்தானியல்
வேளாண்மைக் கல்லூரி, மதுரை

இலக்கியத்திற்கு இனிமை பயப்பன ஐயவுறவுச் சொற்கள் அவையே அறிவியல் நூலுக்குப் பொருள் குழப்பம் ஏற்படுத்தும் ஆகவே ஐயவுறவுச் சொல் பற்றி கலை உணர்வு மிக்காரும் அறிவியல் அறிவு மிக்காரும் கூர்ந்து கவனித்து எழுதுதல் இன்றியமையாதது. இவைகளின் தோற்றத்தை அறிவது மிகவும் நல்லது.

ஐயவுறவு அமைப்பு எல்லா மொழிகளிலும் பொதுவாகக் காணப்படும். இதுபல வகைகளில் தோன்றுகிறது. ஒலி, இலக்கணம் சொற்களஞ்சியம் ஆகியவற்றைக் சார்ந்த மூன்று வகைகளில் ஐயவுறவு அமையும்.

முதலில் ஒலிசார்ந்த ஐயவுறவு வடிவங்களைப் பார்ப்போம். பொருள் ஐயவுறவுக்கு உடம்படுமெய், வருமொழிவொலித் திரிபுச் சேர்க்கை, நிலைமொழி ஒலித்திரிபுச் சேர்க்கை, இருவொலித் திரிபுச் சேர்க்கை, குன்றல், மரூஉ, அசையழுத்த முறை ஆகியன தலையாய காரணங்களாகும்.

## உடம்படுமெய்

உடம்படுமெய் இருவகைப்படும். 'இ', 'ஈ', 'ஐ' என்ற இம் மூன்று ஒலிகளை அடுத்து ஏதேனும் ஒரு உயிர் வருமானல் 'ய' – மெய் தோன்றி விட்டொலிப்பை நீக்கும். மேற்கண்ட உயிர்களை

யன்றி ஏனைய உயிர்களை அடுத்து ஏதேனும் ஓர் உயிர் வருமானால் வ்' - மெய் தோன்றும். இவ்விரண்டு உடம்படு மெய்களும், ஐயவுறவை உருவாக்கும்.

1. 'ய்' மெய்யும் ஐயவுறவும்

அ) மதி ஆதவன் — மதியும் ஆதவனும்

ஆ) மதியாதவன் — மதிக்காத மனிதன்

2. 'வ்' - மெய்யும் ஐயவுறவும்

அ) ஆட அரும் — நடனமாடக் கடினமாக

ஆ) ஆடவரும் — ஆடுவதற்கு வரும்

— மனிதனும் கூட

வருமொழி வொலித்திரியும் சேர்க்கை:-

இரண்டு சொற்கள் இணையும்பொழுது இரண்டாம் சொல்லின் முதல் ஒலி திரிவது வருமொழிவொலித் திரிபுச் சேர்க்கையாகும். இதற்கு முதற் சொல்லிலுள்ள இறுதி ஒலியின் வலிமை காரண மாகும். வேறு சேர்க்கை மூலமும் இதே இணைவு முடிவு காணும் பொழுது ஐயவுறவு ஏற்படும்.

1. பொன்னன்று

அ) பொன் நன்று — தங்கம் நல்லது

ஆ) பொன் அன்று — தங்கம் அன்று

நிலை மொழி ஒலித்திரிபுச் சேர்க்கை:-

இரு சொற்கள் இணைகையில் முதற் சொல்லின் இறுதி ஒலி யானது இரண்டாவது சொல்லின் முதல் ஒலியின் வலிமையால் மாற்றம் அடையும்.

1. மாசுனங்கூர்

அ) மாசுனம்கூர் — பெரும்பாம்பு விரும்புகிற

ஆ) மாசுனங்கு ஊர் — தேமல் பரவுகின்ற

2. குற்றியல் உகரம் குற்றியல் இகரமாக மாறுதல்

அ) நாடு யாது; — உங்கள் நாடு எது?

ஆ) நாடி யாது?| — உங்கள் நாடு எது?

இரு ஒலித் திரிபுச் சேர்க்கை:

இரு சொற்கள் இணையும்பொழுது முதல் சொல்லின் இறுதி ஒலியும் இரண்டாவது சொல்லின் முதல் ஒலியும் சேர்ந்து வேறொரு ஒலியாக மாறிவிடும். இது ஐயவுறவைத் தோற்றும். இரு சொற் சேர்க்கை விளைவாலும் இதே சொற்கள் தோன்றி ஐயவுறவு ஏற்படுத்தும்.

1. கண்ணன்றே

அ) கண் நன்றே — கண் நன்றே?

ஆ) கண் அன்றே — கண் அன்றே?

2. இதே இருவொலித் திரிபு கீழ்க்கண்ட முறையிலும் ஐயவுறவு ஏற்படுத்தும்

அ) முள் தைக்கும் — முள் தைக்கும்

ஆ) முட்டைக்கும் — முட்டைக்கும்

கெடுதல்:—

இரு சொற்கள் இணைகையில் முதற் சொல்லின் இறுதி ஒலி மறைந்துவிடும். அதாவது அதனை அடுத்து உயிரொலி வந்தால் குற்றியலுகரம் நீங்கிவிடும். இது ஐயவுறவை ஏற்படுத்தும்.

1. அழகாகா

அ) அழகு ஆகா — அழகு ஆகாது

ஆ) அழகாகா — அழகா காப்பாற்று

உயிர்மெய் கலப்பு:—

தமிழில் உயிர் மெய் கலப்பு ஏற்படும் நிலை உண்டு. உயிர் மெய்யோடு சேர்ந்து ஓர் உருவைக் கொள்ளும். அதனாலும் ஐயவுறவு ஏற்படும்.

1. உள்ளமிகாயா

அ) உள்ளம் இளகாயா — உள்ளம் இளகாயா?
ஆ) உள்ள மிளகாயா — இருக்கின்ற மிளகாயா?

அசையழுத்த முறை:—

அசையழுத்த முறை ஐயவுறவை ஏற்படுத்தும்.

1. அவரைக்காயா

அ) அவரைக்காயா? — இங்கு இத்தொடர் முழுவதும் ஒரே வகையில் அழுத்தம் பெறும்போது 'அவரைக்காயா?' என்று காய்கறி வகையை வினவுவதாக அமைகிறது.

ஆ) அவரைக்காயா? — இங்கு இவ்வாறு இரண்டாகப் பிரிந்து ஒவ்வொன்றுக்கும் தனி அழுத்தம் தரும்பொழுது 'அவரைச் சினவாதே!' என்ற பொருள் அமையும்.

மருஉ:—

ஒரே ஒலிகளையுடைய இரண்டு அசைகள் ஒரு சொல்லில் தொடர்ந்து வருமானால் அதில் ஒரு அசை விட்டு ஒலிக்கப்படும். அதனால் ஐயவுறவு ஏற்படும்.

1. ஆந்தை:

அ) ஆந்தை — ஒருவகைப் பறவை
ஆ) ஆதன் தந்தை — ஆதலின் தந்தை

இரண்டாவதாக இலக்கண வகையால் ஏற்படும் ஐயவுறவு பற்றிக் காண்போம்

இலக்கண அமைப்பால் இரண்டு உருபங்கள் ஒரே ஓசையுடையதாக இருக்கையில் ஐயவுறவு தோன்றும்.

பழங்காலத்தில் 'ஆ' என்ற பின்னொட்டு பலவின்பால் பன்மைக்கும் பெயர் அடைக்கும் பொதுவாக வரும். இதனல் ஐயவுறவு ஏற்படும். (இது மதிர்மறை ஆகும்).

வளரா மாடு — அ) மாடு இனி வளராது
— ஆ) மாடு வளரவில்லை.

இனி அமைப்பாலும் ஐயவுறவு ஏற்படும். இதில் சொற்கள் ஐயவுறவு தராவிடினும் மரபு வழியில் எழுவாய், பயனிலை உருவாகும் வகையில் ஐயவுறவு அமையும்.

அவன் அண்ணன் தோட்டத்திற்குப் போனன்.

இதன் பொருள்

அ) அவன் அவனுடைய உடன்பிறந்தான் வீட்டிற்குப் போனன்.

ஆ) அவனுடைய அண்ணனே தோட்டத்திற்குப் போனன்.

## இறுதியாகச் சொற்களஞ்சிய சார்பாக உருவாகும் ஐயவுறவுகள் பற்றிக் காண்போம்

ஒரே சொல்லுக்கு அதன் தொடர்புடைய பல்வேறு பொருள்களால் ஐயவுறவு ஏற்படும். இது இரண்டு வகைப்படும்.

1. பல தொடர்புடைய பொருள் கொண்ட ஒரு சொல்:—

ஒரே சொல் அதன் தொடர்புடைய இரண்டு அல்லது மூன்று பொருளைக் கொண்டு இருக்கும்.

கார்:— — கறுப்பு, மேகம், மழைக்காலம்

1. தொடர்பற்ற பல பொருள் கொண்ட ஒரு சொல்:—

ஒரே சொல் இரண்டு அல்லது மூன்று பொருள்களைக் கொடுப்பதால் (தொடர்பற்ற பொருள்கள் ஐயவுறவு ஏற்படும்.

ஓடு:— — ஓடிப்போ

ஓடு:— வீட்டின் கூரைமேல் வேயப்படும் ஒரு வகைப் பொருள்

இப்போது ஐயவுறவுகள் உருவாகின்றன. இவற்றை இலக்கியத்தில் ஏற்றுக் கொண்டாலும் அறிவியலில் கருத்துத் தெளிவு வேண்டியதினால் இவற்றை விளக்கி மொழியைக் கையாளவேண்டும்.

# விரவுத்திணை - ஒரு மீள் பார்வை

தூ. சேதுபாண்டியன்
மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம் மதுரை

திணைப்பாகுபாடு கூறும் இலக்கண ஆசிரியர்கள், அப்பாகு பாட்டிற்கான அடிப்படையை மிகத்தெளிவாகவே கூறி விடுகின்றனர். தொல்காப்பியர்.

"உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை என்மனார் அவரல பிறவே"[1] என்றும்,

நன்னூலார்

"மக்கள் தேவர் நரகர் உயர்திணை
மற்றுயிர் உள்ளவ, மில்லவ, மஃறிணை"[2]

என்றும் விளக்குகின்றனர்.

இப்பகுப்பு பொருளடிப்படையில் அமைந்ததாகவே உள்ளது. அதாவது ஒரு பெயர்ச்சொல் குறிக்கும் பொருளை அடிப்படையாகக் கொண்டே அது எந்தத்திணையைச் சார்ந்தது என்பது பகுக்கப் படுகிறது.

இப்பகுப்பின் அடிப்படையில் எல்லாப் பெயர்ச்சொல்லுக்கும் திணை குறிப்பது இயலாத ஒன்றாகிவிடுகின்றது. சான்றாக அடிமை என்ற ஒரு சொல்லை எடுத்துக்கொண்டால் அது உயர்திணையா? அஃறிணையா? என்ற வினா எழுகிறது.

அ) அடிமை வந்தான்  ஆ) அடிமை வந்தது

என்ற தொடர்களில் சான்று (அ)-வில் அடிமை என்பது உயர்திணை என்றும், சான்று (ஆ)-வில் அடிமை என்பது அஃறிணை என்றும் தெளிவு படுத்தமுடிகிறதே ஒழிய அடிமை என்ற பெயர்ச்சொல்லுக்கு அதன் பொருளை அடிப்படையாகக்கொண்டு தனி நிலையில் திணை கூறமுடியவில்லை. இதனால் இலக்கண நூலாரின் திணைப்பகுப்புப் பொருள் அடிப்படையில் அமைந்திருப்பது அத்துணைச் சரியானது என்று ஒப்புக்கொள்ளவியலவில்லை. இதன் விளைவு தான் விரவுத் திணை என்று ஒரு பகுப்பும்.

"உயர்திணைக்கும் அஃறிணைக்கும் பொதுவாகிய பெயர்களை விரவுப்பெயர் என்பர். இப்பெயர்களை இன்ன திணையென அறிதற்கு அவ்விடத்து வரும் வினைகளே கருவியாக நிற்கும்".[3] என்பது விரவுத்திணை பற்றிய ஒரு விளக்கம். "வினையொடு அல்லது பால் தெரிபு இலவே"[4] என்ற தொடரும் இதனையே உணர்த்தும். மேற் கூறிய அடிமை என்ற சான்றினால் திணைப்பகுப்பு வினைமுற்றின் அடிப்படையில் அமைந்திருக்குமாயின் இத்துணைச்சிக்கலுக்கு இடம் இருந்திருக்காது என்பது தெளிவாகிறது.

ஒரு பெயர், அது ஏற்கும் வினைமுற்றில் உயர்திணைக்குரிய பால் எண் காட்டும் இயைபு உருபு (agreement) இருக்குமாயின், உயர் திணைப்பெயர்என்றும், அது ஏற்கின்ற வினைமுற்றில் அஃறிணைக்குரிய இயைபு உருபு இருக்குமாயின் அஃறிணைப்பெயர்என்றும் இலக்கணம் கூறியிருந்தால் சிறப்பாக அமைந்திருக்கும். இன்னும் சரியாகக் கூறப்போனால் பால் (gender) காட்டும் உருபுடன் கூடிய வினை முற்றினைக்கொண்டு முடிவது உயர்திணைப்பெயர் என்றும், பால் காட்டா உருபுடன் கூடிய வினைமுற்றினைக்கொண்டு முடிவது அஃறிணைப்பெயர் என்றும் கூறுவதே சரியாகும். இப்பகுப்பு தொடரனியல் (syntax) அடிப்படையில் அமைந்ததாகும். இது குறித்தே இன்றைய மொழியியலார் "திணைப்பகுப்பு என்பது தொடரனியல் அடிப்படையில் அமைந்த ஒரு பகுப்பேயன்றி பொருளியல் (semantics) அடிப்படையில் அமைந்ததன்று"[5] என்பர். மேலும் இவ்வாறு பகுத்திருப்போமாயின் விரவுத்திணை என்ற ஒரு பகுப்புக்கே இடம் தரவேண்டியிருந்திருக்காது. இதற்குரிய விளக்கத்தையே இக்கட்டுரையின் பிற்பகுதி விளக்க முனைகிறது.

மரபுவழி விரவுத்திணைப் பகுப்பு:

இலக்கணிகள் விரவுத்திணைக்கு எடுத்துக்காட்டுத்தரும்போதெல்லாம். அ) சாத்தன் வந்தான் ஆ) சாத்தன் வந்தது போன்ற தொடர்களையே தருவர். இத்தொடர்களில் ஒரேபெயர் வந்தான் என்ற வினைமுற்றுடன் வரும் போது உயர்திணை என்றும், வந்தது என்ற வினைமுற்றுடன் வரும் போது அஃறிணை என்றும் கூறுவர். இவ் விளக்கத்திற்கு அடிப்படை வினைமுற்றேயாயிற்று. அவர்களின் முடிவு வினைமுற்றுக்களின் (உயர்திணை-அஃறிணை) இருவடிவங்களையும் ஒரே பெயர் ஏற்கும் தகுதியுடைத்தாயின் அவை விரவுத்திணைப் பெயர்கள் என்பதேயாம். அங்ஙனமாயின் அவர்கள் கூறும் விரவுத்திணைகள் யாவும் இவ்விலக்கணத்தின் கீழ் அமையுமா? என்பது மற்றுமொரு இடர்ப்பாடாகிறது.

இலக்கணிகள் கூறும் விரவுப்பெயர்கள்:

தொல்காப்பியர்:

தொல்காப்பியரின் கூற்றுப்படி (விரவுப்பெயர்கள்)

| | |
|---|---|
| இயற்பெயர் | –4 |
| சினைப்பெயர் | –4 |
| சினைமுதற்பெயர் | –4 |
| முறைப்பெயர் | –2 |
| தான், தாம் | –2 |
| எல்லாம் | –1 |
| முன்னிலை (நீயிர், நீ) | –2. |

இவர் தன்மைப்பெயர்களை உயர்திணைக்குரியன என்று கருதுவதும் ஈண்டு கருத்திற்கொள்ளத்தக்கதாம். இதுபோன்றே எல்லீர் என்ற சொல்லையும் உயர்திணையாகவே கருதுகிறார்.

நன்னூலார்:—

நன்னூலாரின் கருத்துப்படி (பொதுப்பெயர்கள்)

| | |
|---|---|
| முதற்பெயர் (இயற்பெயர்) | –4 |
| சினைப்பெயர் | –4 |

| | | |
|---|---|---|
| சினைமுதற்பெயர் | -4 | |
| முறைப்பெயர் | -2 | |
| தாம், தான் | -2 | |
| எல்லாம் | -1 | |
| தன்மை | -4 | |
| முன்னிலை | -5 | (எல்லீர் உட்பட) |

இவர் தொல்காப்பியர் உயர்திணை என்று கருதிய தன்மையையும், எல்லீர் என்ற முன்னிலையையும் விரவுத்திணையில் அடக்கியது ஈண்டுக் கருத்திற்கொள்ளத்தக்கதாம்.

இலக்கணிகள் விரவுத்திணைப்பெயர்கள் வினைகொண்டு முடியும் போது அதன் திணையை அறியலாம் என்பர். ஆனால் இங்குப் பட்டியல்களில் உள்ள பெயர்களில் குறிப்பாக இடப்பெயர்களில் படர்க்கை நீங்கலான தன்மை, முன்னிலைப்பெயர்கள் அவ்விலக்கணத்துக்குப் பொருந்திவருகின்றனவா?

'யான் வந்தேன்' என்று ஒரே வினைமுற்றுடன்தான் யான் எழுவாயாக அமைய முடியும். இவ்வாக்கியத்தைக்கொண்டு (யான்) திணையைக் கூறுவது இயலாதாகிவிடுகிறது. இவ்விடத்தில் தொல்காப்பியர் கூறிய

"நினையுங்காலைத் தத்தம் மரபில்
வினையோடு அல்லது பால்தெரிபு இலவே"

என்ற கூற்று எப்படிப்பொருந்தும்?

பால் என்பது நாம் குறிக்கும் ஆண்பால், பெண்பால் என்பதை மட்டும் தொல்காப்பியத்தில் குறிக்கவில்லை. "பால் என்பது எண்ணையும் குறித்திருக்கிறது"[6] என்னும் கருத்தே இங்கு உண்மை என்று எண்ணத்தோன்றுகிறது. மேலும் 'பாலறி வந்த உயர்திணைப்பெயர்கள்' பற்றிக் குறிக்கும் போது, யான், யாம், நாம் என்பவற்றையும் சேர்த்திருப்பது[7] இவ்வெண்ணத்தை உறுதிபடுத்துகிறது. இதுபோன்றே முன்னிலை இடப்பெயர்களும், விரவுத்திணைக்கு இலக்கண நூலார் கூறிய இலக்கணத்திலிருந்து விடுபடுகின்றன. இத்தன்மையால் தன்மை இடப்பெயரும், முன்னிலை இடப்பெயரும் ஒன்றுபோலவே செயல்படுகின்றன.

இவை இங்ஙனமிருக்க விரவுத்திணைப்பெயர்கள் இவை என்று பட்டியல் கொடுத்த தொல்காப்பியரும் நன்னூலாரும் தன்மைப் பெயர்கள், முன்னிலை எல்லீர் இவை பற்றிய கருத்தில் மாறுபாடு கொள்வதும் விரவுத்திணை பற்றிய இலக்கணத்தில் ஒரு மாற்றம் தேவை என்பதையே வலியுறுத்துகிறது.

விரவுத்திணை தேவையா?:

விரவுத்திணைக்குரிய இலக்கணத்தில் மாறுபாடு தேவை என்பது ஒருபுறமிருக்க விரவுத்திணை தேவை தானா? என்ற ஒரு வினாவும் எழுகிறது. விரவுத்திணையில் உள்ள பெயர்கள் யாவும் ஒரு சூழலில் (CONTEXT) உயர்திணையாகவும், ஒரு சூழலில் அஃறிணையாகவும் செயல்படுகின்றன. இவையிரண்டையும் ஒரே இடத்திற் கொண்டுவந்து திணையின் அடிப்படையில் அவற்றிற்குப் பொதுவான ஒரு பெயர் ஏன் தரவேண்டும்?

சான்றாகத் தமிழில் மலர் என்ற ஒரு சொல் இருக்கிறது. இது வினைச்சொல்லா? பெயர்ச்சொல்லா? என்று வினா வரும் போது, அது வேற்றுமை உருபு ஏற்கும் தகுதியுடைய இடத்தில் பெயர்ச்சொல் என்றும், கால உருபு ஏற்கும் இடத்தில் வினைச் சொல் என்றும் கூறுகிறோமே யன்றி அதனை (பெயர்-வினை) பொதுச் சொல் என்ற ஒரு பிரிவுக்குள் அடக்குவது இல்லையே! அதுபோன்றே விரவுத்திணைக்கண் அமையும் பெயர்களை ஏன் நாம் ஒரே வடிவம் உடைய இரு வேறு சொற்களாக எடுத்துக் கொள்ளக் கூடாது? என்பது இங்குச் சிந்தித்தற்குரியது.

மேலும் தொல்காப்பியம் விளிமரபில் பெயர்ப்பாகுபாடு செய்கின்றபோது 'உயர்திணை விரவுப்பெயர்கள், உயர்திணைப் பெயர்கள், அஃறிணைவிரவுப்பெயர்கள், அஃறிணைப்பெயர்கள் என்று நான்காகப் பாகுபாடு செய்து கொள்கிறார்.[3] இப்பகுப்பினை உயர்திணை, அஃறிணை ஆகிய இரண்டிலேயே அடக்கிவிடமுடியும். இதனால் விரவுப்பெயர் என்ற பகுப்புத் தேவைதானா? என்ற சிந்தனைக்கு இடமளிக்கும் வகையிலேயே இவ்விரவுத்திணைப் பகுப்பு அமைந்துள்ளது.

இதுகாறும் கூறியவற்ருல் விரவுத்திணை என்ற ஒரு பகுப்பில் இன்றியமையாமை ஐயப்பாட்டிற்குரியது என்பதும், அவ்வாறு அஃதின்றியமையாத ஒன்றே எனின் அதற்குரிய இலக்கணத்தினைப் பற்றி ஒரு மறுபரிசீலனை தேவை என்பதும் தெளிவாகிறது.

1 தொல். சொல். 1.

2 நன். 261.

3 சுந்தரமூர்த்தி,கு; பெயர் பற்றித் தொல்காப்பியர், ப. 186. தொல்காப்பிய மொழியியல், அண்ணுமலைப்பல்கலைக்கழகம், 1972.

4 தொல். சொல். 18.

5 ச. அகத்தியலிங்கம், 'தொல்காப்பியரின் தொடரனியல்', ஆராய்ச்சி, 1, 1969.

6 திண்ணப்பன், சுப. தொல்காப்பியத்தில் இலக்கணக்குறியீட்டுச்சொற்கள், தொல்காப்பிய மொழியியல், அண்ணுமலைப்பல்கலைக்கழகம், 1972, பக். 369.

7 தொல். சொல். 162.

8 சுந்தரமூர்த்தி, கு. பெயர் பற்றித் தொல்காப்பியர், தொல்காப்பிய மொழியியல், அண்ணுமலைப்பல்கலைக்கழகம், ப. 180, 1972.

# தமிழும் தெலுங்கும்

சோமலெ
சென்னை

தமிழரைத் தெலுங்கர்கள் அரவவாடு என்பர். தெலுங்கர்களைத் தமிழர் வடுகர் என்று குறிப்பிடுவது உண்டு. வடுகர் என்றால் வடக்கத்தியர் என்று பொருள். சங்க இலக்கியங்களான குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு முதலிய நூல்களிலும் மொழி பெயர்த்தேயத்தராகிய குல்லைக்கண்ணி வடுகரைப் பற்றிச் (தெலுங்கர்களைப் பற்றி) சில குறிப்புகள் காணப்படுகின்றன.

சிலப்பதிகாரத்தில் சேரன் செங்குட்டுவனுக்குத் துணைபுரிந்த மன்னர்களாகப் பாராட்டப்பெறும் நூற்றுவர் கன்னர் எனப் படுபவர், ஆந்திரத்தை ஆட்சி செய்த சாதவாஹன மன்னர்கள் ஆவர். சதகன்னி என்ற அம்மன்னர்களின் பெயரையே இளங்கோவடிகள் நூற்றுவர் கன்னர் என்று தமிழாக்கம் செய்துள்ளார்.

## இரண்டாவது கட்டம்

தமிழர் தெலுங்கர் உறவில் இரண்டாவது கட்டம் பல்லவர் ஆட்சிக் காலமாகும். இக்காலத்தில் பத்தி இலக்கியம் வளர்ந்து தேவார நாயன்மார்களாகிய அப்பரும் சுந்தரரும் சம்பந்தரும், ஸ்ரீசைலம் (சிவசயிலம்), திருக்காளத்தி முதலிய தெலுங்கு நாட்டுத் தலங்களைப் பாடினர். ஆழ்வார்களும் தெலுங்கு நாட்டுத் தலங்களைப் பற்றிப் பிரபந்தங்கள் பாடினார்கள்.

மூன்றுவது கட்டம்

பிற்காலப் பல்லவர் ஆட்சியில் சோழவம்சத்தின் ஒரு பிரிவு ராயலசீமைப் பகுதிக்குக் குடியேறி இப்போது கடப்பை மாவட்டம் என்று சொல்லப்படும் பகுதியிலுள்ள ரேநாடு என்னும் ஊரிலிருந்து ஆட்சி செய்து வந்தனர். பிறகு அவர்கள் நெல்லூர் மாவட்டத்தில் உள்ள 'பாகநாடு' என்னும் இடத்துக்குக் குடிபெயர்ந்தார்கள். தெலுங்குக் கல்வெட்டுக்களில் மிகப்பழமையானவை ரேநாட்டுச் சோழர்கள் பொறித்த கல்வெட்டுக்களே.

திருமண உறவு

சோழர்கள் ஏற்றம் பெற்றிருந்த போது. தெலுங்கு நாடு வேங்கிச் சீமை என்று பெயர் பெற்றுக் கீழைச் சாளுக்கியரால் ஆட்சி செய்யப்பட்டது. தஞ்சை சோழ மன்னர்களும் கீழைச் சாளுக்கியரான வேங்கி நாட்டு மன்னர்களும் திருமணஉறவு கொண்டனர். வேங்கை நாட்டு விமலாதித்தன் இராஜராஜ சோழனின் மகளான குந்தவையைத் திருமணம் செய்து கொண்டான். விமலாதித்தன் மகன் ராஜராஜநரேந்திரன். முதலாம் ராஜேந்திரச் சோழனின் மகளான அம்மங்கையை மணந்து கொண்டான். இந்த மண உறவுகளின் விளைவாகப் பல தமிழ்க்குடும்பங்கள் தெலுங்கு நாட்டில் குடியேறின. இத்தகைய குடும்பங்கள் மூன்று வகைப்படும் (1) அரமதிராவிட (2) திமிலதிராவிட (3) புதுருதிராவிட.

புதுருதிராவிட குடும்பங்களிலுள்ளவர்கள் தெலுங்கு மொழியை எழுதவும் பேசவும் வல்லவர்களாக இருந்த போதிலும், தங்கள் வீட்டில் தமிழ்தான் பேசுகின்றனர். இந்தத் திராவிட பிராமணர் களின் பழக்க வழக்கங்கள் தெலுங்குப் பிராமணர்களின் பழக்க வழக்கங்களினின்றும் முற்றிலும் மாறுபட்டிருக்கின்றன. தெலுங்கு இலக்கியத்துக்கு இந்த இனத்தார் ஆற்றியுள்ள பணி மிகப் பெரிது.

தெலுங்கில் முதல் இலக்கியம் 10-ஆம் நூற்றுண்டில் தான் தோன்றியது. தெலுங்கு பாரதம் படைத்த நன்னயர் தமிழ் நாட்டு அந்தணர் ஆவார். தெலுங்கில் பழம்பெரும் கவிஞராகிய நன்னெசோடர் சோழ மன்னர் பரம்பரையைச் சேர்ந்தவரே யாவர். அவர் தாம் இயற்றிய 'குமாரசம்பவ' காவியத்தின்

படிகையில் தாம் உறையூரை ஆண்ட கரிகால் சோழன் மரபினர் என்று கூறியுள்ளார். நன்னயரும் நன்னெசோடருமே தெலுங்கு மொழியில் முதல் கவிஞர்கள் ஆவார்கள்.

தெலுங்கு மொழியில் 12-ஆம் நூற்றுண்டில் பால்குரிகி சோமநாதர் என்பவர் 'வசபபுராணம்' இயற்றினுர். இது பெரிய புராணத்தின் தெலுங்கு வடிவம் எனலாம். இவர் படைத்த 'விருஷாதிப' சதகத்தில் தமிழ்ப்பாடல் ஒன்றை இயற்றி இணைத்துள்ளார்.

ஆண்டாளின்கதை, சிறுத்தொண்டர்கதை, தொண்டரடிப் பொடியாழ்வார் வரலாறு ஆகியவையும் தெலுங்கில் காவியங் களாக்கப்பட்டிருக்கின்றன. மாணிக்கவாசகர் வரலாற்றைப் போன்ற கதையொன்றும் வழங்குகிறது.

**தமிழ் நாட்டில் தெலுங்கர்**

சோழ மன்னர் சிலர் தெலுங்கு நாட்டுடன் திருமணஉறவு கொண்ட போது, அரச குலத்துப்பெண்களுடன் தெலுங்கு மொழி பேசும் குருக்கள்மாரும் கவிஞர்களும் தோழிமாரும் பணிப் பெண்களும் சமையல் ஆட்களும் சீர்தனமாக அனுப்பப் பட்டனர்.

இவ்வாறு வந்தவர்களுள் ஒருவரே கவியரசர் கம்பனின் தந்தை என்பர். வடமொழி, தென்மொழி, வடுகு, கன்னடம் ஆகிய நான்கு மொழிகளையே கம்பன் குறிப்பிடுகிருன். தம்மா (தாமரை), அக்கட (அந்தோ) போன்ற தெலுங்குச் சொற்களைக் கம்பன் பயன்படுத்தியுள்ளான்.

கம்பன் தன்னை ஆதரித்த ஓரங்கல் (ஆந்திர நாட்டிலுள்ள வாரங்கல்) மன்னனைப் பற்றி,

"அவனி முழுதுண்டும் அயரா வதத்துடன்
பவனி தொழுவார் படுத்தும் – புவனி
உருத்திர உன்னுடைய ஓரங்கல் நாட்டில்
குருத்திரா வாழைக்குலம்"

என்ற தனிப்பாடலைப் பாடியுள்ளான்.

இதே காலத்தில் நாய், கட்டாயம். மலர், நடுங்கு போன்ற பல தமிழ்ச் சொற்கள் தெலுங்கில் இடம் பெற்றன.

விஜயநகர ஆட்சி

விஜயநகரப் பேரரசு,கிருஷ்ணதேவராயர் ஆட்சியின் சிறப்பாகத் திகழ்ந்தபோது, அவருடைய சிற்றரசர்கள் மதுரையில் ஆட்சிச் செலுத்திப் புகழுடன் விளங்கினார்கள் அக்காலத்தில் மதுரை மாவட்டம் முழுவதிலும், இராமனுதபுரம் மாவட்டத்தில் சாத்தூர் ஸ்ரீ வில்லிப்புத்தூர் வட்டங்களிலும், திருநெல்வேலி மாவட்டம் கோவில்பட்டு சங்கரன் கோவில் வட்டங்களிலும், தெலுங்கு பேசும் மக்கள் குடியேறினர்.

இவ்வாறு குடியேறியவர்கள் கம்மவர், ரெட்டியார். ராஜாக்கள் ஒட்டர் கம்பளத்தார், தெலுங்குச் செட்டியார், தெலுங்கு பிராமணர் சக்கிலியர் எனப் பலவகையினர் ஆவர்.

மதுரை மாவட்டம் பெரும்பகுதி காடாக இருந்தது. தெலுங்கு பேசும் மக்கள் குடியேறிய பிறகே காடுவெட்டிப் பயிர் செய்யப் பட்டது. பயிர்த்தொழிலைத் திருத்தியமைத்த பெருமை இவர் களுக்கு உரியது. ஏற்றம் வாயிலாக மட்டுமே கிணற்று நீரை எடுக்கும் பழக்கம் மதுரை மாவட்டத்தில் தொன்று தொட்டு இருந்தது. தெலுங்கு பேசும் மக்கள் தான் கபலை போட்டுத் தண்ணீர் இறைக்கும் முறையை இங்கு பரப்பினர். கபலையின் தோலைத் தைப்பதற்காக சக்கிலியரை வரவழைத்தனர்.

திருமலை நாயக்கர் காலத்தில் இவர்களில் பலர் பாளையக்காரர் களாகவும், ஜமீன்தார்களாகவும் செல்வாக்குடன் விளங்கினர்.

குறிப்பாக கம்மவ நாயுடுக்கள், தெலுங்குப் பண்பாட்டின் அடையாளமாக இருந்து வருகிறார்கள்.

இவர்களுடைய உடற்கட்டுக்கு. வரகு உண்ணும் பழக்கத்தை இவர்கள் கைவிடாமல் இருப்பது ஒருகாரணமாக இருக்கக்கூடும். வரகு திரிக்கும் திருகைகள் இவர்கள் வீடுகளில் இயங்கிய வண்ண மாக இருக்கும். வரகரிசிச் சோற்றுக்குத் துணையாக இருப்பது முனைத்தயிர்.

தென் மாவட்டங்களில் காடுகளை வெட்டி நாடாக்கியதில் கம்மவர் பங்கு மிகுதி என்பதை ஊர்ப்பெயர்களே உணர்த்தும். சப்பாத்திக் கள்ளி புதர் புதராக மண்டிக் கிடந்த பள்ளங்களைத் திருத்தி, செய்நேர்த்தி செய்து, கண்மாய் (ஏரி) வெட்டி அதைச் சுற்றி நாவல், வேம்பு, புளி, வாகை, முதலிய பலவகை மரங்களை உண்டாக்கினர் இம்முயற்சியில் சேடா, நட்டுவக்காலி, தேள், பூரான் போன்ற கொடிய உயிரினங்களையும் பொக்கனல்களை உண்டாக்கக் கூடிய வண்டுகளையும், உடும்புகளையும், பாம்புகளையும் இவர்கள் சந்தித்தனர்.

படையில் பணிபுரிவதிலும் வேட்டையாடுவதிலும் தெலுங்கு பேசும் தமிழர்கள் வல்லவர்கள். போர்மங்கலம் போல ஏர் மங்கலமும் — குறிப்பாக புன்செய் பயிரிடுதல் — இவர்களுக்கு கைவந்த கலை.

நாய், வான்கோழி, புனுகுப்பூனை முதலியன வளர்ப்பவர்கள் தெலுங்கு பேசும் தமிழர்களில் உள்ளனர். எனினும் எருமை மாடுகளை, யானைக்குட்டிகளைப் போன்று பொலிகிடாவாகப் பேணி வளர்ப்பதில்தான் தெலுங்கு பேசும் நாயக்கர்கள் இன்பம் காணுவர். எருமை மாட்டுப் பண்ணைகளை நடத்துவதில் தெலுங்கு பேசும் தமிழர்களுக்கு ஈடும் இணையும் எவரும் இல்லை.

தெலுங்கர் தமிழ் நாட்டில் ஆட்சி செய்த அடையாளங்கள் நமது மொழியிலும் அகராதியிலும் பதிந்து விட்டன. "நமது சங்கீதமும், நாட்டியமும் தெலுங்கில் மூழ்கிக் கிடக்கின்றன. நமது பாடகர்கள் பாடுவது எல்லாம் தெலுங்குக் கீர்த்தனைகள். தாசிகள் ஆட்டத்தில் பாடும் வர்ணங்கள் ஜாவாலிகள் முதலியவற்றில் நல்ல உருப்படிகள் எல்லாம் தெலுங்கு, திருமணங்களில் பத்யம், லாலி, என்று பாடப்படுவதெல்லாம் தெலுங்குமுறை. கவனம், சொகுசு எச்சரிக்கை, வாளிக்கை, கொஞ்சம், என்பன எல்லாம் தெலுங்குச் சொற்கள் என்கிறார் கவிஞர் திரு. சுப்பிரமணிய பாரதியார்.

### நான்காவது கட்டம்

விஜய நகரப் பேரரசு அழிந்தபிறகு ஆந்திரத்தில் ஏற்றம் பெற்ற முஸ்லீம்களின் கொடுங்கோன்மை தாங்கமுடியாமல் ஆயிரக்

கணக்கான குடும்பங்கள் திருப்பதி வழியாகக் கோயம்புத்தூர் மாவட்டத்தில் குடியேறினர். இவர்கள் பெரும் பாலும் கம்மவ நாடுகள் ஆவார்கள். ஏற்கெனவே விஜயநகரத்துப் படைகளில் பண்புரிந்தவர்கள் போர்க்கருவிகளை ஏந்தி கொங்கு நாட்டை இன்று பொன் கொழிக்கும் பூமியாக ஆக்கியிருக்கிறார்கள். இவ்வாறே தென்ஆற்காடு மாவட்டத்தில் வேளாண்மைத் தொழிலை -புஞ்சையாக வேளாண்மையை சிறப்பாகச் செய்த பெருமை தெலுங்கு பேசும் ரெட்டியார்களைச் சேரும்.

நமது தலைமுறையில் ஜகவீரபாண்டியர் வெங்கடராஜுலு ரெட்டியார் போன்ற தெலுங்கு பேசும் தமிழர் தமிழுக்கு ஏற்றம் தந்திருக்கின்றனர். திருப்பதியிலுள்ள கீழ்த்திசை ஆராய்ச்சி நிலையத்தில் ஏராளமான தமிழ்ச்சுவடிகள் உள்ளன. இந்த நிறுவனத்தின் மூலம் திருமலை திருப்பதி தேவஸ்தானம் கீழ்க்கண்ட தமிழ் நூல்களை வெளியிட்டு இருக்கிறது.

1 செவ்வைச் சூடுவார் பாகவதம் பாகம் 1. 2 செவ்வைச் சூடுவார் பாகவதம் பாகம் 2. 3 நித்யானு ஸந்தானம் 4 திருவாய் மொழி விளக்கம் 5 செம்பொருள் 6 திருவேங்கட உலா 7 சங்கர விலாசம் 8 ரகுவம்சம் 9 திருமலை ஒழுகு 10 ராமஜயத் திருப்புகழ் 11 திருவேங்கட தலபுராணம் 12 ஸ்ரீவெங்கடேச்வர சுப்ரபாதம் 13 திருவேங்கடமுடையான் மீது ஆழ்வார்கள் அருளிய செய்யுள்கள் 14 ஆழ்வார்களின் மங்களாசாஸனம் பாசுரங்கள் 15 திருப்பாவை 16 திருவாய் மொழி அகப்பொருள் பாசுரங்கள் 1, 2. 17 திருக்குறள் (காமத்துப்பால்) 18 திருக்குறள் (பொருட்பால்) 19 பாலசரிதம் 20 மணிமேகலை (தெலுங்குமொழிபெயர்ப்பு 21 யாப்பொலி 22 சித்தாந்தத்ரய சங்கிரஹம் 23 திருவேங்கடவன் 108 திரு நாமங்கள்.

மேற்கண்ட நிறுவனம் 1968-ம் ஆண்டு அளவில் திருப்பதி ஸ்ரீ வெங்கடேசா பல்கலைக் கழகத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டது. அதன் பிறகு இந்த நிறுவனம் தமிழ் நூல்களை வெளியிட்டதாகத் தெரியவில்லை. இப்பல்கலைக் கழகத்தில் டாக்டர் நா. சுப்பு ரெட்டியார் பேராசிரியராக இருந்தபோது பல தமிழ் நூல்கள் சிறந்த முறையில் வெளிவந்தன.

# Code-Mixing in Modern Tamil Literature

M. Gnanam
Annamalai University

*Introduction:*

When a society is exposed to two languages it is likely that the use of one language affects the other in actual practice. In India, English had been a link language for a long time and still it continues to be in at least some major domains of the formal social activities. It has been a prestigious language also for Indians living in different parts of the country since many decades. Also most of the basic concepts were made known to the people only through English. The close contact that Indian languages has with English was so vast that now one could easily find mixing English feature in many of the indegeneous languages. This has an effect on literature also. The present paper analyses the nature of code mixing, with reference to mixing English features in Tamil language (as found in Modern literature).

*1. Code-mixing : its connotation.*

Code-mixing, here represents the use of English usages, reflected in Tamil language and results into a mixed language,

which is a variety of Tamil, characterized by the large number of English words.

2. *Data for analysis*

A short novel entitled *natiyaitheti vanta katal* 'the sea, which came in search of the river', written by Maharishi, and published in *Anandavikatan* (30—10—78) is taken for the analysis of code-mixing in Modern literary Tamil. Though it cannot be representing the whole Tamil prose, analysig the nature of code mixing reflected in it will certainly shed some light on the extent of code-mixing, prevalent to-day in the modern literary Tamil.

3. *Mixing English-levels, factors and techniques.*

A story or novel is developed in three ways viz. (1) author's narration, (2) Speeches or letters of the personal and (3) thoughts of the personal. In these three, English words are mixed in various *levels* viz. word, phrase and sentence levels. The *factors* for the mixing English lexical items can be need filling, prestige, domain of use, formal and informal situation / context, and the roll relationship among the participants in the conversation. In *presenting* English lexical items in Tamil three techniques are adopted optionally viz. (i) to avoid unintelligibility (and sometimes only for the sake of emphasis) some English phrases are translated and are given along with, (ii) in order to avoid confusion whether this is a Tamil word or English word, English words are put within quotes and (iii) to accommodate English sound (f) the symbol ஃப is used. (So far only this script reform has taken place to symbolize English sounds). Now we will examine here mixing English is done (i) in which of the above said three ways of development, (ii) what are the factors which favour mixing and (iii) how it is presented.

*4. Code-mixing in the three ways of development of the story*

*4.1. Author's narration.*

Here only word-level berrowing are made. It is to be mentioned here that only those words which are most commonly prevalent in the day-to-doy speech behaviour are used. Uncommon Tamilized forms are not preferred in the author's narration. We could attribute only the conceptional factors are responsible for this type of mixing.

These words are not represented within quotes. Look at the following examples: *ka:mpounḍ o:ramaka geṭṭai piṭitthukkonṭu* ...... (page 103) 'holding the *gate*, by the side of *compound* wall'.

'*cila sna:ppukaḷai eṭuthukonṭal Sumitra*'

'*Sumitra took some snaps*' (page 103).

The script ஃப is not normally used, perhaps due to the reasons that they are very common and even without this special symbol a native speaker can read ப as (f) in its due place of occurrence as in டிபன் '*tiffin*', ஆபீஸ் '*office*' etc.

*avar* ......... டிபன் *sa:ppiṭṭuviṭṭu* ...... *kanna:ṭi mun niṟpa:r* (page 112)

He would stand before mirror ......... after taking his breakfast. But sometimes ஃப is used as in

*me:lum* ஃபைலைப் *puraṭṭinar* 'he turned the leaves of the file further'.

In this case we do not find repetition of the meaning in running matter. Occasionally meanings are given within brackets. .........*vilaikku viṟkavum, ataipaṟṟina pe:ramkaḷaippe:cavum* ...... *muḻu urimai* (*pavar a:f attarni*) 'full right to sell and bargain (power of Attarney)' (page 109).

4.`. *Conservation of personal (c of p.)*

C. of P. is the context in which we find a number of English words and phrases. Sometimes full sentences are also used.

e.g. *Words* 1. *Sha:rt ha:nd nalla spi:d enkira:rkal.* (page 63)
(She) says that (she has) good speed in short-hand.

*Phrases* 1. *leftฺ saydil mu:nṟa:vatu bangla:* (page 85)
third bungalow in left side.

2. *Kampli:ṭ ṭri:tmenṭ eṭuttukkaṇum* (page 77).
(one) should take complete treatment.

*Sentences*: 1. *So: ay vil ṭe:k dis privile:j* (page 63).
'So, I will take this previlege.'

2. *Si ha:s vonḍarful bu:sam* (page 99)
'She has wonderful boosm.'

The degree of English mixing reflected in the language behaviour of the personal, with high literacy level is more in formal situations. For example in an interview for a selection for a job, which is a very formal situation, the following sentences are found (page 63).

*ai va:nṭ a ja:b so: ay vil ṭe:k dis privile:j* (page 63)

"I want a job or so, so I will take this privilege".

*yu: beṭṭar go: and ḍu: kam ṭuma:ro:* (page 63)
'You better go and do come tomorrow'.

Topic also plays an important roll in the mixing of English usages. Extreme emotion or delicate affairs cause mixing more English usages.

e.g. *ay ka:nṭ ṭa:lare:ṭ di:s tings* 'I cannot tolerate these things. (page 83)

(one of the personal says when he sees that his wife is not loyal to him)

*hav ka:n ay......* 'how can I ......' (page 83).

(one of the personal says to his bass, when he has to talk to him about the latter's wife's disloyalty).

As far as the presentation is concerned, roughly we can say that extraordinary lexical items are put within quotes. This feature is not standardized, perhaps due to the reason that to put all the English items will be awkwardly unnecessary, but at the same time it is difficult to decide those "extraordinary" English lexical items which need to be represented within quotes. This feature is found in the present story also.

*tiṭi:renṟu 'mu:ḍ' varumpo:tu dikṭe:ṭ ceyva:r* (page 44)
"Suddenly he will dictate when he gets mood'.

But we have,

*piraku avar puttakattukka:na viṣayattai*
*dikṭe:ṭ ceytu konṭirunta:r* 'then he was dictating matter for the book' (page 45).

Similar is the case of using ஃப for (f). Sometimes it is used and sometimes it is left. This also needs standardization.

e.g. *ṣi:ha:s ga:t* வொண்டர்புல் *bu:sam*
'she has got wonderful bossom (page 99)
*me:jai me:l inta* ஃபைலே *vaittatuya:r.* (page 82)
'who did put this file on the table.'

The technique of repetition is found abundantly only in conversation. A writer incorporating, repetition, besides depic-

ting actual mode of conversation brings intelligibility in his/her writings for more number of readers. This feature is observed in this short novel also.

e.g. *seṭṭil ḍi me:ṭṭar smu:tli, viṣayattai na:cu:kka:ka muṭikka e:rpa:ṭu cey* (page 83).

'settle the matter smoothly, make arrangements to finish the matter smoothly.

4.3. *Thoughts of Personal.*

This is in between the above two ways of development, as far as English mixing is concerned. It gives room for the mixing English, depending upon the personal. But topic, formal situations have no much as effect on this way of development as the second one has. There is never a repetition of the meaning for intelligibility sake.

e.g. *nalla ḍa:rk bḷu:vil ska:rf* (page 46)
Scarf in dark blue colour.

*paḷiccenac collum solyu:ṣan muraikaḷ*
'saying solutions quickly for problems.'

5. *Conclusion*

In modern literature, code mixing is almost unavoidable. But at the sametime it should be stated that the modern Tamil literature meant not only for elites, but also for commonfolk, which knows only Tamil. So the modern writer should use only those commonly prevalent usages and wherever some uncommon usages are used they should be represented within quotes. Their meaning also should be given either in the brackets or through the technique of repetition. The analysis of present story shows that standardization is needed in these points.

# செய்யும் என்னும் ஏவல்வினைமுற்று

சுப. திண்ணப்பன்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

0. செய்யும் என்னும் வினைவடிவம் தமிழில் வினைமுற்றாகவும் பெயரெச்சமாகவும் ஏவல் வினைமுற்றாகவும் வருகின்றது. குதிரை ஓடும் என்ற வாக்கியத்தில் வினைமுற்றாகவும் ஓடும் குதிரை என்ற தொடரில் பெயரெச்சமாகவும் நீர் சென்னைக்கு ஓடும் என்ற வாக்கியத்தில் ஏவல் வினையாகவும் இருப்பதைக் காணலாம். இவற்றுள் வினைமுற்றாக அமையும் திறத்தையும் பெயரெச்சமாக வரும் இயல்பினையும் தொல்காப்பியம் (சூ. 707, 712, 723,) நன்னூல் போன்ற இலக்கண நூல்கள் எடுத்துரைக்கின்றன. ஏவல் வினை முற்றாக வருவது பற்றி இவை ஒன்றும் பேச இல்லை.

1. ஏவல் வினைமுற்றாக வரும் வடிவம் பன்மையிலும், மரியாதை உணர்த்தும் ஒருமையிலும் வருகின்றது.

| | | |
|---|---|---|
| பன்மை:- | வெங்கணும் ஊனும் வேண்டுவ கொடும் | மணி. 16:77 |
| | நின்றறி மாதவீர் ... இவ்வினை உரைம் | மணி. 22.164 |
| ம. ஒருமை:— | வாரும் | பரி. 14.19 |
| | வாங்கும் நீர் முத்து | சிலம்பு. 7.28.2 |
| | தொழும் | மணி. 11.143 |

2. செய்யும் என்ற ஏவல் வினைவடிவம் செய்ம் என்று திரிந்தும் ஏவல் உணர்த்துகின்றது.

| | | |
|---|---|---|
| பன்மை:- | உண்ம். | புறம். 178.5 |
| | கொண்ம் | புறம். 152.29 |
| | தம் | பதிற்று. 85.4 |
| | போம் | மணி. 6.26 |
| ம.ஒருமை | தம் | புறம். 203.4 |
| | தின்ம் | புறம். 150.13 |
| | உண்ம் | புறம். 392.15 |

3. செய்ம் என்று திரிவதுடன் ஏ, ஓ, அதி என்ற அசைச் சொற்கள் ஏற்றும் செய்யும் என்னும் ஏவல் வினைவடிவம் வரும்.

| | | |
|---|---|---|
| பன்மை:- | வம்மோ | புறம். 221.10 |
| ம.ஒருமை:- | சென்மே | புறம். 333.7 |
| | சென்மதி | பதிற்று. 53.14 |
| | சென்மோ | புறம். 381.5 |

சென்மதி சென்மோ என்பனவற்றுள் வரும் மதி, மோ என்பன முன்னிலை அசைச்சொற்கள் எனத் தொல்காப்பியம் (சூ. 759) மொழியும். வரதராசனார் (1954.249) இசுரேல் (1973.183) போன்ற மொழியியல் அறிஞர்கள் இவற்றுள் வரும் ம் என்பது ஏவல் பன்மை/மரியாதை ஒருமை உணர்த்தும் விகுதி என்று பகுத்துரைப்பர். அகத்தியலிங்கனார் மரியாதை உணர்த்துவதுடன் உறவின் நெருக்கத்தையும் உணர்த்துவதாக உரைப்பர் (1979).

4. சீவகசிந்தாமணியில் ஒரும் என்ற வடிவம் மரியாதை ஒருமையில் இரண்டு பாடல்களில் (377:3, 888:3) வருகின்றது.

ஒரும் ஐம்பொறியும் ஓம்பி உளபகல் கழிந்தபின்றைக்
கூர்எரி கவரும் போழ்திற் கூடுமோ குறித்த வெல்லாம்
377:3-4

வாரம் பட்டுழித் தீயவும் நல்லவாம்
தீரக்காய்ந்துழி நல்லவும் தீயவாம்
ஒரும் வையத்தியற்கை யன்றே 881:1,2,3

இவற்றில் 888 வது பாடலில் உரையெழுதும் போது உச்சிமேற் புலவர் நச்சினார்க்கினியர் நும்மிலே இதனை ஓர்ந்து பாரும் என முன்னிலைப் பன்மையாக்கினார்; 'ஓரும்' என்னும் முற்றுச்சொல், "பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மை (தொல், சொல், வினை, 30) என்ற சூத்திரத்தில் விளக்கின நிகழ்கால உம்மீறன்றி எதிர்கால முணர்த்தும் முன்னிலைப் பன்மையாகலின்; இஃது ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவி'' (பக்கம் 444) என்று விளக்கம் எழுதியுள்ளார். இலக்கண உலகில் ஏவல் வினைமுற்றாக வரும் செய்யும் என்னும் வடிவத்தையும் வினைமுற்றாக வரும் செய்யும் என்னும் வடிவத்தையும் உணரத்தலைப்பட்ட நிலையினை இந்த உரையில் நாம் காணுகிறோம். இவை இரண்டும் வேறுபடுமாற்றை விளக்கிக் காண்போம்.

5. செய்யும் என்னும் வடிவம் ஏவலல்லா வினைமுற்றாகவும் பெயரெச்சமாகவும் வரும்போது இறப்பிலாக் காலமாகிய எதிர் காலத்தையும், நிகழ்காலத்தையும் உணர்த்தவல்லது. ஏவல் வினை முற்றாக வரும்போது எதிர்காலம் மட்டுமே உணர்த்தும்.

6. தொல்காப்பியம் (சூ 712) நன்னூல் (சூ. 348) கருத்துப்படி செய்யும் என்னும் வடிவம் ஏவலல்லா வினைமுற்றாக வரும்போது பல்லோர் படர்க்கை, முன்னிலை தன்மையில் வராது. ஏவல் வினை முற்று வடிவம் முன்னிலையில் மட்டுமே வரும்.

7. வல்வினையடியில் ஏவலல்லா வினைமுற்று வடிவம் நட-க்கு-ம்', பார்-க்கும், கொடு-க்கும், ஓர்-க்கும் என்பது போல அடிச்சொல்லுக்கும் உம் ஈற்றுக்கும் இடையில் -க் க்- பெறும். ஏவல் வினையில் '-க் க்-' பெறாது வரும். நடவும் – பாரும் – கொடும் ஓரும்.

8. மெல்வினையடிகளில் ஆ, போ, வே, நோ, என்பன இடையில் கு பெற்றும் ஏவலல்லா வினைமுற்றாக வருவது உண்டு; இவை, ஏவலாக வரும்போது 'கு' பெறா. போகும் - போம், ஆகும் - ஆம், வேகும் - வேம், நோகும் - நோம்.

9. தா, வா, நில், போன்ற வினையடிகள் ஏவலல்லா வினை முற்று வடிவத்தில் முறையே தரும், வரும், நிற்கும், என்ற மாற்றம்

பெறும். ஏவல் வினைமுற்று வடிவத்தில் இவை தாரும், வாரும், நில்லும், என்ற மாற்றம் பெறும்.

10. பழந்தமிழில் செய்யும் என்னும் வினைமுற்று வடிவத்திற்குப் பின்பால் காட்டும் விகுதிகள் வருகின்றன. (எ – கா) கொய்யுமோன், தின்மார், இசைக்குமன. கள் என்னும் பன்மை விகுதி இவ்வினை முற்று வடிவத்தின் பின் வருவதில்லை. ஆனால் ஏவல்வினைமுற்று வடிவத்தில் செய்யுங்கள், வாருங்கள் என்பதுபோல கள் என்னும் விகுதி வருவதைக் காணலாம். சிலப்பதிகாரத்தில் நண்ணுமின்கள் (16:5:1) என்ற வடிவம் ஏவல் பன்மை, வினைமுற்றாக வருவதைப் பார்க்கிறோம்.

இக்காலத்தமிழில் செய்யுங்கள் என்ற வடிவம் ஏவல்பன்மையை உணர்த்துகிறது. தமிழகத்தின் தென்பகுதிப் பேச்சு வழக்கிலும், இலங்கைப் பேச்சு வழக்கிலும் செய்யும், செய்யுங்கள் என்ற இரு வடிவங்களும் மரியாதை ஒருமையை உணர்த்த வருகின்றன. செய்யும் என்ற வடிவத்தைத் தன்னைவிட வயதில் மூத்த–சமுதாய நிலையில் தாழ்ந்த ஒருவரிடமும், செய்யுங்கள் என்ற வடிவத்தை இன்னும் உயர்ந்தவர்களிடத்து மரியாதை ஒருமையாகவும், பன்மையிலும் ஒருவர் வழங்குவதைப் பார்க்கிறோம். நீர் வாரும் என்பது முதல் நிலை மரியாதையாகவும், நீங்கள் வாருங்கள் என்பது அடுத்த நிலையில் உயர்ந்த மரியாதை ஒருமையாகவும் அமைந்துள்ளன.

11. இக்காலத்தமிழில் செய்யும், செய்யுங்கள் என்ற ஏவல் வடிவங்களுடன், ஏன் என்ற விகுதி சேர்ந்து செய்யுமேன், செய்யுங்களேன் என வருவதும் உண்டு. இவ்வாறு வரும்போது நீ என்ற முன்னிலை ஒருமை வடிவமும், மரியாதை ஒருமை/பன்மை வடிவங்களும் எழுவாயாக வந்து ஒருவித மரியாதை உணர்த்து கின்றன. இவ்வடிவங்கள் 'ஏவலுக்குட் படுவோர் அந்த ஏவல் தொழில் செய்தாலும் செய்யலாம். செய்யாமலும் போகலாம்'. என்ற பொருளை உணர்த்துகின்றன. ஆனால் ஏன் விகுதி அற்ற ஏவல் வினைகளில் ஏவலுக்குட் படுவோர் ஏவல் தொழிலைக் கட்டாயம் செய்தல் வேண்டும் என்ற நிலை உள்ளது. (மு. சண்முகம் பிள்ளை 1966) சில சமயங்களில் ஒலியழுத்த வேறுபாட்டால் ஒருவர் பல

முறை வேண்டியும் ஒரு காரியத்தை செய்யாத நிலையிலே வேண்டா வெறுப்பாகக் கூறுமிடத்தும் இந்த ஏன் சேர்ந்த வடிவங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

12. இக்காலத் தமிழில் செய்யும் என்ற ஏவல்வினைமுற்றுக்கு ஏற்ற எதிர்மறை மரியாதை ஒருமை வடிவங்களும் சில கிளை மொழிகளில் இருப்பதைப் பார்க்கிறோம்.

வாரும் — வாராதிர்ம் < வாராதீரும்

13. இக்காலத்தமிழில் செய்யும் என்னும் வினைமுற்று வடிவம் எதிர்காலம் உணர்த்தும் அஃறிணை ஒருமையாகவும், பன்மையாக வும் மட்டுமே வருகின்றன. ஆண்பால், பெண்பால், பலர்பால் ஆகியவற்றில் -ப்ப்-, -ப்-, -வ்- என்ற எதிர்கால இடைநிலை பெற்ற வினைமுற்றுக்களே வருகின்றன.

14. தொல்காப்பியம் 'உம் உந்தாகும் இடனுமாருண்டே' (சூ – 779) என்று கூறும் விதி செய்யும் என்னும் வினைமுற்று வடிவத்திற்கே பொருந்தும். செய்யும் என்னும் ஏவல் வடிவத்திற்குப் பொருந்தாது.

15. செய்யும் என்னும் வினைமுற்று வடிவத்தில் –உம் என்பது எதிர்கால விகுதியாகும். செய்யும் என்னும் ஏவல் வினைமுற்றிலோ (உ)ம் என்பது ஏவல் பன்மை விகுதியாகும். இது நாளடைவில் மின், மீன்கள், ஈர், ஈர்கள் பன்மையை .மட்டும் உணர்த்த தொடங்கிய நிலையில் மரியாதை ஒருமை விகுதியாக மாறிற்று. இலக்கண விளக்கம் என்னும் 17–ம்நூற்றுண்டு இலக்கண நூலில் தான் உம் என்பது ஏவல் வினைமுற்று விகுதி என்று முதன் முதலில் கூறப்பெறுகிறது. (சூ. 237)

16. தமிழோடு ஒத்த ஏனைய திராவிட மொழிகளையும் ஒப்பிட்டு நோக்கும்போது செய்யும் என்னும் ஏவல் வடிவம் கோத்தா, தோடா, பழங்கன்னடம், பழங்தெலுங்கு, கோண்டி, ஆகிய மொழிகளிலும் இருப்பதைப் பார்க்கலாம். இம்மொழி களிலும் முதலில் இவ்வடிவம் பன்மையை உணர்த்திப் பின்னர்

மரியாதை ஒருமையை உணர்த்த மாறிய நிலையைத் தான் பார்க்க முடிகிறது. தொல் திராவிடமொழியில் நீம் என்ற முன்னிலைப் பன்மை வடிவத்திற்கேற்ற ஏவல் வினையாகச் செய்யும் என்ற வடிவம் ஏற்பட்டது. தொல்திராவிட மொழியில் நீர் என்ற முன்னிலைப் பன்மைவடிவமும் உண்டு. ஆனால் நீம் என்பது காலத்தால் முந்தியதாகக் கருதப்படுகிறது.

17. தொல்பழந்தமிழில் செய்யும் என்றபன்மை வடிவத்துடன் பன்மை விகுதி மின் சேர்க்கப்பெற்றுச் செய்ம்மின் என்ற வடிவம் உருவாயிற்று. இவ்வாறு ஒரு பன்மை விகுதியுடன் இன்னொரு பன்மை விகுதி சேர்க்கும் இயல்பு தமிழுக்குப் புதியதன்று. வருவீர்கள். போவீர்கள் என்ற காட்டுக்களை நோக்குக. பழந் தமிழில் செய்ம் என்பது ஒருமை உணர்த்தத் தொடங்கிய நிலை உருவாயிற்று. அடுத்த பின்பழந்தமிழில் செய்ம்மே, செய்ம்மதி, செய்ம்மே என்பன ஒருமையிலும் செய்ம்மின்கள் என்பது பன்மை தோன்றின. இடைக்காலத் தமிழில் செய்ம்மின் என்பது ஒருமை உணர்த்துகின்றது. அத்துடன் செய்யுங்கள் என்ற வடிவம் உரு வெடுத்தது. கல்வெட்டுகளில் இவ்வடிவத்தைக் காணலாம். இக் காலத்தமிழில் செய் என்பது ஏவல் ஒருமையிலும் செய்யும் செய் யுங்கள் என்பன ஏவல் மரியாதை ஒருமையிலும் செய்யுங்கள் என்பது ஏவல் பன்மையிலும் வழங்குகின்றன.

# தொல்காப்பியர் ஏழாம் வேற்றுமைக்குத் தந்திருப்பவை உருபுகளா, பொருள்களா?

க. திலகவதி
அண்ணுமலைப் பல்கலைக்கழகம்

தொல்காப்பியர் வேற்றுமையியலை ஒரு குறிப்பிட்ட முறையில் அமைத்துள்ளார். குறிப்பாக ஏழு வேற்றுமை உருபுகளைப் பற்றியும் தனித்தனியே கூறுகையில் இந்தத் தனிப்பட்ட அமைப்பு முறை நன்கு புலனுகிறது, முதலாம் வேற்றுமை தவிர்ந்த ஏனைய ஆறு வேற்றுமை உருபுகள் ஒவ்வொன்றிற்கும் ஈரிரண்டு நூற்பாக்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அவ்விதம் ஒதுக்கப்பட்டுள்ள இரு நூற்பாக்களில் முதலாவது குறிப்பிட்ட வேற்றுமையுருபின் பெயரையும் அதன் பொதுவான பொருளையும் கூறுவது; இரண்டாவது அந்த உருபைப் பற்றிய சிறப்புக் குறிப்புக்களைக் கூறுவது.

இத்தகைய சிறப்புக் குறிப்புக்களைக் கூறும் முறைமையில் ஒரே வகை ஒழுங்கினைப் பின்பற்றவில்லை தொல்காப்பியர். ஐ- உருபிற்கு அதனைத் தொடர்ந்து வரும் வினைகளைக் கூறுகின்ருர் மூன்ரும், நான்காம் வேற்றுமை உருபுகளைப் பொருத்தமட்டில், அவற்றிற்குரிய இரண்டாவது நூற்பாக்களில், அவற்றின் சிறப்புப் பொருள்களையும் அவை இடம் பெறும் தொடரின் அமைப்பு முறையினையும் கலந்து கூறுகின்ருர். இவ்வகையில் ஏழாம் வேற்றுமைக்கும் இரண்டு நூற்பாக்கள் உள்ளன. (565, 566).

ஏழாம் வேற்றுமைக்கான இரண்டாவது நூற்பாவின் பொருள் பற்றி உரையாசிரியர்களிடையே கருத்து வேறுபாடு உள்ளது

சேனுவரையர் இவற்றை ஏழாம் வேற்றுமையின் பொருள்களாகக் கொள்கிருர். தெய்வச்சிலையார் இவற்றை உருபாகவும் பொருளா கவும் கொள்கிருர்; மேலும் அவை பெயரைச் சார்ந்து பெயராகி உருபேற்கவும் கூடும் என்கிருர். இளம்பூரணரும் நச்சினர்க் கினியரும் இவற்றை ஏழாம் வேற்றுமைக்குரிய உருபுகளாகக் கொள்கின்றனர்.

இவற்றில் எந்தப் பொருள் சிறப்பானது என்று முடிவெடுப்பது கடினமானதொன்ருகவே உள்ளது. இரண்டு விதப்பொருள் களிலுமே யாதானும் ஒரு வகையில் குறைபாடு உள்ளது.

இளம்பூரணர், நச்சினர்க்கினியர் கூற்றுப்படி இவற்றை ஏழாம் வேற்றுமைக்கான உருபுகளாகக் கொள்வது பலருக்கு ஏற்புடைத்ததாய் உள்ளது. ஆனல் இதிலும் சில குறைகள் உள்ளன. சேனுவரையர் இதற்கு எதிராகக் கூறும் முதற்காரணம் 'கண்' என்பது ஏழாம் வேற்றுமை உருபு என்று முதல் நூற்பாவில் கூறிவிட்டு, மீண்டும் 'கண், கால்...' என்று அடுத்த நூற்பாவில் கூறிச் செல்வது கூறியது கூறல் என்கிருர். ஆனல் மொழியியல் முறைப்படி ஓர் உருபனின் மாற்று உருபன்களைக் குறிப்பிடுகையில் அந்த உருபனின் முதல் வடிவத்தையும் குறிப்பிட்டே ஆகவேண்டும். அதனல் சேனுவரையரின் முதற்காரணம் வலுவுடையதல்ல.

அவர் இரண்டாவதாகக் கூறும் காரணம், இளம்பூரணர் 'ஊர்ப்புறத்திருந்தான், ஊரகத்திருந்தான், கைவலத்துள்ளது கொடுக்கும்' என 'அத்து'ச் சாரியையுடன் உதாரணங் காட்டினமை யால், புறம், அகம், வலம் என்பன பெயர்களேயன்றி உருபுகளாகா என்பது. தொல்காப்பிய எழுத்ததிகாரத்தில் 118-ஆம் நூற்பாவாக விளங்கும் 'அவற்றுவழி மருங்கின் சாரியை வருமே' என்பதன்படி சேனுவரையரின் கூற்றுப் பொருளுள்ளதாகவே உள்ளது. இந்நூற் பாவின்படி சாரியை உயர்திணை, அஃறிணையாகிய இருவகைப் பெயர்களின் பின்னே வரும். எனவே சாரியை உருபுகளைத் தொடர்ந்து வராது. ஆகவே ஏழாம் வேற்றுமைக்கான உருபுகள் இந்நூற்பாவில் தரப்பட்டுள்ளன என்பதை முழுமையாக ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

இந்த உரையில் உள்ள மற்ருெரு சிக்கல் 'தேவகை என்னும் வடிவத்தால் விளைவதாகும். இவ்வடிவம் எந்த இலக்கியத்திலும் காணப்படுவதாகத் தெரியவில்லை. சென்னைப் பல்கலைக்கழகத்துத் தமிழ்ப் பேரகராதியில் கூட இவ்வடிவம் காணப்படவில்லை. இளம்பூரணரும் நச்சினர்க்கினியரும் கூட 'தேவகை' என்பதற்கு உதாரணங் கொடுக்கும்போது 'வடக்கண் வேங்கடம்', 'தெற்கண் குமரி, என்பவற்றையே கொடுக்கிருர்கள். இங்குக் 'கண்' என்னும் வடிவமே 'தேவகை' என்னும் திசைக்கூற்றுப் பொருளிற் தரப் பட்டுள்ளது. எனவே, 'தேவகை' என்பதை ஏழாம் வேற்றுமைக் கான ஒரு சிறப்புப் பொருளாகக் கொள்வதன்றி அவ்வேற்றுமைக் கான உருபாகக் கூறமுடியாது.

இனிச் சேனவரையர் 566-வது நூற்பாவில் காணப்படுபவற்றை ஏழாம் வேறறுமையின் பொருள்களாகக் கொள்கிருர். இவ்வுரையைப் பலரும் ஏற்றுக் கொள்வதில்லை. நச்சினர்க்கினியர் 'கண்' எனும் உருபிற்குக் கண் எனும் இடைச் சொல்லால் உணர்த்தப்படும் இடப்பொருண்மை என்று கூறிஞல், பின் வருகின்ற இடப் பொருண்மையை முன்னும் கூறிய குற்றமாரும் என்று சொல்கிருர். ஆனல் இரண்டாவது நூற்பாவில் உள்ள 'கண்' நடுமையம் என்னும் சிறப்புப் பொருளைக் குறிப்பது என்று கொண்டால் நச்சினர்க்கினியர் கூறும் குறை நீங்கிவிடும்.

மேலும் 'ஆலின் கீழ்க் கிடந்த ஆ', மரத்தின் மேலிருந்த குரங்கு என்பனவற்றிற்குக் கண்ணென்னுருபு கொடுத்து உலகம் வழங்குவதில்லை என்றும் கூறுகிருர் நச்சினர்க்கினியர். நச்சினர்க் கினியர் சொல்வது போல் 'ஆலின் கண் கிடந்த ஆ' என்று கூறுவது அருகிய வழக்காய் இருக்கக் கூடும். ஆனல் அப்படிப் பட்ட வழக்கு அறவே இல்லை என்று கூற முடியாது. பி. எஸ். எஸ். சாஸ்திரி கூறுவது போல் நச்சினர்க்கினியரே எழுத்ததிகாரத்தில் உள்ள 'பெயருந் தொழிலும் பிரிந்தொருங்கிசைப்ப . . .' என்னும் 132-ஆம் நூற்பாவின் கீழ் 'மரத்துக் கட் குரங்கு' என்னும் தொடரை எடுத்துக்காட்டாகத் தந்துள்ளார்.

566-வது நூற்பாவிற்குச் சேனவரையருடைய உரை பின் வருமாறு அமைந்துள்ளது: 'கண் முதலாக இடமீருகச் சொல்லப்பட்ட

பத்தொன்பது பொருளும் அவை போல்வன பிறவும் ஏழாவதன் றிறத்தன என்றவாறு'. 'கண்' என்பதற்குப் 'பின், முன்' என்பவை யெல்லாம் சரிநிகர்ப் பொருளுடைய சொற்கள் என்று கொண்டால் நிச்சயமாக அது ஏற்றுக் கொள்ளக் கூடியதொன்றாக இராது. 'கண்' எனும் உருபனைப் பயன்படுத்தும் இடங்களிலெல்லாம் பின், முன் என்ற உருபன்களைப் பயன்படுத்துவதென்பது தொடரியல் அடிப்படையில் முடியாததொன்றாகும். எனவே 'கண், கால் புறம்...' ஆகியவை இடப்பொருளின் பாற்பட்ட சிறப்புப் பொருள்கள் என்று கொண்டால் சிறப்பாக இருக்கும். 'இடப்பொருளின் பாற்பட்ட சிறப்புப் பொருள்கள்' என்பதனை தொல்காப்பியரின் 'அதன்பால' என்னும் தொடருக்கும் சேனாவரையரின் 'ஏழாவதன்றிறத்தன' என்னும் தொடருக்கும் பொருளாகக் கொண்டால் பிரச்சனை எழுவதற்கு இடமிருக்காது.

இவ்விதம் பொருள் கொண்டால் 'கண்' எனும் உருபன் வரும் இடங்களில் அது பொதுவான இடப்பொருளை மட்டும் கொண்டிருந்தால், அதை அப்படியே உணர்ந்து கொள்ளலாம். அவ்வாறன்றிச் சில சமயங்களில் 'கண்' என்னும் உருபன் குறிப்பினால் உணரப்படும் சிறப்புப் பொருளையும் கொண்டிருக்கும். எடுத்துக் காட்டாக, 'கண்ணின்று கூறுதல் ஆற்றான் அவனாயின்' (கலி 37:8) என்பதற்கு 'அவனாயின் தன் குறையை நம்மெதிர் நின்று கூறுதலைச் செலுத்தான்' என்று உரையுள்ளது. நச்சினார்க்கினியரும் இந்த அடியில் 'என் கணின்று எனத் தோன்றா எழுவாயாய் நின்று கண்ணென் உருபு ஏற்று நின்றதாம்' என்று கூறுகிறார். அதேபோல்'வடக்கண் வேங்கடம்' என்புழி 'வடதிசையில் வேங்கடம்' என்னும் சிறப்புப் பொருள் பெறப்படும். 'குரங்கு மரத்தின் கண் உள்ளது எனின் குரங்கு மரத்தின் மேல் உள்ளது' என்பதை வாக்கியச் சூழலை வைத்து உணரலாம். இவ்வகையில் பத்தொன்பது பொருள் களுக்கும் எடுத்துக்காட்டு கொடுப்பது சிறிது கடினமாக இருக்க லாம்; ஆனால் இக்கட்டுரையில் இந்நூற்பாவுக்குக் கொடுக்கப் பட்டுள்ள பொருளின்படி 'கண்' எனும் சொல்லிற்கு இப்பத்தொன்பது பொருளும் வரும் எடுத்துக்காட்டுக்கள் இருக்க வேண்டும் என்பதில்லை. இப்பத்தொன்பதும் இடப்பொருளின் பாற்பட்ட

சிறப்புப் பொருள்கள் என்று கொண்டால், அவை 'கண்' என்னும் உருபிற்குள்ள சிறப்புப் பொருள்கள் என்று கொள்ள வேண்டிய தில்லை. அவை இடப்பொருளின் பல்வகைக் கூறுகளைச் சுட்டும் சிறப்புப் பொருள்கள். எனவே, கொடுக்கப்பட்டுள்ள வடிவங்களைப் பயன்படுத்தியே அச்சிறப்புப் பொருள்களை யுணர்த்தலாம்; அதே வேளையில் 'கண்' எனும் உருபில் அச்சிறப்புப் பொருள் உணரப் பட்டால் அதையும் ஏற்றுக்கொள்ளலாம்.

# தமிழின் உயிர்
## The vowels of Tamil

சி. கோ. தெய்வநாயகம்
கரந்தை கல்லூரி தஞ்சாவூர்

அகரம் முதல் ஔகாரம் இறுவாயாகத் தமிழின் உயிர் பன்னிரண்டாக விளங்குவது வெளிப்படை. தொல்காப்பியம்,

> ''ஔகார இறுவாய்ப் பன்னீரெழுத்தும்
> உயிரென மொழிப''

என இவ்வுயிர் எண்ணிக்கையினை உறுதிசெய்யும்.

இப்பன்னிரு உயிர்களும் குறில் எனவும் நெடில் எனவும் இருவகைப்பட்டன.

> அ, இ உ, எ, ஒ, — இவ்வைந்தும் குறில்
> ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ — இவ்வேழும் நெடில்

குறில் ஒரு மாத்திரை அளபும், நெடில் இருமாத்திரை அளபும் உடையன. குறிலினின்றும்தான் நெடில் தோன்றின· இக்கருத்தை தொல்காப்பிய உரையாசிரியர்களும் உரைப்பர். உயிர் எழுத்துக்களில் இணை எழுத்துக்களில் இணை எழுத்துக் களாகக் காணப்படும்

அ, ஆ, இ ஈ, உ ஊ, எ, ஏ, ஒ ஓ, ஆகிய பத்து எழுத்துக்களும் இக்கருத்தினை அரண் செய்கின்றன.

'அ' எனும் குறில் நீட்டல் விகாரம் எய்துங்கால் ஆகார மாகவும் 'இ' எனும் குறில் நீட்டல் விகாரம் எய்துங்கால் ஈகார

மாயும் இவை போன்றே ஏனைய உ, எ, ஒ கரங்களும் ஊ, ஏ, ஓகாரங்களைப் படைத்துள்ளன. எனவே இணையற்ற தனி எழுத்துக்களாகக் காணப்படுவன ஐ, ஒள எனுமிரு எழுத்துக்களே. இவை தனியெழுத்துக்களா? அல்ல. இவை இரு வேறு உயிர் எழுத்துக்களின் கூட்டெழுத்துக்கள் ஆகும். அகரம், இகரம் ஆகிய இரு குறில் இணைந்தால் ஐகாரம் எனும் நெடில் தோற்றம் பெறுகிறது. அதுபோன்றே அகரமும் உகரமும் இணைந்தால் ஒளகாரம் தோற்றம் பெறுகிறது. எனவே இவ் ஐ, ஒள எனுமிரு எழுத்துக்களும் தனி எழுத்துப்போல காணப்படினும் இருவேறு எழுத்துக்களின் இணைப்பு வடிவேயாகும். இத்தகைய மயங்கொலியன்களை ''சந்தியக்கரம்'' என்ப. இதனை தொல்காப்பியர்

''அகர இகர ஐகரமாகும்
அகர உகரம் ஒளகாரமாகும்''

எனக் கூறுவர். ஆதலின் இச்சந்தியக்கரங்களை தனி உயிர்களாகக் கொள்ளவியலாது.

எனவே எஞ்சிய 10 உயிர்களுள் மேலும் இரு எழுத்துக்களைப் பற்றி ஆயலாகும்.

அகரக்கூறும் இகரக்கூறும் இணைந்தே எகரமும், அகரக்கூறும் உகரக்கூறும் இணைந்தே ஒகரமும் பிறக்கின்றன. இதனை உரையாசிரியர்கள் சிவஞான முனிவரும் சங்கர நமச்சிவாயரும் ''நரமடங்கல்'' வடிவத்தன என்பர்.

ஆயின் முன்னர் ஐகாரமும் ஒளகாரமும் இவ்விருவகை இணைப்பிலேயே தோற்றம் பெறுதல் உணர்த்தப் பட்டது. அத்தோடு எகரமும் ஒகரமும் கூட அதே 'அ இ, உ' ஆகிய மூன்று குற்றுயிர்களின் இருவகை இணைப்பிலேயே தோற்றம் பெறுகின்றன என்கின்றபோது ஐயம் உளதாகிறது.

அ + இ = ஐ, எ
அ + உ = ஒள, ஒ

ஆகிய இரு எழுத்துக்களை படைக்கின்றன. எவ்வாறு? அகரத்தோடு இகரம் இணைகின்றபோது இரு குற்றுயிர்கள் இணைந்து

ஐகாரம் எனும் நெடில் எழுத்தினைப் படைத்துள்ளன. ஆனால் முறைமாறி இகரம் முன்னரும் அதன் பின்னர் அகரம் எனும் குற்றுயிர்கள் இணைய பிறிதொரு குற்றுயிர் ஆகிய எகரம் பிறக்கிறது.

இது போன்றுதான் ஒகரமும் பிறக்கிறது. ஒரு மாத்திரையும் ஒரு மாத்திரையும் சேர்ந்தால் ஒரு முறையில் ஐ எனும் 2 மாத்திரை தந்த புணர்ச்சி, பிறிதொரு வகையில் ஒரு மாத்திரை உடைய எகரத்தினை தருதலின் வகை என்ன? இடமாற்றமே காரண மெனலாம். முன்னுள்ள அகரம் பின்னும், பின்னுள்ள இகரம் முன்னுமாக நின்று இணைகின்றபோது ஒரு மாத்திரை இழப்பு நிகழ்ந்துள்ளது. எனவே இம்முறை கழித்தல் கொள்கை (Minus Concept)யின் வழிப்பட்டு ஒரு மாத்திரைக் குற்றுயிரையே தந்துள்ளது.

எந்த இரு குறில்கள் இணைந்து ஐ எனும் நெடிலைப் படைத் தனவோ, அவற்றாலேயே இவ் எகரம் தோற்றம் பெறினும், இது அளவிற் குறைந்தது என உணர்த்த வேண்டிய இன்றியமையாமை எழுவது இயல்புதானே. எனவேதான் "அளபு குறைந்தது" எனச் சுட்டும் புள்ளியிட்டு இவ் எகர ஒகரங்களையும் நம்மனோர் வழங்கி யுள்ளனர். இதனைத்தான் தொல்காப்பியம்,

"மெய்யினியற்கைப் புள்ளியொடு நிலையல்
எகர ஒகரத்தியற்கையுமற்றே"

எனக் குறித்துள்ளார். எனவே மாத்திரை குன்றிய உருவினைக் குறிக்கத் தமிழர் 'புள்ளி'களைப் பயன்படுத்தியமை பெறப்படுகிறது.

இவ்வாறாக அ. இ, உ ஆகிய எழுத்துக்களின் இணைப்பு வடிவங் களாகவே திகழ்தலின் தனித்தன்மையற்ற இவ் எ, ஒ. ஐ, ஔ எனும் இக் கூட்டுயிர்களை விலக்க,எஞ்சிய உயிர்கள் தமிழில் எட்டேயாகும். இவ்வெட்டனுள்ளும் ஆ, ஈ, ஊ, ஏ, ஓ ஆகிய ஐந்து நெடில்களும் அ, இ, உ, எ, ஒ ஆகிய குறில்களின் நீட்டல் விகாரங்களாதலின் அவையும் தன்னியல்பிற் தாழுகின்றன. அவற்றுள்ளும் ஏகார, ஓகாரங்களோ, நரமடங்கல்களாய எகர ஒகரங்களின் விகாரங் களாகவுள்ளன. எனவே இவற்றையும் நீக்கிக்காண தமிழின் தனி

உயிர்களாக (Independent vowels) அ, இ, உ எனும் எழுத்துக்களே திகழ்கின்றன. இவை மூன்றும் தமிழின் சுட்டெழுத்துக்களாகும்.

“அ, இ, உ அம்மூன்றுஞ் சுட்டு”– இது தொல்காப்பியம். ஆம். தமிழின் உயிரைச் சுட்டுவன; தமிழின் உயிரெனச் சுட்டப் படுவன இம்மூன்றுமேயாம். இவை மூன்றும் குறில்கள் தாம்.

மூன்று குறில்கள் வளஞ் செறிந்த தமிழினை ஆக்கிச் சிறக்கும் சிறப்பு வேறெம் மொழியிலும் காணக்கிடைக்காத அற்புதமாய் தமிழ் பெற்றுள்ளமையினை அறிகின்றது உளந்தழைக்கின்றது.

அடிவரம்பான “ஓரளபு” இசையொடு உள்ள இத்தனியுயிர் களான அ, இ, உ இவையும் யாதானும் ஒலியன்களிலிருத்துதான் தோற்றம் பெற்றிருத்தல் வேண்டும். இம்மூன்றெழிந்த ஏனைய உயிர்கள் எவ்வாறு கூட்டுயிர்களால் பிறப்பெய்தினவோ அம்முறை தானே இவற்றிற்கும் பொருந்தும்! ஆயினும் ஈரளபும். ஈரளவு பெறுமல் புள்ளியோடு ஓரளபும் கொண்டதால் ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ ஆகியவையும் எ, ஒ ஆகியனவும் வரிவடிவம் பெற்றுள்ளன. உயிர்க்கு வரம்பாய ஒரு மாத்திரையினை இசைக்கும் அ, இ, உ ஆகிய மூன்று எழுத்துக்களும் வடிவு பெற்றிருக்கின்றன.

ஆனல் இவ் அ, இ, உ ஆகியனவற்றைத் தோற்றுவிக்கும் ஒலியன்கள் ஒரு மாத்திரைக்கும் குறைந்துள்ளமையின் உயிரொத்த வரிவடிவம் பெருத அதே நேரத்தில் ஒரு புள்ளியினைப் பெற்றுள்ள மெய்போல அல்லாமல் அரை மாத்திரைக்கும் மேலாகவே, ஆனல் ஒரு மாத்திரைக்குக் குறைவாக அளபு பெற்றுள்ளதால் “மெய் களைப் போலவே” சார்ந்து வருதலை பிற உயிர்களைச் சார்ந்து வருதலை உடைத்தாயிருந்தும் தம் தனியியல்பினையும் வெளிப் படுத்தியே இயங்குகின்ற ஆற்றலுடன் திகழ்வதால் அவற்றைச் சார்பெழுத்துக்கள் என்றனர்.

“தத்தம் சார்பிற் பிறப்போடு சிவணி
ஒத்த காட்சியிற் தம்மியல்பியலும்”

எனுமித் தொல்காப்பியத் தொடர்கள் இக்கருத்தினை விளக்கு கின்றன.

இவ்வாறு தமக்கென தனி இயல்பு ஒலியன்களைக் கொண்டிருந்தாலும் அடிப்படைத் தனியுயிர்கள் போலல்லாது அளபு குறைபட்டன. ஆதலின் இவற்ருல் தனியாக இயங்கவியலாது. ஆதலின் இவ்வொலியன்களை உயிரெழுத்துக்களோடோ, அன்றி மெய்யெழுத்துக்களோடோ இணைக்க முடியவில்லை அதே நேரத்தில் இவற்றின் வழக்கு வன்மையோ மிகுதியாதலின் விடுக்கவும் முடியவில்லை. எனவே இவற்றை "எழுத்தோரன்ன" என தமிழ் எழுத்துக்களினின்றும் வேறு பிரித்தோதுகின்ருர் தொல்காப்பியர்.

எழுத்துக்களைப் போன்றவாதலானும், மெய்களை விட இசைமை அதிகம் பெற்று ஆயினும் ஒரு மாத்திரைக்குக் குறைபட்டுள்ளதாலும் இச்சார்பெழுத்துக்கள் புள்ளிகளால் குறிக்கப்பட்ட தனி எழுத்துக்களே என்பது புலனுகிறது. இதனைத் தொல்காப்பியர்,

"முப்பாற்புள்ளியும் எழுத்தோரன்ன" என்பர்.

நச்சர் கூறுமாறு ஆய்தத்தின் வடிவம் அடுப்புக் கூட்டுப்போன்ற மூன்று புள்ளி வடிவத்தது என்பதாயறிவோம். அப்புள்ளி வடிவம் ஆய்தத்திற்கு மட்டுமல்ல ஏனையிரு குற்றியலிகர, குற்றியலுகர வடிவங்களுக்கும் பொருந்தும். எப்படி? ஒரே அடுப்புக் கூட்டு வடிவ புள்ளியமைப்பு மூன்று வேறு ஒலியன்களைக் குறிக்குமா? அல்ல மூன்றுபுள்ளிகளும் வேறு வேறு வடிவங்களில் இடப்பட்டு இவை மூன்றையும் குறித்துள்ளன.

அதனுற்தான் "முப்பாற்புள்ளியும்" என்ருர். தனியொரு புள்ளியினை மூன்றுவிதமாக அமைத்திட ஏலாது. மேலும் "பால்பெற வகுத்த" "ஐம்பால் ஓதி" போன்ற வழக்குகளில் 'பால்' என்பது வேறு வேறு பட்ட வடிவங்களைக் குறித்தலின் ஈண்டும் இக்கருத்து வலியுறுகின்றது. அவ்வழி,

ஃ என ஆய்தமும்

ஃ என குற்றியலிகரமும்

ஃ என குற்றியலுகரமும்

குறிக்கப்பட்டிருக்கலாம். இம்மூன்று புள்ளிகளையும் முறையாக கோடிழுத்து இணைத்துப்பார்க்க அ, இ, உ கரவடிவங்களைப் போலத் தோன்றுதல் அறியத்தக்கது.

அவ்வாறன்றி நச்சர் கூற்றுப் போல உயிரது குறுக்கமாக, அகர, இகர, உகரங்களின் குறைத்தல் விகாரங்களோ இச்சார்புகள்' எனின் அற்றன்று. அவ்வாருயின் அவற்றை அகரக்குறுக்கம், இகரக்குறுக்கம், உகரக்குறுக்கம் எனவாசிரியர் ஓதாது,

''குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தம்
என்ற முப்பாற்புள்ளி'' எனவும்

''எழுத்தோரன்ன'' எனவும் வேறு பிரித்தோதுவது எற்றுக் கோவெனக் கூறி மெய்ம்மை காண்க. இவற்றை அ, இ, உ க்களினின்றும் வேருகவே காண்க.

இது கருதியே ஒரு பொருள் நுதலும் சூத்திரத்தில், அதுவும் முதற்சூத்திரத்தில் தொல்காப்பியர் சார்பெழுத்துக்களையும் குறித்துச் சென்றுள்ளார். ஆயினும் அந்நூற்பாவினை நுணித்து நோக்க இரு கருத்துக்கள் புலனுகின்றன.

சார்பு எழுத்துக்களை எழுத்துக்கள் என எண்ணிக்கையில் கொண்டோரும், கொள்ளாதோருமாக தொல்காப்பியர் காலத்தில் இரு கருத்துப் புலவர் இருந்துள்ளனர். எழுத்தாக் கொள்ளாதோர் எண்ணிக்கையில் தமிழின் முதல் எழுத்துக்கள் 30 ஆகும். எண்ணிக்கையில் சார்புகளையும் கொண்டோர் 33 எனவும் கொண்டுள்ளனர் தொல்காப்பியரோ இச்சிக்கலில் சிக்கிக்கொள் ளாது இருவகைக் கருத்துக்களையும் தாம் உடன்பட்டு

''எழுத்தெனப் படுப
அகர முதல் னகர இறுவாய்
முப்பஃதென்ப
சார்ந்து வரல் மரபின் மூன்றலங்கடையே''

என நூற்பா யாத்துள்ளமையுமறியத்தக்கது.

# A classification of Tamil verbs on the basis of the contextual features

N. Nadaraja Pillai
C. I. I. L., Mysore

Mistakes in the syntax of Tamil verbs by second language learners are of great importance to the study of the verbs. Verb is central and selectionally dominant in grammar. So the usage of verb, its co-occurrence with cases, selections of subject and object, occurrence with adverbs etc. should be given in the lexicon.

Selectional restrictions of the subjects and objects have their own importance in the usage of verbs. For example-

* 1) *naan kampai uṭaitteen*

* 2) *naan kaṇṇaaḍi ṭamḷarai oṭitteen*

The verbs '*uṭai*' and '*oṭi*', though the meaning is same, select different objects. The inadquacies of this kind for the teaching/learning can be overcome by giving sufficient information along with the verb in the grammar and features required in the lexicon.

Accordingly four types of features are required for each word.

1) Category features 2) Contextual features
3) Inherent features 4) rule features.

The category features denotes a lexical category such as a verb or noun. The contextual features are represented by a case frame, in which the co-occurrence of case will be given. Inherent feature denotes qualities such as animal, human, abstract etc. Rule feature refers to transformational rules which can be applied to the lexical item.

Here in this present study only the contextual feature has been taken. The syntactic context/environment necessary for the usage of a verb may be devided into two viz.

1) *obligatory* 2) *optional.*

Obligatory environment is the one in which only the verb is used and hence it is indispensable. The contextual restrictions thus formed can not be violated. The violation of it will result in ungrammaticalness. If more than one verb has got the same obligatory environment it may be said to belong to one syntagmatic class.

On the other hand the optional environment is used for some extra communicative purposes. The use of this optional environment has no constructional importance and so the deletion does not lead to ungrammaticalness. For exemple:-

3) *avan cooṟu caappiṭṭaan*

4) *avan kaiyaal cooṟu caappiṭṭaan*

'*Kaiya:l*' is an optional feature. The deletion of it does not result in ungrammaticalness.

When the obligatory environment of verbs in the target language and mother tongue is same, the student find it easy to use and when they are different the mother tongue environment leads to interference. For example:- 'join' and 'ceer', have got different environment as in the following:—

5) I joined S. F. I.

6) *naan* - S. F. I. - *il ceernteen*

thus making ungrammatical sentences such as

* 7) I joined in S. F. I.

* 8) *naan* S. F. I. (*ai*) *ceernteen*

In the present study eight cases have been taken and it is felt that some more cases are also necessary. The eight cases taken are, Accusative, Purposive, Locative, Instrumental, Ablative, Dative, Causative, Sociative. The purposive can be further divided into two, viz. Purposive and Benefactive as in the following examples:-

9) *naan avaḷukkaaka cipaaricu ceyteen*

10) *naan paṇattukkaaka alainteen*

The sociative can be divided into two viz. Sociative and Comitative as in the following examples.

11) *avaru ennooṭu vantaaru*

12) *avan paṇattooṭu tirumpinaan*

Anyhow the number of cases that is required is uncertain. The Agentive is not included here since the selection of it goes to individual verbs and can be studied separately under selectional restrictions of subjects and objects.

The two major divisions of verbs are transitive and intransitive verbs Under transitive verbs we have ten classes of verbs.

($V_1$) — ( + Acc + Purp ) = *ikal*

($V_2$) — ( + Acc + Purp + Ins ) = *iti*

($V_3$) — ( + Acc + Purp + Loc ) = *itu*

($V_4$) — ( + Acc + Purp + Ins + Abl ) = *iratci, urincu*

($V_5$) — ( + Acc + Loc ) = *iin, kiṭattu*

($V_6$) — ( + Acc + Purp + Ins + Loc ) = *aṭi*

($V_7$) — ( + Acc + Cans ) = *uṇar*

($V_8$) — ( + Acc + Dat ) = *koṭu*

($V_9$) — ( + Acc + Abl + Purp ) = *eṭu*

($V_{10}$) — ( + Acc + Abl ) = *kaappaarru*

Under intransitive verbs we have eleven classes.

($V_{11}$) — ( + Dat ) = *iṇaṅku*

($V_{12}$) — ( + Purp ) = *iṇai*

($V_{13}$) — ( + Loc ) = *pey*

($V_{14}$) — ( + cans ) = *iṭi*

($V_{15}$) — ( + Loc or possession ) = *iraincu*

($V_{16}$) — ( + Dat + Purp + Loe ) = *utavu*

($V_{17}$) — ( + Abl + Purp + Loe ) = *iraṅku*

($V_{18}$) — ( + Soc ) = *uraay*

($V_{19}$) — ( + Abl + Dat ) = *poo*

($V_{20}$) — ( + Loc + Purp ) = *otuṅku*

($V_{21}$) — ( + Abl ) = *oḻuku*

# 'சாவ' என்னும் வினையெஞ்சு கிளவி

தி. நடராசன்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை

தொல்காப்பியர் எழுத்ததிகாரத்தில் உயிர் மயங்கியலில் முதற்கண் அகரஈற்றுச் சொற்களின் புணர்ச்சியினை விரிக்குங்கால் பொதுமையாக 'அல்வழிப் புணர்ச்சியில் அகர இறுதியினையுடைய பெயர்ச் சொற்களின் முன்னர் 'க், ச், த், ப்' என்னும் மெய்களை முதலாகக் கொண்ட சொற்கள் வந்து புணருமாயின் தத்தமக்குப் பொருந்திய 'க், ச், த், ப்' என்னும் ஒற்றுக்கள் இடையே மிகுந்து வரும் என்று கூறியுள்ளார்.

''அகர இறுதிப் பெயர்நிலை முன்னர்
வேற்றுமை யல்வழிக் கசதபத் தோன்றின்
தத்தம் ஒத்த ஒற்றிடை மிகுமே''. (தொல். எ. 20 )

(எ.டு.) விள + குறிது > விளக்குறிது
நுண + குறிது > நுணக்குறிது

அடுத்து தொல்காப்பியர் அகர இறுதியினையுடைய வினையெச்சங்கள் நிலை மொழியாக நின்று முற்கூறியது போன்று 'க், ச், த், ப்' என்னும் மெய்களை முதலாகக் கொண்ட சொற்கள் வந்து புணருமாயின் தத்தமக்குப் பொருந்திய 'க், ச், த், ப்' என்னும் ஒற்றுக்கள் இடையே மிகுந்து வரும் என்றும் கூறியுள்ளார்.

''வினையெஞ்சு கிளவியும் உவமக் கிளவியும்
எனவென் எச்சமும் சுட்டின் இறுதியும்
ஆங்க என்னும் உரையசைக் கிளவியும்
ஞாங்கர்க் கிளந்த வல்லெழுத்து மிகுமே''. (தொ. எ. 204)

(எ. டு.) உண + சென்றான் > உணச் சென்றான்
சாவ + சென்றான் > சாவச் சென்றான்
உண + தந்தான் > உணத் தந்தான்
சாவ + போனான் > சாவப் போனான்

அகர ஈற்று வினையெச்சங்களுக்கு என்று பொதுப்படப் புணர்ச்சி இலக்கணம் உணர்த்திய தொல்காப்பியர் பின்னர் அகர ஈற்றினை யுடைய 'சாவ' என்னும் வினையெச்சத்திற்கு எனத் தனியாகவும் புணர்ச்சி இலக்கணம் எடுத்துக் கூறியுள்ளார்.

"சாவ என்னும் செயவென் எச்சத்து
இறுதி வகரங் கெடுதலும் உரித்தே" (தொ. எ. 210)

இந்நூற்பாவுக்கு இளம்பூரணர்[1] 'சாவ' என்று சொல்லப்படும் செய என் எச்சத்து இறுதிக்கண் அகரமும் அதனைப் பற்றப் பட்ட வகர வொற்றும் கெடாது நிற்றலே யன்றிக் கெட்டு முடிதலும் உரித்தே' என உரையெழுதிக் காட்டாக 'சாக்குத்தினான், சீறினான், தகர்த்தான், புடைத்தான்' என்றும் காட்டுவர்.

நச்சினார்க்கினியரும்[2] இளம்பூரணர் உரையையே கொள்வர். காட்டுக்களும் அவைகளையே காட்டுவர்.

சங்க இலக்கியத்தில்

சங்க இலக்கியத்தில் (பத்துப்பாட்டு, எட்டுத்தொகை) தொல் காப்பியர் கூறியது போன்றே 'சாவ' என்னும் எச்சத்தின் இறுதி வகரம் கெட்டு 'சா' என நின்று வல்லெழுத்துக்கள் வருமொழி முதலாக அமைந்து வரும்போது அவ்வல்லெழுத்துக்கள் இடையே மிக்கும் வந்துள்ளன.

1. "நோக்கஞ்சான் பாய்ந்த பொதுவனைச் சாக்குத்திக்
கோட்டிடைக் கொண்டு குலைப்பதன் தோற்றங்காண்"
(கலி, 101)
(சாக்குத்தி — சாவக்குத்தி) உரை

2. "கொள்வாரைக் கொள்வாரைக் கோட்டுவாய் சாக்குத்திக்
கொள்வார் பெருஅக் குரூஉச் செகில் காணிகா" (கலி. 105)
(சாக்குத்தி — சாம்படி குத்தி) உரை

3. "மரஞ்சா மருந்துங் கொள்ளார் மாந்தர்
உரஞ் சாச்செய்யார் உயர்தவம் வளங்கெட" (நற், 226)
(சாச் செய்யார் — வலிமை முற்றும் கெடுமாறு) உரை

4. "தாய் சாப்பிறக்கும் புள்ளி கள்வனேடு" (ஐங், 24)
(சாப்பிறக்கும் — சாவும்படி பிறவாநின்ற)

சங்க இலக்கியத்தில் 'சாவ' என்னும் வினையெச்சத்தின் பின்னர் மொழி முதலாக வரும் வல்லின மெய்களுள் 'க், ச், ப்' என்னும் மெய்களைக் கொண்ட சொற்கள் வந்து புணர்ந்தமைக்குச் சான்று கள் உள்ளன. 'த்' எனும் மெய்யினை முதலாகக் கொண்ட சொல் வந்து புணர்கின்றமைக்குச் சான்று காணப்படவில்லை.

மேலும் சங்க இலக்கியத்தில் தொல்காப்பியர் அகர ஈற்று வினையெச்சங்களுக்குக் கூறிய பொது விதிப்படி 'சாவ' என்னும் வினையெச்சம் நிலைமொழியாக நின்று வல்லெழுத்துக்களை முதலாகக் கொண்ட சொற்கள் வந்து புணரும் பொழுது அவ்வல்லெழுத்துக்கள் மிக்கு முடியும் என்பதற்குச் சான்றுகள் காணப்படவில்லை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (எ. டு.) | சாவ | + | குத்தினன் | > | சாவக் குத்தினன் |
| | சாவ | + | சீறினன் | > | சாவச் சீறினன் |
| | சாவ | + | தகர்த்தான் | > | சாவத் தகர்த்தான் |
| | சாவ | + | புடைத்தான் | > | சாவப் புடைத்தான் |

'சாவ' என்னும் வினையெச்சம் அகர ஈருக இருப்பினும் தொல்காப்பியர் காலத்திலேயே ஏனை அகர ஈற்றுச் 'செய' அமைப் புடைய வினையெச்சங்களினின்று மாறுபட்டுப் (ஈற்று வகரம் கெட்டு) புணர்கின்ற நிலைமை அதற்கு ஏற்பட்டு விட்டமையான் தொல் காப்பியர் 'சாவ' என்பதனைத் தனியாக எடுத்துக் கூறியுள்ளார் என்று உணர முடிகிறது. சங்க இலக்கிய மொழியும் அக்கொள் கையினை உறுதி செய்கிறது.

மேலும் இளம்பூரணரும், நச்சினர்க்கினியரும் இதனை வினை யெஞ்சு கிளவி...வல்லெழுத்து மிகுமே' என்ற நூற்பாவின் பின்னர் அமைக்காததனல் இயல்பு கணத்தும் இந்நிலை மொழிக் கேடு

கொள்க' எனக் கூறிச் சான்றாக சான்றோன், நீண்டான், மாண்டான் யாத்தான், வீழ்த்தான், அடைந்தான் என வரும் எனக் காட்டுவர்.

உரையாசிரியர்களின் மேலே விளக்கக் கொள்கைகளுக்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் காணப்படவில்லை.

பி. எஸ். சுப்பிரமணிய சாஸ்திரியாரும்[3] தொல்காப்பிய எழுத்ததிகாரக் குறிப்புரையில் உரையாசியர்கள் கூறிய இயல்பு கணத்தும் நிலைமொழிக் கேடு' என்னும் கொள்கையினை 'அவ்வழக்கு ஒற்றுமைப் போலியான் பிற்காலத்து வந்ததெனக் கொள்ளலாகும்' என மறுத்துரைப்பர்.

ஆக, 'சாவ' என்னும் வினையெஞ்சு கிளவிக்குத் தொல்காப்பியர் கூறிய புணர்ச்சியிலக்கணம் சங்க இலக்கிய மொழியிலும் மாறுபாடின்றிக் காணப்படுகின்றது என்பது வெளிப்படை.

குறிப்புக்கள்

1. இளம்பூரணர், தொல். எ. 210 உரை
2. நச்சினார்க்கினியர், தொல். எ, 209 உரை
3. பி. எஸ். சுப்பிரமணிய சாஸ்திரி, தொ. எ. 210 குறிப்புரை

# னகர மகரப் போலி: சில விளக்கங்கள்

கி. நாச்சிமுத்து
கேரளப் பல்கலைக்கழகம்
காரிய வட்டம்

தொல்காப்பியர் னகர, மகரப் போலி பற்றி

''மகரத் தொடர்மொழி மயங்குதல் வரைந்த
னகரத் தொடர்மொழி ஒன்பஃ தென்ப
புகரறக் கிளந்த அஃறிணை மேன'' (எழுத்து. 82)

என்று குறிப்பிடுகின்றார். 'அஃறிணையில் மகரவீற்றுத் தொடர் மொழியோடு மயங்காமல் வரும் னகர ஈற்றுத் தொடர் மொழிகள் ஒன்பது என்று கூறுவர்' என்பது இதன் பொருள். இதில் குறிப்பிடப்படும் போலி என்பதைப் பொருளிலா மாற்றம் (Free-variation) என்பர் மொழியியலார்.

இச்சூத்திரப்படி 1) போலி அல்லது பொருளிலா மாற்றம் என்பது ன் ~ ம் என்ற முறையிலாகும்; 2) இவ்வாறு மயங்காமல் வருபவை ஒன்பது சொற்கள்; 3) அவை தொடர் மொழி அல்லது பல அசைச் சொற்களாகவும்; 4) அ.ஂ.றிணைப் பொருள் தருவன வாகவும் (பெரும்பாலும் பெயர்) இருத்தல் வேண்டும்.

இதிலிருந்து பல சொற்களில் ன் ~ ம் மயங்கி வரும் என்று தெரிகிறது. அப்படியாயின் மகரம் னகரத்தோடு மயங்கியும் மயங்காமலும் வருமா (ம் ~ ன்)? எனின் தொல்காப்பியர் ஏன் அதைக் குறிப்பிடவில்லை? தொல்காப்பியர் ன் ~ ம் எனக் குறிப்ப தால் அவர் னகர ஈற்றுச் சொற்கள் பழமையானவை என்றும்

மகர ஈற்றுச் சொற்கள் பிற்பட்டவை என்றும் கருதுகிருரா? போன்ற கேள்விகள் எழுகின்றன. தொல்காப்பியர் இதைப் போன்ற வரலாற்று நோக்கில் பார்க்காமல், மகரம் னகரத்தோடு மயங்கியும் மயங்காமலும் வந்த சொற்கள் அதிகமாகவும் னகரம் மகரத்தோடு மயங்கியும் மயங்காமலும் வந்த சொற்கள் குறைவாகவும் இருந்ததால் விதியமைப்பு எளிமை கருதி இவ்வாறு சூத்திரம் அமைத்திருக்கலாம் அல்லவா?

இச் சூத்திரக் கருத்தைப் பற்றிப் பிற்காலத்தில் பல இலக்கண ஆசிரியர்களும், உரையாசிரியர்களும், மொழியியல் அறிஞரும் பல விதமாகச் சிந்தித்திருக்கின்றனர்.

இளம்பூரணரும், சற்று விளக்கமான முறையில் நச்சினர்க்கினியரும் இதை ன் ~ ம், ம் ~ ன் என்ற இரண்டு போலியாகவும் கொண்டு உதாரணம் காட்டுகின்றனர். இளம்பூரணரும் நச்சினர்க்கினியரும் மயங்காத ஒன்பதிற்கும் உகின், (எகின்–நச்) செகின், விழன், பயின், அழன், புழன், குயின், கடான், வயான் என்ற ஒன்பதையும், மயங்குவனவற்றிற்கு இளம்பூரணர் நிலன் ~ நிலம், பிலம் ~ பிலன் முதலியவற்றையும் நச்சினர்க்கினியர் நிலம் ~ நிலன், பிலம் ~ பிலன், முதலியவற்றையும் காட்டுகிருர்கள். நச்சர் மகரஈறு மயங்காமல் வருவதற்கு வட்டம், குட்டம் முதலிய சொற்களைக் காட்டுகிருர்; புணர்ச்சியில் திரிபடைபவற்றை(எகின்-எகினம்)க்களைக என்றும் உரைப்பர்.

வீரசோழியம் (25) மகரமும் னகரமும் போலியாக வரும் என்று மட்டும் கூறிச் செல்கிறது.

நன்னூல் (122) வீர சோழியத்தையும், இலக்கண விளக்கம் (30) தொல்காப்பியத்தையும் பின் பற்றுகின்றன. முத்துவீரியம் (114) ம் > ன் ஆக மாறுவதாகவே கூறுகிறது. இவ்விலக்கண நூல்களிளெல்லாம் தொல்காப்பியர் கூறும், தொடர்மொழி என்ற நுட்பமும், ஒன்பது சொற்கள் என்ற வரையறையும் இல்லை.

மயிலை நாதர் இப்போலியை இடை நிலை மயக்க வகையில் ஒன்ருகக் கொண்டு நன்னூல் கருத்துக்கு ஏற்ப ம் ~ ன் என

மயங்கும் என்பர்; ன் ~ ம் எனக்கொள்ளின் தொல்காப்பியர் கூறும் ஒன்பதுக்கும் மேற்பட்டுப் பலியன், வலியன் முதலிய சொற்களும் உள எனக் கூறி அவர் கருத்தை மறுப்பர். ஆனல் மயங்கா என இவர் கூறுவனவற்றில் (நச்சர் பார்க்க) வட்டம், வட்டன் (சங்கர நமச்சிவாயர் 1953:64) எனவும் சாசனங்களில் வருவதால் இதுவும் பொருத்தமாய் இல்லை. சங்கரநமச்சிவாயர் மயிலை நாதரை அடியொற்றிச் சென்று னகரத்தை ஆண்பால் விகுதியாகக் கருதற்க என்பர்.

சிவஞான முனிவர் இலக்கண விளக்கச் சூருவளியில், மற்ற வர்கள் யாரும் செய்யாமல் விட்டதை - இம்மயக்கம் நடைபெறும் சூழலைத் தெளிவாக வரையறுக்க முயல்கிருர்; இ. வி. சூத்திர அமைப்பும் உதாரணங்களும் பொருத்தமின்றி அமைவதை எடுத்துக்காட்டி,

> "யாண்டும் குறில் இணை ஒற்று அல்லுழி வரும் னகரமும் மூவெழுத்தின் இறந்த தொடர்மொழி னகரமும் மகரத்தோடு மயங்காமை கண்டு கொள்க. ஆசிரியர் 'தொடர்மொழி' என்ருர் ஆயினும், தொடர் மொழியுள் முந்தியதாகிய மூவெழுத்துத் தொடர்மொழி என்பதே கருத்தாகக் கொள்க. அவற்றுள்ளும் குறில் இணை ஒற்ருகிய மொழி என்பது ஏற்புழிக் கோடலான் கோடும்."

என்று விளக்குவார்.

தற்கால விளக்கங்களுள் தெ. பொ. மீ. முதன் முதலில் (1957) ன் ~ ம் போலியும் மகரக்குறுக்கமும், தற்காலத்தில் ஒலியனுக இருக்கும் மூக்குயிர்களைக் (தெ. பொ. மீ. 1965;205) குறிக்கின்றன என்றுக் குறிப்பிட்டார். தெலுங்கில் குளனு, ம்ரானு போன்ற, னகரஈற்றுச் சொற்கள் மூத்த வடிவங்களாகக் கருதப்படுகின்றன. தமிழில் ம்~ன் ஆக மயங்கு மெனினும் மகரஈற்று வடிவங்கள் (குளம்-மரம்) மூல வடிவங்களாகக் கருதப்படுகின்றன. மெல்லின எழுத்துக்கள் பலவீனப்பட்டு மூக்குயிர்கள் தோன்றிக் காலப் போக்கில் அம்மூக்கொலிச்சாயலே மறைந்து விடுவதை கன்னட மர (மரம்) போன்ற வடிவங்கள் காட்டுகின்றன. தெ. பொ. மீ கருதுவது போலன்றி, தொல்காப்பியர் னகரத்தையும், பிற

இலக்கணக்காரர்கள்மகரத்தையும் பழமையானதாகக் கருதுவதாகத் தோன்றுகிறது.

தெ. பொ. மீயைப் பின்பற்றித் தன் விளக்கத்தை அமைக்கும் செ. வை. சண்முகம் (1967:86) மூக்கொலியாதல் (ன்~ம் மயக்கம்) குறிலிணைத் திறப்பு அசைகளின் இறுதியில் நடப்பதாகவும், இதைத் தொல்காப்பியர் வரைந்தோதவில்லை என்றும் கூறுவது சரியன்று. தொல்காப்பியர் 'தொடர்மொழி' என்ற தன் நுட்பத்தையோ சிவஞானமுனிவர் விளக்கத்தையோ இவர் கவனிக்கவில்லை போலும்.

மயிலை நாதர் தொல்காப்பியர் கூறும் மயங்காதவை ஒன்பது சொற்கள் என்ற எண்ணிக்கை மட்டுமின்றி ன்~ம் என்பதே தவறு என்பது போலக் கூறுகிறார். ஆனால் இதுபற்றி எழுதிய விஜய வேணுகோபால் (1968:371-2) முன்னதை மட்டுமே சுட்டிக் காட்டுகிறார்.

இளையபெருமாள் (1976: 15) இச் சூத்திரம் ம் ~ ன் போலி கூறுவதாகக் கொண்டு 'அது மூக்கொலிக்கு முன் இரண்டு குறில் உயிர்கள் அமைந்து இடையில் வரும் உயிர் 'அ'வாக இருப்பின் ஏற்படுகிறது' என வரையறுக்கிறார். கடான், வயான், உகின் குயின், செகின், பயின், முதலிய சொற்கள் மேற்கண்ட அமைப்பில் இல்லை; அழன், செகின், பயின், குபின் போன்ற சொற்களுக்குப் பொருளும் இல்லை; அகராதிகளிலும் இவற்றைக் காணோம்; எனவே இவை தொல்காப்பியர் குறித்ததாக இருக்க இயலாது என்று குறிப்பிட்டு, சங்க இலக்கியத்தில் 38 இடங்களில் ம் ~ ன் மயங்குவதாகவும் ஒன்பது இடங்களில் மயங்காமல் வருவதாகவும் (அரம், இயம், கயம், கனம், பரம், முறம், வயம், நுகம், வியம்), இவையே தொல்காப்பியர் கருதிய ஒன்பது சொற்களாகும் என்றும் கூறுகிறார்.

1) தொல்காப்பியர் ன் ~ ம் மயங்குமென்றும், அவ்வாறு னகரம் மகரத்தோடு மயங்காமல் வரும் சொற்கள் ஒன்பது என்றும் தெளிவாகக் கூறுவதால் இளையபெருமாள் ம லன் என்று கூறும் விளக்கமும், காட்டுகளும் பொருந்தா. 2) கயம்~கயன் (மதுரைக் காஞ்சி 92; கலி 36:6) என்றும் வருகிறது; எனவே இதுவும் பொருந்தாது. 3) ம் ~ ன் போலி அகர உயிருக்குப் பிறகு நடக்கிறது

என்று கூறும் இவரே காட்டும் மயங்காத 9 சொற்களிலும் அகரம் வருகிறது; இது முன்பின் முரணாக அமைகிறது. 4) பொருளின்மை என்று காரணம் கூற முடியாது; தொல்காப்பியரே அழன், புழன், குயின், எகின் என்ற 4 சொற்களையும் பயன்படுத்துகின்றார்; விழன், கடான், என்ற 2 சொற்களுக்குத்தான் பொருள் இதுவரை தெரிய வில்லை. 5) கடான், வயான், முதலிய சொற்களில் ஈற்றயல் அகரம் இல்லாததால் இவற்றை உதாரணமாகக் கொள்ள முடியாது என்ற ஆசிரியர் கருத்தும் தர்க்கரீதியாக முரண்பாடுடையது. மயங்கும் போது அகரம் வரும்; ஏனைய இடங்களில் மயங்காது என்பதால், அகரம் வராத கடான், வயான் முதலியவற்றை மயங்காதவற்றிற்கு உதாரணம் காட்டுவதில் என்னதவறு?

எஸ். சுப்பிரமணியம் (1977:101-2) 2 அல்லது 2-க்கு மேற்பட்ட உயிர்கள் தம் முன் மெய் பெற்றோ பெறாமலோ வரும் பொழுது ன் ~ ன் மயங்காது என்றும், மயங்கும் என்றும் கூறும் விதியே மயக்க முடையது. ஆனால் தொல்காப்பியர் குறித்த மயங்காத 9 சொற்கள் தொல்காப்பியத்திலேயே காணப்படும் அழ(ா)ன் புழ(ா)ன், வயின், குயின், எகின் (மரம்), எகின் (பறவை), எயின் எவன்,கவின் என்று இவர் காட்ட முயல்வது புதுமையாகயிருக்கிறது. ஆனால் தொல்காப்பியர் 'எயின்' - ஐ வெளிப்படையாகக்குறிக்க வில்லை அழ(ா)ன், புக(ா)ன் என்ற 2-ம் அழம், புழம் எனவும் வந்திருக்க வேண்டுமென்பதை அவை இன், அத்து என்ற 2 சாரியைகளையும் ஏற்பதிலிருந்து தெரிகிறது (தொல், எழு 194). எகின் எகினம் எனவும் ஆவதால் (தொல். எழு. 337) அதையும் நீக்க வேண்டும் (நச்சர்). எனவே தொல்காப்பியர் கருதிய 9 சொற்களும் இவையாகுமா என்பது ஐயத்திற்குரியது.

உண்மையில் தொல்காப்பியர் குறிக்கும் 9 சொற்கள் எவை எவை என்பது இன்னமும் தீராச்சிக்கலே. தொல்காப்பியச் சூத்திரம் ம ~ ன் என உரைப்பதாகப் பொருள் கொள்ளின் வேறொரு விளக்கம் தரலாம். ஆனால் தொல்காப்பியச் சூத்திரம் மகரத்தோடு மயங்காத னகரஈற்று சொற்கள் 9 என மிகத் தெளிவாகக் கூறு கிறது. எனவே மாற்று விளக்கம் சாத்தியமே இல்லை. ஒருவேளை இது சாத்தியமானல் தொல்காப்பியரே புணரியல்களில் எடுத்து

மொழியும் இல்லம் (314), அகம் (316), இலம் (317), ஆயிரம் (318) எல்லாம் (323), ஈம், கம், உரும் (329-330), மக(ம்) (332) என்ற 9 அஃறிணைச் சொற்கள் தான் தொல்காப்பியர் கருதியவை என்று கூறலாம். இங்கும் சிக்கல் எழுகிறது. இதில் ஈம், கம் என்ற சொற்கள் தொடர்மொழிகளல்ல; அகம் ~ அகன் என்றும் கம் ~ கன் எனவும்மயங்கும். எனவே இவ் விளக்கம் பொருந்துமாறு இல்லை. இனிமேல்தான் தொல்காப்பியர் கருதிய 9 சொற்களும் எவை என்பதைக் கண்டறியவேண்டும் (நாச்சிமுத்து 1978)

நூலடைவு


இளம்பூரணர் 1964
தொல்காப்பியம் — எழுத்து - கழகப் பதிப்பு

சங்கர நமச்சிவாயர் 1953
நன்னூல் - விருத்தியுரை - உ. வே. சா. 4 பதிப்பு

சிவஞானமுனிவர் 1952
இலககண விளக்கச் சூறாவளி, ஆறுமுகநாவலர் 5-ஆம் பதிப்பு. ப. 71.

சுப்பிரமணியம் ச. வே. 1967:
இலக்கணத் தொகை, சென்னை

நச்சினார்க்கினியர் 1967:
தொல் எழுத்து சுந்தரமூர்த்தி பதிப்பு

Elayaperumal M. 1976:
'Free variation of the final 'm' and 'n' in the nouns of Sangam literature', *Grammatical Theories on Sangam literature*, Ph. D. diss. (unpub). Kerala uni. pp. 15

Meenakshisundaram T. P. 1957:
'Nasal vowels in Tamil' *IL* vol. 18. pp. 51-53 1965: *History of Tamil language, Poona*

Nachimuthu K. 1978:
'Nasalisation of vowels in Tamil and other related problems' unpub. Mss.

# Auxiliary verbs in Kannada

V. G. Bhat
Annamalai University

0. A critical study of verbs reveals the fact that certain semantic notions are added to the main verb by some other verbs. A few among the thousands of verbs fit into such a slot which can be called auxiliary slot. These verbs may occur themselves as main verbs or as auxiliaries. But some of the verbs cannot have independent occurrence. The latter verb category can conveniently be called pure auxiliaries. This does not mean that others are impure auxiliary verbs. Rather they have got the function of main verbs also, along with the auxiliary function.

Auxiliary verbs denote certain semantic notions like duration, completion, probability, capability, mood of the speaker etc. They add certain subtle semantic nuances to the main verbs with which they occur. At the same time they do not alter the meaning of the main verbs. Rather they are some additions to the main verbs.

1. A view at the old grammatical works on Kannada leaves us at disappointment in respect of auxiliary verbs. The authors of *ka:vya:valo:kana*, *Karna:taka*, *Bha:ṣa Bhu:ṣaṇa*, *Sabdamaṇidarpaṇam*, *Sabda:nusa:sanam* etc., proceed on the same grounds or lines and none of them, it seems, was aware

of the auxilary concept. It does not mean that there were no auxiliary verbs found in their period or before that. The earliest extant Kannada epic *Pampa Bha:rata* of tenth century, supplies ample of auxiliary constructions, from which mary examples could have been drawn. For example, *enala:kkum* 'it can be said'. *enal ve:ḍa* 'don't tell', *meccala:ren* 'I cannot like', *kolala:gadu* 'should not be killed', etc. Not only this literary work wherein we find auxiliary construction, but also in many others.

But all these authors have dealt with passive voice construction in Kannada. The verb '*paḍu*' meaning 'to suffer' 'to undergo', 'to feel', 'to experience' is employed in passive voice construction. Even though *ke:sira:ja* did not mention that the construction with '*paḍu*' is passive voice, he mentions firmly that '*paḍu*' occurs only with transitive verbal constructions. But the verb '*paḍu*' means that the patient undergoes certain experience, when used in active verbal constructions. When it is appended with transitive verbs, it is certainly passive voice construction. The idea that *ke:sira:ja* relates this *paḍu* with transitive verbal constructions might be passive in this deep thinking.

Spencer's Kanarese Grammar deals with certain auxiliary verbs in a limited manner. Spencer treats their meaning and certain semantic nuances that they convey when they are employed as the auxiliaries. T. N. Shrikanthaiah discussed some of the auxiliary verbs under the heading compound verbs in his book *Kannada Madhyama Vya:karaṇa*. But these are all of a limited kind of treatment of Kannada auxiliary verbs.

2. A close observation of the compound verbal constructions and auxiliary verbal constructions, shows a great difference between them. See the following sentences:

1. *ra:manu u:ṭa ma:ḍi ho:danu*
   'Rama went having eaten the meal.'

2. *ra:manu u:ṭa ma:ḍi biṭṭanu*
   'Rama finished (his) meal'

The (1) sentence clearly :states that Rama (Subject) went away having eaten the meal. It is a compound verbal construction. The sentence (2) shows the completive aspect of the action of eating the meal. So, it is clear that in the compound verbal constructions the equal importance of both constituent verbs in question is maintained. Any one .of the constituent verbs of the compound verbal construction does not alter, modify, or add the semantic content to the other verb. The second constituent verb of the compound verbal construction shows that the action has occured or occurs after the action of the first constituent verb has begun or finished. For example

3 *avanu no:ḍutta tindanu* 'He ate seeing'.

4. *no:ḍi bandanu* 'He came having seen'.

The auxiliary construction shows the state of the action or the mood of the speaker etc. For example:-

5. *na:nu ho:guttiddenu* 'I was going'.

6. *avanu ho:gabe:ku* 'He has to go'.

Here in the (5) sentence the continuous or the durative aspect of the action 'going' is added to the main verb '*ho:gu*' by the auxiliary verb *iru* 'to be'. In the (6) sentence the speaker wishes or wants the subject of the sentence to go or he thinks that the subject's going is a must for him.

Auxiliary verbal construction behaves like a well-knit unit. Even though certain clitics can be inserted between the main verb and the auxiliary no content word or other lexical items can be inserted.

7. *na:nu ho:gale:be:ku* 'I must go'.

8. *avanu ma:ḍale:ba:radu* 'He must not do'.

Here in the (7) and (8) sentences the *-e-* clitic is inserted between the auxiliary construction *ho:g+al+be:ku* 'has to go'. This *-e-* clitic intensifies the idea that the speaker expresses through the main verb.

9. *avanu u:ṭa ma:ḍi manege ho:danu*
'He went home having eaten the meal'.

10. *avanu u:ṭa ma:ḍi sin:ma no:ḍalu ho:giddanu*
'He had gone to see cinema having eaten the meal'.

Sentences (9) and (10) clearly show the difference between auxiliary constructions and compound verbal constructions. Insertion of lexical items, phrases, or even a sentence can be possible between the cumpound verbal constructions. Auxiliary construction does not show such kind of split at all. It allows only certain intensifiers to be inserted, between the main verb and the auxiliary, that too, only in certain restricted constructions.

3 Kannada auxiliary verbs can be broadly classified into (i) aspectual auxiliary verbs and (ii) modal auxiliary verbs. Generally, aspectual auxiliaries and modal auxiliaries occur after participle and infinitive forms of the preceding verbs respectively.

Aspectual auxiliary verbs denote the state of the action of the main verbs, whether the action conveyed by the main

verb is complete, continuous, reflexive, perfect etc. To illustrate a few: *iru* 'to be' is employed for durative, perfective and suppositional aspectual motions. *koḷ* 'to take' is used for 'reflexive'. The verbs *biḍu* 'to leave', *ha:ku* 'to put', *a:gu* 'to become' and *ho:gu* 'to go' are made use for completive aspect. Though all the four are conveying more or less the same semantic nuance the exploration into their depth shows subtle differences among them and their usages. The verbs *ho:gu* and *ha·ku* occur with intransitive and transitive verbs respectively in a broader classificatlon whereas the verbs *a:gu* and *biḍu* are more free in their distribution. All these aspectual auxiliaries occur as main verbs.

Modal auxiliaries in Kannada express the semantic notions like possibility, potentiality, permission, obligation, prohibition and so on. *bahudu* denotes permission, probability, feasibility, suggestion, etc. *ba:radu* and *ku:ḍadu* are for prohibitive notions. The verb *be:ku* is used for obligatlon, necessity, etc. The verb *be:ḍa* which is the counterpart of *be:ku* is used in imperative constructions to convey the meaning of unwantedness, prohibition, etc *a:r* denotes the potentiality which occurs always in negative construction. *bal* 'to know' will always be in positive construction denoting capabaility. Some of these modals can occur independently as main verbs and others depend upon the main verbs for their occurrence.

4. This study is mainly based on the preliminary observation made about the Kannada auxiliary verbs on a broader outlook So, only some of the auxiliary verbs in Kannada are considered and the issue is open for further investigation.

# சொல்லுக்கு முதலில் வரும் எழுத்துக்கள்

இரா. பாலகிருஷ்ணன்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

ஒரு மொழியில் இலக்கியம் முன் தோன்றியதா? இலக்கணம் முன் தோன்றியதா? என ஆராயின், இலக்கியமே முன் தோன்றியதென உணரப்படும். இலக்கியம் பேச்சுமொழியாக இருந்து, பின்னர் எழுத்து மொழியாக மாறுவது, அதன் வளர்ச்சியின் அடிப்படையில் அமையும் இயல்பாகும். இவ்வாறு வளர்ச்சியடையும் ஒரு மொழி காலப்போக்கில் வரம்பின்றி வளர்வதும் மாய்வதும், அம்மொழியைப் பயன்படுத்துவோரைப் பொறுத்து அமையும். ஒரு மொழி நிலைத்து நின்று, மக்கள் வாழ்விலும் வளர்ச்சியிலும் இடம்பெற்று, ஒரு நிலையான மொழியாக வேண்டுமானால் நல்லதொரு இலக்கணம் அமையவேண்டும். அதனடிப்படையிலேயே ஏறத்தாழ ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றிய ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியனார் தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலைத் தோற்றுவித்து, தமிழ்மொழிக்கு வரம்பு கட்டிச் சென்றார். அதன் பின்னர் சுமார் 1500 ஆண்டுகளாக எவ்வித இலக்கண நூலும் தோன்றியதாகத் தெரியவில்லை கி. பி. 11-ஆம் நூற்றாண்டில் தான் வீரசோழியம் என்னும் நூலும், 12-ஆம் நூற்றாண்டில் நேமி நாதம், நன்னூல் ஆகியனவும், 17-ஆம் நூற்றாண்டில் இலக்கண விளக்கமும், 18-ஆம் நூற்றாண்டில் தொன்னூல் விளக்கமும், 19-ஆம் நூற்றாண்டில் முத்துவீரியம், சாமிநாதம் ஆகிய நூற்களும் தோன்றின. எல்லா நூல்களுள்ளும் தொல்காப்பியமே மொழியிலக்கணத்தை நன்னெறியுடன் ஆராய்ந்து எழுதப்பட்டுள்ளது. பின்னர் வந்த நூல்களுள் நன்னூல் மட்டுமே

அனைவரும் போற்றும்படியுள்ளது. இவைகள் அனைத்தும் தமிழ் மொழியின் மரபிலக்கணமாகக் கொள்ளப்படுகின்றன.

இம்மரபிலக்கணங்களின் வழி நின்று மொழிக்கு முதலில் வரும் தமிழ் எழுத்துக்களை நோக்கினால், எவ்வகையான மாற்றங்கள் மொழிவளர்ச்சியில் ஏற்பட்டுள்ளன என்பது விளங்கும். மொழிக்கு முதலாகும் எழுத்து உயிர் பன்னிரண்டும், க, ச, த, ந, ப, ம, வ, ய, ஞ என்னும் உயிர்மெய் ஒன்பதும், மொழி முதற்கண் வரும் குற்றுகரம் ஒன்றுமாக இருபத்திரண்டு எழுத்துக்கள் என்பது தொல்காப்பியம். ஆனால், நன்னூலார் தொல்காப்பியர் கூறிய குற்றுகரத்தை நீக்கிவிட்டு ஙகரத்தைச் சேர்த்து மொழி முதலாகும் எழுத்து இருபத்திரண்டு என்பார். மற்ற இலக்கண ஆசிரியர்கள் 12 உயிர் எழுத்துக்களையும் க, ச, த, ந, ப, ம, ய, வ, ஞ ஆகிய 9 மெய்யெழுத்துக்களையும் சேர்த்து இருபத்தொரு எழுத்துக்களையே குறித்துச் செல்கின்றனர். இவர்கள் தொல்காப்பியர் மொழி முதல் குற்றுகரத்தையும் நன்னூலார் சேர்த்துக்கொண்ட ஙகரத்தையும் நீக்கியமைக்குத் தகுந்த காரணம் இல்லாதிருக்காது.

தொல்காப்பியர்,

> குற்றிய லுகரம் முறைப்பெயர் மருங்கின்
> ஒற்றிய நகரமிசை நகரமொடு முதலும் (தொல். 67)

என்ற நூற்பாவில் நுந்தை எனும் கிளைப்பெயரில் மட்டும் குற்றியலுகரம் மொழி முதலில் வரும் எனக் கூறுகிறாராயினும்,

> முற்றிய லுகரமொடு பொருள்வேறு படாது
> அப்பெயர் மருங்கின் நிலையியலான (தொல். 68)

எனும் புறனடை நூற்பாவால் மொழி முதல் குற்றுகரம் முற்றுகரமாக ஒலிக்கப்படினும், பொருள் மாறுபடாது என்பதை எடுத்துக் கூறுவதால் மொழி முதல் குற்றுகரத்தின் இன்றியமையாமை குறைந்து விடுதல் தெளிவாகிறது. இதனால் இதை மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்களுள் ஒன்றாக எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியமின்மையை உணர்ந்தே மற்ற இலக்கணநூலார் நீக்கியிருத்தல் வேண்டும். இது போன்றே,

ஙகரம் தனித்து மொழிக்கு முதலாவதன்றி 'முடவன் கோலூன்றி வந்தாற்போல' சுட்டு வினாவாகிய இடைச் சொற்களையே முன்னிட்டுவருவதால், அதனை மொழி முதற்கண் வரும் எனல் பொருந்தாது என இலக்கண விளக்க நூலார் கூறுவது ஈண்டு நோக்கத்தக்கது.

எனவே, தமிழ்மொழியில் உயிர் பன்னிரண்டும் மெய்ஒன்பதுமே மொழி முதல் வரும் தகுதியுடையதெனக் கோடல் தகும். அதன் படி இருபத்தொன்று என்றாலும்,

உயிர்மெய் அல்லன மொழிமுத லாகா (தொல் 60)

எனத் தொல்காப்பியர் கூறுவதால், உயிர்மெய்யெழுத்துக்களைக் கணக்கிடலே தமிழ் மரபிலக்கணப்படிப் பொருத்தமானதாகும். ஆனால், மேலே கூறிய எல்லா மெய்யெழுத்துக்களும் எல்லா உயிரொடும் ஏறி மொழி முதலில் வராது. எனவே எந்தெந்த மெய்யெழுத்துக்கள் எவ்வெவ்வுயிரொடு ஏறிவரும் என அனைத்து இலக்கண ஆசிரியர்களும் விளக்கியுள்ளனர். இவ்வாறு விளக்கி யுள்ளதை கீழ்வரும் பட்டியலால் அறியலாம்.

| | தொல். | வீரசோ. | நேமி. | நன். | இல-வி | மு-வீ. | சாமி. |
|---|---|---|---|---|---|---|---|
| உயிர் | 12 | 12 | 12 | 12 | 12 | 12 | 12 |
| க | 12 | 12 | 12 | 12 | 12 | 12 | 12 |
| ச | 9 | 12 | 12 | 12 | 10 | 12 | 12 |
| த | 12 | 12 | 12 | 12 | 12 | 12 | 12 |
| ந | 12 | 12 | 12 | 12 | 12 | 12 | 12 |
| ப | 12 | 12 | 12 | 12 | 12 | 12 | 12 |
| ம | 12 | 12 | 12 | 12 | 12 | 12 | 12 |
| வ | 8 | 8 | 8 | 8 | 8 | 8 | 8 |
| ய | 1 | 6 | 3 | 6 | 1 | 6 | 6 |
| ஞ | 3 | 4 | 3 | 4 | 3 | 4 | 6 |
| | 93 | 102 | 98 | 102 | 94 | 102 | 104 |

மேலேயுள்ள அட்டவணையை நோக்கும்போது எல்லா மரபிலக் கணங்களுக்கும் முன் தோன்றிய தொல்காப்பியம் தனித்து நிற்பது விளங்கும். ஆனால், சுமார் 15 நூற்றுண்டுகளுக்குப் பின்னர் வந்த இலக்கண விளக்க ஆசிரியர் தொல்காப்பியத்தைப் பின்பற்றி விளக்குதலையும் காணலாம். ச, சை, சௌ எனும் எழுத்துக்கள் மொழிமுதலில் வராது எனத் தொல்காப்பியம் கூற, சை, சௌ ஆகியன மட்டுமே வராது, சகரம் மொழி முதலில் வரும் என இலக்கண விளக்கத்தார் கூறுகின்றார். அதனால்தான், ப் அவை ஔ எனும் ஒன்றலங் கடையே" எனும் பாடபேதம் வலுவுடையதாகத் தோன்றுகிறது. இலக்கண விளக்கத்தாருக்கு முன்னர் தோன்றிய இலக்கண ஆசிரியர்கள் யகரம் ஆறு உயிர் களுடன் ஏறி மொழி முதல் வருமென்று கூற, இவர் மட்டும் தொல்காப்பியர் கூற்றுப்படி ஆவோடு மட்டுமே வரும மனக் கூறுவதால், தொல்காப்பியத்தை எவ்வளவு பின்பற்றுகிருர் என்பது விளங்கும். இந்நிலையில் சகர மெய்யில் மட்டும் மாறுபடுவது, அவர் காலத்தில் சகர மொழிமுதல் சொற்கள் ஏராளம் வழக்கிலிருந் திருக்க வேண்டுமென்பதையே காட்டுகிறது.

இதுபோன்றே, யகரம் அ, ஆ, உ, ஊ, ஓ, ஔ ஆகிய உயிர் களுடனும், ஞகரம் அ, ஆ, எ, ஒ ஆகிய உயிர்களுடனும் ஏறிவரும் என்பதில் முத்துவீரியம், நன்னூல், வீரசோழியம் ஆகியவை ஒற்றுமை உடையதாகவுள்ளன. ஆனால், ஞிமிறு (புறநானூறு, 93-12) என இகர உயிருடன் ஞகரம் ஏறி வருவது சங்க காலத்திலேயே உள்ளது என்பது ஈண்டு நோக்கத்தக்கது. அதோடு ஏகாரத்துடன் ஏறிவரும் ஞேயம் என்னும் சொல்லையும் சேர்த்து ஆறு உயிர்களுடன் ஞகரம் ஏறிவருவதாக எல்லா இலக்கண நூல்களுக்கும் பின்னர் தோன்றிய சாமிநாதம் கூறுகிறது.

இதனால், காலப்போக்கில் ஒருமொழியில் ஏற்பட்டு வரும் மாற்றத்தை விளக்குவது வெவ்வேறு காலங்களில் தோன்றிய இலக்கண ஆசிரியர்களது இயல்பு என்பதற்கு மொழி முதல் எழுத்துக்களின் அமைப்பே சான்றாக அமைவதைக் காணலாம்; அப்பொழுதுதான் அவரவர் காலத்து மொழியை விளக்குவதாக அது அமையும். இதனால், ஒரு காலத்தில் தோன்றிய இலக்கணம் எல்லா காலத்திற்கும் உரியதென அறுதியிடல் கூடாது என்பது

விளங்கும். அக்காலத்தில் எழுதிய இலக்கணமே போதுமென எண்ணி – அவ்விலக்கணவிதிகளுக்குமாறாக மொழியைப் பயன் படுத்தி வருவதைவிட, மொழி பயன்படும் விதத்திற்கேற்ப இக் காலத்தில் இலக்கணம் ஒன்று எழுதுவோமேயானால், மொழி முதல் எழுத்துக்களை மட்டும் பொறுத்த அளவிலேயே, புதிய மாற்றங்கள் பலவற்றைச் சேர்க்கவேண்டி வரும்.

1. மரபிலக்கணங்கள் மொழி முதலில் வராது எனக் கூறிய ட, ர, ல ஆகிய எழுத்துக்கள் மொழி முதலில் வருவதாகக் கொள்ளல் வேண்டும்.

2. ஞகரம் ஐகாரத்துடன் மொழி முதலில் வரும்.
உ. ம் ஞை = இகழ்ச்சிக்குறிப்பு

3. கிரந்த எழுத்துக்களாகிய ஸ, ஷ, ஜ ஆகியன பயன் படுவதையும் குறிப்பிடல் வேண்டும்.

மேலே காட்டிய எழுத்துக்களை மொழி முதலில் கொண்டு வரும் சொற்களையெல்லாம் பிறமொழிச் சொற்கள் என ஒதுக்கி விடலாம் எனக் கருதுவோமாயின், மரபிலக்கணங்களுக்கிடையே யுள்ள வேற்றுமைகளுக்கும் முக்கியத்துவம் இல்லை என்பதை மறத்தல் கூடாது; காலங்கள்தோறும் மரபிலக்கணங்கள் தோன்றத் தேவையுமில்லை.

# அமுதசாகரம் என்றெரு "நூல்" உண்டா?

அ. பிச்சை
மதுரைப் பல்கலைக்கழகம்

## முன்னுரை

அறவாணன் யாப்பருங்கலவிருத்தியிலிருந்து ஆசிரியர் பெயர் தெரியாத 76 நூற்பாக்களை எடுத்து தொகுத்து பொழிப்புரையும் தந்து "அமுதசாகரம்" என்ற பெயரில் ஒரு நூல் வெளியிட்டுள்ளார். பெயர் அறியப்படாத அந்த நூற்பாக்களுக்குச் சொந்தமானவர் அமுதசாகரர் என்றும், ஆகவேதான் அப்பெயரால் நூல் அழைக்கப் படுகின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். நூலின் இறுதியி லுள்ள 5 நூற்பாக்களைத் தவிர, 71 நூற்பாக்கள் யாப்பியல் பற்றி பேசுகின்றனவாம். இந்நூற்பாக்களை ஆழ்ந்து நோக்கி ஆராயு மிடத்து பல முரண்பாடுகள் காணப்பட்டன. இவையாவும் ஒரே ஆசிரியனால் இயற்றப்பட்டிருக்குமா? அமுதசாகரம் என்றெரு நூல் இருந்திருக்குமா? என்ற ஐயம் என் மனதில் எழுந்தது. இந்த ஐயமே அமுதசாகரம் என்ற பெயரிய நூலை ஆராய்ந்து மதிப்பிட வேண்டும் என்ற கட்டுரை நோக்கத்திற்கு இட்டுச்சென்றது.

## அமுதசாகரத்தின் யாப்பு

தமிழ் இலக்கணிகள் ஏதேனும் ஒரு குறிப்பிட்ட யாப்பு வடிவத்திலே இலக்கணம் யாப்பதுதான் மரபு எடுத்துக்காட்டாக, யாப்பருங்கலம் அகவற்பாவிலும், யாப்பருங்கலக் காரிகை கட்டளைக் கலித்துறையாலும், அவிநயனரின் நாலடிநாற்பது வெண்பாவிலும் ஆக்கப்பட்டிருக்கின்றன. இவற்றைப் போன்றே எல்லா இலக்கண

நூல்களும் ஒரே ஒரு யாப்பிலே அமைகின்றன. இக்கருத்தினைக் கொண்டு அமுதசாகரத்தின் யாப்பமைதியினை நோக்குவோம்.

அமுதசாகரம் 71 நூற்பாக்களைக் கொண்டது. அமுதசாகரத்தில் 4 கலிவிருத்தங்களும் (அமு: 52, 54, 63, 71), 5 கட்டளைக் கலித் துறைகளும் (அமு: 2, 3, 39, 40, 41), 62 வெண்பாக்களும் உள்ளன. வெண்பாக்களையும் வகைப்படுத்துமிடத்து 8 குறள் வெண்பாக் களும், ஒரு இன்னிசை வெண்பாவும், 52 நேரிசை வெண்பாக்களும், ஒரு பஃறொடை வெண்பாவும் இருப்பது தெரியவருகின்றன.

அமுதசாகரம் வெண்பாவில் இயற்றப்பட்ட நூல் என்று பதிப் பாசிரியர் (1974: v, viii) கூறுகின்றார். ஆனால் அமுதசாகரத்தில் கலிவிருத்தம், கட்டளைக்கலித்துறை ஆகிய யாப்புக்களால் அமைந்த நூற்பாக்கள் காணப்படுகின்றன. மேலும் வெண்பாவினுள் ஒரு குறிப்பிட்ட வகையினை ஆளவில்லை. தமிழ் இலக்கண வரலாற்றில் ஒரே இலக்கணநூலில் பல யாப்புகள் ஆளப்படுதல் வழக்கமில்லை. இவையாவும் ஒரே ஆசிரியனால் இயற்றப்பட்டவை என்று கருத இயலாது. எனவே அமுதசாகரர் இவ்வாறு கலப்படமாக யாப்புக் களைக் கையாண்டு யாப்பிலக்கணம் எழுதியிருப்பாரென்று நினைத்துக் கூட பார்க்க முடியவில்லை.

மகடூஉ முன்னிலை உத்தி

இடைக்காலத்தில் மகளிரை விளித்துக் கூறுவதாக நூற் பாக்களை யாக்கும் உத்தி தோன்றியது. அம்முறையிலே யாப்பருங் கலக்காரிகை, வீரசோழியம் போன்ற நூற்களும் அமைந்தன. அமுதசாகரமும் மகடூஉ முன்னிலையில் அமைந்துள்ளது என்கிறார் பதிப்பாசிரியர் (1927 : 27). ஆனால் நூல் முழுவதிலும் மகடூஉ முன்னிலை ஒரே சீராக கையாளப்படவில்லை. இரண்டு பாக்களில் (அமு: 33, 45) மட்டுமே மகடூஉ முன்னிலை வந்துள்ளது. ஓர் ஆசிரியர் ஓர் உத்தியைப் பின்பற்றி எழுதியிருந்தால், அவர் எல்லா வற்றிலும் ஒரே சீராக ஒழுங்காகக் கையாண்டிருப்பார். எனவே அமுதசாகரத்தில் உள்ள நூற்பாக்கள் ஒருவரால் இயற்றப்பட்டவை அன்று.

## அமுதசாகரரின் யாப்பியல் நெறி

ஈரசைப்பகுப்பும், நாலசைச் சீர்வகைகளும், சீரடிப்படையில் அடிகளை குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி என்று பிரிப்பதும் அமுதசாகரரது யாப்பியல் நெறியின் முக்கியமான கூறு களாகும். (யா.க: 5, 13, 23, 24) அமுதசாகரத்தின் யாப்பியலை ஆராயும்பொழுது எழுத்தடிப்படையில் நாற்சீரடியைப் பகுப்பதும் (அமு: 19–27), நாலசைச்சீரை ஏற்றுக் கொள்ளாமையும் (அமு: 43), நாலசைப்பகுப்பும் (அமு: 39–41) காணப்படுகின்றன. இம்மூன்றும் தொல்காப்பியரின் யாப்பியற் கொள்கையில் இன்றியமையாத இடம் பெறுவன. எழுத்தடிப் பகுப்பையும், நாலசைச்சீரை ஏற்காமையும், நாலசைப்பகுப்பையும் அமுதசாகரரின் மேல் ஏற்றி யுரைப்பது பொருத்தமானதாகத் தெரியவில்லை. அமுதசாகரத்தின் உள்ளடக்கத்தை ஆராய்ந்தால், ஒரு குறிப்பிட்ட யாப்பியல் நெறி தூக்கலாக இல்லாமல் பல முரண்பட்ட கருத்துக்கள் இயைபின்றி மயங்கிக் கிடப்பதை அறியலாம். ஓர் ஆசிரியரின் படைப்பாக இருக்குமானால், நிச்சயமாக கருத்தியைபு இருக்கும். அமுத சாகரத்தில் அத்தகைய இயைபு இன்மையால் அமுதசாகரர் எழுதி யிருப்பார் என்று கொள்ள இயலாது.

## பிற இயல்களின் கலப்பு

இதுவரை வெளிவந்துள்ள எந்த யாப்பிலக்கண நூலும் எழுத்துக்களின் பிறப்பையோ பாவிற்குரிய வருணங்களையோ யாப்பியலில் கூறவில்லை. எழுத்துக்களின் பிறப்பை எழுத்ததி காரத்தில் விளக்குவதே இலக்கணிகளின் மரபு. பாவிற்குரிய வருணங்களைப் பற்றி பாட்டியல் நூல்கள்தாம் எடுத்துரைக்கின்றன. அமுதசாகரர் கலத்திலோ காரிகையிலோ எழுத்துக்களின் பிறப்பை யும் பாக்களின் வருணத்தையும் குறிப்பிடவில்லை. ஆனால் இவ் விரண்டையும் (அமு: 7, 55–58) அமுதசாகரம் குறிப்பிடுவது முற்றிலும் புதுமையாக இருக்கின்றது.

## இலக்கணிகளின் பெயர் சுட்டல்

இலக்கணிகள் தம்நூலில் முன்னோரின் பெயரைக் குறிப்பிட்டு எழுதுவதை மரபாகக் கொண்டிலர். தொல்காப்பியர் முதலாக எல்லா

இலக்கணிகளும் முன்னோரின் பெயரைக் குறிப்பிடாது, என்ப - என்மனார் புலவர் என்று சுட்டி கருத்துக்களைக் கூறிச் செல்வர். ஆனால் அமுதசாகரத்தில் சிறுகாக்கைபாடினியார் (அமு: 64), பேராசிரியர் (அமு: ͻ7) போன்ற இலக்கணிகளின் பெயர்களும், தொல்காப்பியம், நக்கீரன் அடிநூல் (அமு: 52) போன்ற இலக்கணங்களின் பெயர்களும் சொல்லப்பட்டிருக்கின்றன. இவ்வாறு பெயர்களைக் குறிப்பிட்டுச் சொல்வது உரையாளர்களின் நெறியோ; இலக்கணிகளின் மரபன்று. எனவே யாப்பிலக்கணிகளின் - யாப்பிலக்கணங்களின் பெயர்களைச் குறிப்பிட்டு அமுதசாகரர் இயற்றியிருப்பாரா என்பது வியப்பாக உள்ளது.

## இருநூல்களிலும் குறிப்பின்மை

கலம், காரிகை இரண்டும் இயற்றப்பட்ட பின்பே இரண்டிற்கும் உரைகள் எழுதப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில் கலத்தில் காரிகையைப் பற்றியும், காரிகையில் கலத்தைப் பற்றியும் குறிப்பு உள்ளது. அறவாணன் கருத்துப்படி காரிகைக்கு முன்னும் கலத்திற்குப் பின்னும் அமுதசாகரம் இயற்றப்பட்டிருந்தால், உரைகளில் வெளிப்படையாக மேற்கோள் இருந்திருக்க வேண்டும். ஏனெனில் எத்தனையோ பல இலக்கணங்களைக் குறிப்பிடும் குணசாகரர் அமுதசாகரத்தைச் சொல்லாமல் விட்டிருப்பார் என்பது வெறுங் கற்பனையாகிவிடும். 'வேதத்திற்கு நிருத்தமும், வியாகரணத்திற்குக் காரிகையும் அவிநயனூர் யாப்பிற்கு நாலடி நாற்பதும் போல யாப்பருங்கலம் என்னும் யாப்பிற்கு அங்கமாய், அலங்காரம் உடைத்தாகச் செய்யப்பட்டமையால் யாப்பருங்கலக் காரிகையென்னும் பெயர்த்து' என்று கூறும் காரிகை உரையாளர் (1974:8) அமுதசாகரம் என்ற நூல் இருந்திருந்தால் குறிப்பிடாமல் போயிருப்பாரா? பல நூல்களைப் பற்றிக் கூறும் யாப்பியற் களஞ்சியமான யாப்பருங்கல விருத்தி அமுதசாகரத்தைக் குறிக்காமல் போயிருக்கும் என்பதை நம்புதற்கில்லை.

## தொகுப்பு முறைக்கு அடிப்படைகள்

யாப்பு, கருத்து, உத்தி போன்றவற்றில் இயைபும் ஒழுங்கும் நூற்பாக்களிடையே இல்லை. இங்ஙனமாக இருக்கும் பொழுது

பதிப்பாசிரியர் எதன் அடிப்படையில் நூலைத் தொகுத்தார் என்றும் அதற்கானச் சான்றுகளின் தரம் பற்றியும் ஆராயலாம்.

முதல் அடிப்படை – தலைமைச் சான்று

யாப்பருங்கலக்காரிகையைக் கொடுத்து விட்டு "விரித்துக் கொள்க" என்று உரையாசிரியர் (1973:264) எழுதுகிறார். சில வெண்பாக்களை யும் தந்துவிட்டு "விரித்துக் கொள்க" என்று (1973:30-31) எழுது கிறார். காரிகையை எழுதியவர் அமுதசாகரர் என்பதால், வெண் பாக்களுக்குச் சொந்தமானவர் அமுதசாகரர் என்று தம் கருத்தை நிலைநாட்டுகிறார் பதிப்பாசிரியர். மற்றும் உரையை எழுதியவர் மீண்டும் தொகுத்துச் சொல்லும் நோக்கில் நூற்பாக்களை இயற்ற வேண்டிய அவசியமில்லையாதலால் இவற்றை உரையாசிரியர் இயற்றியிருக்க முடியாது என்கிறார் (1974:V).

"விரித்துக் கொள்க" என்ற தொடரை காரிகைக்கு - வெண் பாக்களுக்கு முன் மட்டும் பயன்படுத்தவில்லை. திவாகர நிகண்டி லிருந்து ஒரு விருத்தத்தை எடுத்துத் தந்துவிட்டு விரித்துக்கொள்க என்கிறார் உரையாசிரியர் (1973:346) கட்டளைக் கலித்துறையில் அமைந்த-யாப்பருங்கலக்காரிகையில் இல்லாத நூற்பாவை (1973: 445) தந்துவிட்டு விரித்துக் கொள்க என்று கூறுகின்றார். எனவே விரித்துக் கொள்க என்பதை யாப்பருங்கலக் காரிகைக்கு மட்டும் பயன்படுத்துவதாகக் கொள்வது தவறு: மேலும் விரித்துக் கொள்க என்ற அடிப்படையை ஒரே மாதிரியாக – ஒழுங்காகப் பதிப்பாசிரி யர் பின்பற்றவில்லை. விரித்துக் கொள்க என்ற தொடர் இல்லாத நூற்பாக்களையும் (1973:86) பதிப்பித்துள்ளார். இருப்பினும் முழுமை யாகப் பதிப்பிற்கு எடுக்காமல் சிலவற்றை (1974: 113, 346, 357, 443) நீக்கிப் பதிப்பித்துள்ளார். நீக்கியதற்குரியக் காரணங்களை யும் முன்னுரையில் எவ்விடத்தும் குறிப்பிடவில்லை. ஒரே தொகுதி யாக உரையாளரால் தரப்பட்டுள்ளவை ஏன் ஒரே ஆசிரியனால் இயற்றப்பட்டிருக்க முடியாது? தனக்கு தேவையானவற்றைக் கொண்டும் தேவையில்லாதவற்றை விடுத்தும் பதித்திருப்பது தன்னுணர்ச்சிப் (Subject) பாங்கினதாகும். எனவே அவர் தொகுப்பு முறைக்குக் கொண்டுள்ள அடிப்படை அல்லது தலைமைச்சான்று வலுவுடையதாக - அறிவுப்பாங்காக அமையவில்லை.

இரண்டாம் அடிப்படை - துணைச்சான்று

யாப்பருங்கல விருத்தியில் காணப்படும் கீழே தரப்படும் சான்றினை அமுதசாகரம் என்ற நூலொன்று இருந்தமைக்கு ஆதாரமாகக் கூறுவர் (1974:24-25) : (i) இந்நூல் உடையாரும் (அமுதசாகரர்) மாஞ்சீர் கலியுட் புகா (காரிகை: 40) என்னும் இதன் புறநடையானும் (ii) நாலசைச்சீர் வெண்பாவில் நண்ணு... குறித்து என்னும் புறநடையானும், பிறவாற்ருனும் விளங்கக் கூறினர் என்க' முதல் தொடர் தரும் பொருள் பற்றி மயக்கம் இல்லை. ''இந்நூல் உடையார்'' என்பது அமுதசாகரரையும், ''இதன்புறநடை'' என்பது யாப்பருங்கலக் காரிகையையும் விளக்கு கின்றன. இங்கு இரண்டாவது தொடர் பற்றியே பிரச்சனை உள்ளது. முதல் தொடரில் ''புறநடை'' என்பதற்கு முன் ''இதன்'' என்ற சுட்டுபெயர் யாப்பருங்கலத்தைச் சுட்டி நிற்கிறது. ஆனல் இரண்டாம் தொடரில் ''புறநடை'' என்பதற்கு முன் சுட்டுப் பெயர் இல்லை; பொதுவாக உள்ளது. அமுதசாகரர் வெண்பாவில் அமைந்த புறநடையை இயற்றியிருப்பாராஞல் நிச்சயம் ''இதன்'' என்ற சுட்டுப் பெயரைச் சேர்த்திருப்பார். இந்நூற்பாவை இயற்றியவர் வேருெருவராக இருந்தமையினல் ''இதன்'' என்னும் சுட்டினைச் சேர்க்கவில்லை.

முடிவுரை:—

அமுதசாகரம் என்ற நூல் தொகுத்தமைக்கு பதிப்பாசிரியர் கொண்டுள்ள அடிப்படைகள் அல்லது சான்றுகள் வலுவில்லாதவை, மயக்கம் தருபவை. ஒரே சீராகப் பின்பற்றப்படாதவை. எனவே அமுதசாகரம் என்ற ஒரு நூல் தமிழ் யாப்பிலக்கண வரலாற்றில் காணப்படாத ஒன்ருகும். அப்படியொரு நூலை அமுதசாகரர் இயற்றவில்லை என்பதும் உண்மையாகும். மிக்க குறைபாடு களுடன் ஒரு நூலைத் தவறுதலாகப் பதிப்பித்திருப்பினும் பதிப்பாசிரியரின் முயற்சியை நாம் பாராட்ட கடமைப் பட்டுள்ளோம்.

# பேச்சுத்தமிழில் வேற்றுமையமைப்பு

க. புஷ்பவல்லி
அண்ணுமலைநகர்

மொழி என்பது சாதாரண ஒரு செய்திப் பரிமாற்றச் சாதனமாகும் என்பதோடு மட்டுமல்லாமல் ஒரு சமுதாயத்திற்குள்ளும், பல சமுதாயங்களுக்கிடையேயும் நல்லதொரு தொடர்பை - உறவு முறைகளை ஏற்படுத்துவதிலும், அவ்வாறு ஏற்படுத்திய பல தொடர்புகளை நிலைநாட்டுவதிலும், திறமை படைத்த ஒரு கருவியாக இயங்குகிறது என்பதை நாம் அறிவோம். இத்தகைய சமுதாயத் தொடர்புகள் மொழியின் மூலம் நன்கு வெளிப்படுத்தப் படுகின்றன எனலாம். இவ்வாறு வெளிப்படுத்தப்படும் தொடர்புகள் மனித இனத்தின் சமுதாயப் பழக்க வழக்கங்கள், வாழ்க்கை அமைப்பை ஓரளவிற்குத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகின்றன என்லாம். ஆகவேதான் மொழியை சமுதாயத்தின் உண்மை நிலையைப் பிரதிபலிக்கும் கண்ணுடி என்று சில மொழியியல் அறிஞர்கள் சொல்லுகிருர்கள்.

மேலும் மொழியானது சமுதாயக்கட்டுக் கோப்புக்குள் வரும் ஒரு சீரிய அங்கம் என்பது நிறுவப்பட்ட உண்மை. அதனுல் மொழி சமுதாய அமைப்போடு பின்னிப் பிணைந்து நிற்கிறது என்பது மறுக்க முடியாத ஒன்ருகும். இவ்வியக்கத்திற்கு மொழியின் பேச்சு வழக்கும் (spoken variety) எழுத்து வழக்கும் (written variety) பலவகைகளில் துணை நிற்கின்றன. ஒரே மொழியின் இருநிலைத்தன்மை என்பது பேச்சு வழக்கிற்கும் (spoken variety) எழுத்து வழக்கிற்கும் மிகுந்த வேறுபாடு ஏற்பட்டு, இரண்டு

வழக்குகளும் இருதனி நிலைகளாகச் செயல்படும்போது தோன்றுவ தாகும். தமிழ் இதற்கு நல்லதோர் எடுத்துக் காட்டாக விளங்கு கிறது. தமிழிலும் எழுத்து வழக்கு, பேச்சு வழக்கு முதலியன உள்ளன. தமிழின் பேச்சு வழக்கினைக் கொச்சைத் தமிழ் அல்லது பேச்சுத் தமிழ் என்று அழைக்கலாம். பேச்சுத் தமிழ் இடத்திற்கு இடம், சமூகத்திற்குச் சமூகம் வேறுபாடுகள் நிறைந்து காணப்படு கின்றது. தமிழகத்தில் ஒரே இடத்தில் வாழும் பல்வேறுபட்ட சமூகங்களைச் சார்ந்தவர்களின் பேச்சு வழக்குகளிடையே வேறு பாடுகள் அதிக அளவில் காணப்படுகின்றன. மேலும் ஒரே சமூகத்தைச் சார்ந்தவர்களின் பேச்சு வழக்கும் இடத்திற்கு இடம் வேறுபட்டு ழங்கி வரும் நிலையினைக் காணலாம். இட வேறுபாடு களின் அடிப்படையில் தமிழ்ப் பேச்சு வழக்குகளை ஐந்து பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம், அவையாவன

1) வடபகுதிக் கிளை மொழி (Northern dialect)
2) கிழக்குப்பகுதிக் கிளைமொழி (Eastern dialect)
3) மேற்குப்பகுதிக் கிளைமொழி (Western dialect)
4) தென்பகுதிக் கிளைமொழி (Southern dialect)
5) நாஞ்சில் நாட்டுக்கிளை மொழி (Nanjilnad dialect)

மரபு இலக்கணத்தார் தமிழில் எட்டு வேற்றுமைகள் உண்டு என்று கூறிப் போந்தனர். பேச்சுத்தமிழில் அதாவது கிளைமொழி களில் காணப்படுப் வேற்றுமை பமைப்புகளைப்பற்றி ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும். கிளை மொழிகளில் வேற்றுமை உருபுகள் கீழ்க்கண்ட மாற்றங்களை அடைகின்றன.

1. ஒலி மாற்றத்தால் ஏற்படும் உருவ மாற்றம்

2. முறையில் ஏற்படும் மாற்றம்.

3. இடப்பெயர்கள் (Pronouns) வேற்றுமை உருபுகளை ஏற்கும் போது வேறுபட்ட வேற்றுமைப் பெயர்கள் (obliqueforms) கிடைக்கின்றன.

4. மொழித்தொடர்பு அமைப்பு இடையீடுகளுக்கு (structural interference) வழி வகுக்கிறது.

எ. டு. கன்னியாகுமரி வட்டாரக் கிளை மொழி.

முதல் வேற்றுமை

எல்லாக் கிளை மொழிகளிலும் முதல் வேற்றுமையைக் குறிக்க உருபு இல்லை. இவ்வேற்றுமையை வேற்றுமைகளில் ஒன்ருக கருதுவதா வேண்டாமா என்பது ஆராய்ச்சிக்குரிய ஒன்ருகும். முதல்வேற்றுமை வாக்கியத்தின் எழுவாயாக செயல்புரிகிறது.

இரண்டாம் வேற்றுமை

இவ்வேற்றுமையை 'ஐ' வேற்றுமை என்றும் அழைக்கலாம். இவ்வேற்றுமை உருபான 'ஐ' எல்லா உயர்திணை பெயர்ச்சொற்களுடனும் உயர்திணை இடப்பெயர்களுடனும் கட்டாயம் வரும். 'ஐ' உருபு எழுத்துத் தமிழின் இரண்டாம் வேற்றுமை உருபாகும்

எ. டு. நான் இராமனைப் பார்த்தேன்

நான் அவனைப் பார்த்தேன்

ஆனால் நான் இராமன் பார்த்தேன் என்ற வாக்கியம் இலக்கணப் பிழை உள்ள வாக்கியம் ஆகும். அவ்வுருபு அஃறிணைப் பெயர்ச் சொற்களுடன் வரும்போது மட்டும் விருப்பு உருபாக வருகிறது.

நான் புத்தகத்தை (புத்தகம்+ஐ)ப் படித்தேன்

நான் புத்தகம் படித்தேன்

பேச்சுத்தமிழில் இரண்டாம் வேற்றுமை உருபு –எ (*–e*) ஆகும்.

அவன் இராமனேப் பார்த்தான்

திருநெல்வேலி கிளை மொழியில் இரண்டாம் வேற்றுமை உருபுகள் -எய, - அ என்பனவாகும்.

எ. டு. மரத்த (*maratta*)

என்னேய (*eneya*) 'me'

கோயமுத்தூர் கிளை மொழியில் -ஏ, -ஏயே ஆகிய உருபுகள் இரண்டாம் வேற்றுமையைக் குறிக்கின்றன.

மரத்தே (*maratte*) 'tree'

என்னேயே (*enneye*) 'me'

மற்ற கிளை மொழிகளில் -ஏ உருபே இரண்டாம் வேற்றுமைப் பொருளைத் தரக்காணலாம்.

திருச்சி, தஞ்சாவூர், தென் ஆற்காடு போன்ற வட்டாரங்களில் உள்ள படையாச்சி கிளை மொழிகளில் இரண்டாம் வேற்றுமை உருபான -ஏ நான்காம் வேற்றுமைப் பொருளைத் தருகிறது.

நீ ஊட்டே போ (*ni: u:ṭṭe po:*)

நீ ஊட்டே வாயேன் (*ni: u:ṭṭe va:ye:n*)

மூன்றும் வேற்றுமை

மூன்றும் வேற்றுமையைக் 'கருவி வேற்றுமை' என்றும் கூறலாம். எழுத்துத் தமிழில் -ஆல், கொண்டு என்பன மூன்றும் வேற்றுமை உருபுகள் ஆகும்.

1) அவன் கத்தியால் வெட்டினன்

2) அவன் கத்தி கொண்டு வெட்டினன்

நாஞ்சில் நாட்டு கிளை மொழியில் -ஆலே, -ஏ+வச்சு, இட்டு என்பன மூன்றும் வேற்றுமை உருபுகள் ஆகும்.

1) அவன் கத்தியாலே வெட்டினன்

2) அவன் கத்தியே வச்சு வெட்டினன்

3) அவன் கத்தியிட்டு வெட்டினன்

தென் ஆற்காட்டு கிளைமொழிகளில் -ஆலே, கொண்டு என்பன மூன்றும் வேற்றுமை உருபுகளாகும்.

1) அவன் கத்தியாலே வெட்டினன்

2) அவன் கத்தி கொண்டு வெட்டினன்

தஞ்சாவூர், சேலம், கோயமுத்தூர் கிளைமொழிகளில் -ஆலே மட்டும் மூன்றும் வேற்றுமைப் பொருளைத் தருகிறது.

'ஒடு' வேற்றுமை

இவ்வேற்றுமையை 'உடனிகழ்ச்சி வேற்றுமை' என்றும் அழைக்கலாம். எழுத்துத் தமிழில் 'ஓடு' 'உடன்' ஆகிய உருபுகள் உடனிகழ்ச்சி வேற்றுமைப் பொருளைத் தருகின்றன.

எ. டு. நான் அவனோடு போனேன்
நான் அவனுடன் போனேன்

எல்லாக் கிளை மொழிகளிலும் உடனிகழ்ச்சி வேற்றுமை உருபாக 'ஓட' வருகிறது.

எ. டு. என்னோடே வா

உடனிகழ்ச்சி வேற்றுமை உருபு 'ஓட'விற்கு பதிலாக பின்னொட்டு கூட' வைப் பயன்படுத்தலாம்.

எ. டு. என் கூட வா

நாஞ்சில் நாட்டு வட்டார மொழியில் மட்டும் கீழ்க்கண்ட அமைப்புகளைக் காணமுடிகிறது.

1) ஓட என்னோட
2) கூட என்கூட
3) ஓடகூட என்னோட கூட
4) அக்க கூட எனக்க கூட

தஞ்சாவூர் கிளை மொழியில் உடனிகழ்ச்சி உருபான 'ஓட' ஆறும் வேற்றுமைப் பொருளையும் தரக் காணலாம். இங்கு ஆறும் வேற்றுமை உருபு 'உடைய' செய்யும் செயலை இவ்வுருபு செய்கிறது

என்னோட புத்தகம்
என்னுடைய புத்தகம்

நான்காம் வேற்றுமை

பொதுவாக நான்காம் வேற்றுமை உருபு 'கு' ஆகும். நான்காம் வேற்றுமை உருபு, தன்மை, முன்னிலை ஆகிய இடங்களில் வரும்போது, மெய் இடம் பெயரல் (metathesis) ஒலியன்

இழப்பு (loss of phoneme) போன்ற உருவ மாற்றங்களை அடைகிறது. அதன் பொதுவான அமைப்பினை நாம் கீழே காணலாம்.

நான் + கு > எனக்கு
நீ + கு > உனக்கு

பிராமணர்கிளை மொழியில் கீழ்க்கண்ட அமைப்புக்கள் காணக் கிடக்கின்றன.

நேக்கு (*ne:kku*)
(எனக்கு)
நோக்கு (*nokku*)
(உனக்கு)

இடப்பெயர் (Pronoun) நான்காம் வேற்றுமை உருபினை ஏற்கும் முன் அடையும் மாற்றங்களைக் கீழ்வருமாறு கூறலாம்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| நான் | > | என - | > | நெஅ - | > | நே |
| *na:ṉ* | > | *eṉa* - | > | *nεa* - | > | *ne:-* |
| நீ | > | உன - | > | அஉ - | > | நோ |
| *ni:* | > | *una* - | > | *nau* - | > | *no:* |

நான்காம் வேற்றுமை உருபான 'கு' ஆறும் வேற்றுமைப் பொருளைத்தரக் காணலாம்

இவன் இராமனுக்குத் தம்பி என்ற வாக்கியம் இவன் இராமனுடைய தம்பி என்ற பொருளைத் தருகிறது.

## ஐந்தாம் வேற்றுமை

ஐந்தாம் வேற்றுமையின் அமைப்பு சிக்கலானது. இவ் வேற்றுமை நீங்கற் பொருளைத் தருகிறது. ஐந்தாம் வேற்றுமை உருபாக 'இருந்து' கருதப்படுகிறது. இவ்வேற்றுமை உருபு இட-வேற்றுமை உருபுகளான இல், இடம் முதலியவற்றிற்கு பின் வந்து நீங்கற் பொருளைத் தருகிறது. அதன் வரலாற்றை அறிய முற்பட்டால் அது 'இரு' என்ற வினையின் வினையெச்சமான 'இருந்து' ஐந்தாம் வேற்றுமை உருபாக பயன்படுத்தப் படுகிறது என்பதை அறிகிறோம்.

# விளம்பரங்களில் குறைத் தொடர்கள்

தங்க மணியன்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் சென்னை

1.0. ஒரு சில தொடர்கள் தன்னளவில் முழுப் பொருளைத் தாராது. முழுப் பொருளைத் தர வேறொரு பொருத்தமான சொல்லை வேண்டி நிற்கும். பொருத்தமான அச்சொல் தொடரில் தொக்கி நிற்கும். பொருத்தமான சொல்லை வருவித்து வேண்டிய இடத்தில் இட்டு நிரப்பி தொடரைப் படித்தால்தான் அத்தொடர் முழுப்பொருளை வெளிப்படையாகத் தரும். பொருள் முடிபுக்காகத் தகுதியுடைய வேறொரு சொல்லை வேண்டி நிற்கும் இத்தகு தொடர்களைக் குறைத்தொடர்கள் என்பர். அத்தகைய தொடர்கள் தமிழ்ப்பத்திரிக்கைகளில் குறிப்பாக விளம்பரங்களில் அதிகமாகப் பயன்படுத்தப்படுவதற்குக் கீழ்க்கண்ட இயல்புகள் காரணங்களாக அமைகின்றன.

1. இடச்சுருக்கம்
2. படிப்பவரைக் கவர்தல்
3. பொருளில் சிறப்பை அறிவுறுத்தி, அவாவைத் தூண்டி ஆர்வத்தை வளர்த்து வாங்கத் தூண்டுதல்
4. தெளிவாகப் புரிய வைத்தல்.

2.0. குறைத் தொடர் இரண்டு விதமான சூழலில் பயன் படுத்தப்படுகின்றது. அவை

1. மொழிச் சூழல்
2. மொழியல்லாச் சூழல் என்பனவாகும்.

2.1. மொழிச் சூழல் இயல்பான மொழிச் சூழல், உரையாடல் மொழிச் சூழல் என இருவகைத்தாகும்.

2.1.1. இயல்பான மொழிச் சூழலில், தொக்கு நிற்கின்ற பொருத்தமான சொல்லை தொடரின் இயல்புக்கேற்ப வருவித்து முழுப்பொருளை உணர்த்தலாம்.

உ. ம். புத்துணர்வு பெற நெஸ்கஃபே { பயன்படுத்துங்கள் / அருந்துங்கள் / உபயோகியுங்கள் }

2.2.2. உரையாடல் மொழிச் சூழலிலும் தொக்கு நிற்கின்ற பொருத்தமாக சொற்கள் வருவிக்கப்படுகின்றன. ஆனால் இங்கு தொக்கு நிற்கின்ற சொற்களை வருவிக்க உரையாடல் விதி (Discourse rule) பயன்படுகின்றது. இவ்விதியினைப் பயன் படுத்தக் காரணம், வருவிக்கப்படுகின்ற சொற்களின் திரிபுகளே யாகும்.

உ. ம் 1. சிந்தனை வளர்வது எதனாலே?
சிறந்த ரத்தினம் பொடியாலே

2. க்வாலிடி க்ளுக்கோஸ் பிஸ்கட்டைச் சிறப்புறச் செய்வது எது?
அதன் ஆற்றல்

3. இந்தச் சின்னம் எதைக் குறிக்கின்றது?
பிஸ்கட் தயாரிப்பில் சிறந்ததை.

இம்மூன்று எடுத்துக்காட்டுகளிலும் உள்ள பதில்கள் குறைத் தொடராக அமைந்துள்ளன. இவற்றின் முழுத் தொடர்கள் முறையே,

1. சிந்தனை வளர்வது சிறந்த ரத்தினம் பொடியாலே என்றும்
2. க்வாலிடி க்ளுக்கோஸ் பிஸ்கட்டைச் சிறப்புறச் செய்வது அதன் ஆற்றல் என்றும்

3. இந்தச் சின்னம் பிஸ்கட் தயாரிப்பில் சிறந்ததைக் குறிக்கின்றது என்றும் இருத்தல் வேண்டும். இவ்வாறு இம்

முழுத்தொடர்களை வருவிக்கப்பயன்படுவன உரையாடல் விதிகளேயாகும்.

2.2 குறைத்தொடர்கள் பயன்படுத்தப்படும் மற்றொரு சூழல் மொழியல்லாச் சூழலாகும். மொழியல்லாச் சூழல் என்பது பிறச்சூழலாகும். தொடரின் புறத்தே அமைந்துள்ள சூழல்கள், குறைத்தொடரை நிறைக்கத் தேவைப்படுகின்ற ஏற்றதொரு சொல்லைத் தருவிக்க ஏதுக்களாக அமைகின்றன.

விளம்பரங்களில் புறசூழல்களாக அமைவன பெரும்பாலும் படங்களேயாகும். சார்மினார் சிகரெட்டைக் குடிப்பது போன்ற ஒரு மனிதனின் படத்தையும் அருகில் சார்மினார் சிகரெட் பெட்டி ஒன்றில் படத்தையும் போட்டு அதற்குக் கீழே

இந்தியாவிலேயே அதிக விற்பனையுள்ள சிகரெட் என்ற குறைத் தொடரையும் பயன்படுத்தியிருப்பர். இதன் முழுப் பொருள்

இந்தியாவிலேயே அதிக விற்பனையுள்ள சிகரெட் சார்மினார் என்பதாகும். மேலே கண்ட குறைத்தொடருக்கேற்ற 'சார்மினார்' என்ற சொல்லை வருவிக்கத் துணை புரிந்தது குறைத்தொடரின் மேலே உள்ள படமேயாகும்.

3.0. குறைத் தொடர்களில் தொக்கு நிற்கின்ற சொற்கள் பெயராகவோ, வினையாகவோ அல்லது பெயர், வினை இரண்டு மாகவோ இருக்கலாம். தொக்கு நிற்கின்ற இச் சொற்கள் பெரும்பாலும் தொடரின் இறுதியில் தொக்கு நிற்கின்றன. சில தொடர்களில் தொடரின் நடுவிலும் தொக்கு நிற்கின்றன.

உ. ம். 1. உங்கள் குழந்தைக்கு அதிக சக்தியளித்து முன்னணியில் நிறுத்திட கோகோ சுவைமிக்க போர்ன்விடா (அளித்திடுங்கள்)

2. நூற்ருண்டுகளுக்கும் மேலாக மக்களின் நம்பிக்கைக்கு உகந்தது (ஸ்டேன்ஸ்டீ).

3. முழுவதும் சத்து (நிறைந்தது ஆல்போ-ஸாங்).

4. எழில் கொழிக்கும் தோற்றம் (அளிக்கிறது) சுபாஷ் துணிகள். இவ்வெடுத்துக்காட்டுகளில், எடுத்துக்காட்டு 1-இல் வினையும் 2-இல் பெயரும் 3-இல் வினையும் பெயரும் 4-இல் வினையும் தொடர் நிறைப்பானாக வருகின்றன. முதல் மூன்று எடுத்துக்காட்டுகளில் தொடரின் இறுதியிலும் இறுதி எடுத்துக் காட்டில் தொடரின் நடுவிலும் நிறைப்பான்கள் இடம் பெறு கின்றன.

குறைத் தொடரின் முழுத் தொடரை வருவிக்கப் பயன்படு கின்ற சொல் குறிப்பிட்ட ஒரேயொரு சொல்லாகத்தான் இருக்க வேண்டும் என்பதில்லை. குறிப்பிட்ட பொதுத் தன்மை வாய்ந்த பலவேறு சொற்களில் ஏற்புடைய எச்சொல்லையும் அவரவர் விருப்பிற்கிணங்க நிறைப்பானாகப் பயன்படுத்தலாம். சான்றாக,

மரம் மற்றும் உலோக மேற்புறங்களின் பளபளப்பான ஃபினிஷுக்கு ஸிக்மாரின் மற்றும் ஸிக்மாலாக் எனாமல்கள் என்னும் குறைத்தொடரினை நிறைக்க 'உகந்தது; ஏற்றது; இசைந்தது; சிறந்தது; ஆகிய வினைகளில் ஏதேனும் ஒன்றினைப் பயன்படுத்த லாம். ஒரு சில குறைத்தொடர்கள் ஒரே ஒரு சொல்லை மட்டுமே நிறைப்பானாகப் பெறுவதும் உண்டு. பெயர்ச்சொல் நிறைப்பா னாகவரின் கால இடக்கட்டுப்பாட்டால் ஒரேயொரு பெயர் மட்டுமே நிறைப்பானாக வரும்.

4.0. ஒரு தொடரை குறைத்தொடர் எனக் கண்டறியவும் எற்றதொரு சொல்லை வருவித்து முழுத் தொடராக்கவும் உறு துணையாக அமைவன குறைத்தொடரின்கண் காணப்படுகின்ற பண்புருபு, வேற்றுமையுருபு, எச்சவுருபு, உம்மையருபு, ஒப்பாக்க வுருபு போன்ற இலக்கணக் கூறுகளேயாகும்.

(உம்) 1 ஸலோஃபென்
சக்தி வாய்ந்த பாதுகாப்பான வலிநிவாரணி (ஆகும்)

2 வாழ்வில் இனிமை விரைந்து பரவிடவே - பாமீஸ் (உபயோகிங்கள்)

3 ராணிபால் பருத்தித் துணிகளுக்கு (சிறந்தது)

ராணிபால் - எஸ் செயற்கை இழை மற்றும் கலப்பு இழைத் துணிகளுக்கு (சிறந்தது)

4 உங்கள் குழைந்தைகளுக்கு அதிக சக்தியளித்து முன்னணி யில் நிறுத்திட கோகோ சுவைமிக்க போர்ன்விடா (அளித்திடுங்கள்)

5 கால்ஷியம் - ஸாண்டோஸ்

வலுவுள்ள பற்களுக்கும் உறுதியான எலும்புகளுக்கும் (சிறந்தது)

6 இதர டிட்டர்ஜெண்ட் வில்லே. பார் எதனையும் விட அதிக வெளுப்பூட்டும் சக்தி (நிறைந்தது)

7 அமிர்தாஞ்சனம்

80 ஆண்டுகளுக்கு மேலாக நம்பகமான குடும்ப நிவாரணி (ஆகும்)

இச்சான்றுகளில் இடம்பெற்றுள்ள ஆன, இல், இட, உம், விட, ஆக போன்ற உருபுகளே ஏற்றதொரு நிறைப்பிரிவை வருவிப்ப தற்கான கரணிகளாகும். இவை போன்ற வேறு சில உருபுகளும் இடம் பெறலாம். மேலும், ஒரே குறைத்தொடரில் ஒன்றிற்கு மேற்பட்ட கரணிகளும் இடம் பெறலாம்.

உ. ம். உங்கள் குழந்தைகளுக்கு அதிக சக்தியவித்து முன்னணியில் நிறுத்திட

கோகோ சுவைமிக்க போர்ன்விடா (அளித்திடுங்கள்). இவ்வெடுத்துக் காட்டில் வேற்றுமை யுருபு 'கு' வும் எச்சவுரு 'இட' வும் கரணிகளாக அமைகின்றன.

5.0. இக்குறைத் தொடர்கள் பெரும்பான்மையான மக்கள் புரிந்து கொள்வதற்கும் புதிதாக ஆக்குதற்கும் எளிமையாகச் சுருக்கமாக இருப்பதால், தமிழ்ப் பத்திரிக்கை விளம்பரங்களில் அதிகமாக இடம்பெறுகின்றன. இக் குறைத்தொடர் வழக்காற்ருல் மொழிப் பயன்பாட்டுத் துறைகளும் விரிவடைகின்றன. இத்தகைய

தொடர்கள் செய்திகளை, கருத்துக்களை விளக்குவதில் சக்தி வாய்ந்தவொன்றாக விளங்குகின்றன.

இத்தகைய தொடரமைப்பு பேச்சு மொழியிலும் எழுத்து மொழியிலும் பொதுவாகக் காணப்படுவதால் இது இவை யிரண்டிற்கும் உள்ள இடைவெளியினைக் குறைக்கப் பயன் படுகின்றது.

விளம்பரப்பகுதிக்கும் பத்திரிக்கையின் ஏனைய பகுதிக்கும் உள்ள வேறுபாடு விளம்பரப்பகுதியில் குறைத் தொடர் மிகுதி யாகவும் ஏனைய பகுதிகளில் குறைந்தும் காணப்படுகின்றது. இதனைப் போலவே விளம்பரப் பகுதியில் ஏறத்தாழ இடம் பெறாத தொழிற் பெயராக்கத் தொடர் ஏனைய பகுதிகளில் மிகுதியாகக் காணப்படுகின்றது.

# இலக்கண வரலாற்றில் வினைபற்றிய கலைச்சொற்கள்

ப. மல்லிகா
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை

[தொ]ல்காப்பியம், [வீ]ரசோழியம், [நே]மிநாதம், [ந]ன்னூல், [பி]ரயோக [வி]வேகம், [இ]லக்கண [வி]ளக்கம், [இ]லக்கணக் [கொ]த்து, [தொன்]னூல் [வி]ளக்கம், [மு]த்து[வீ]ரியம் என்னும் ஒன்பது இலக்கண நூற்களில் காணப்படும் வினைபற்றிய கலைச் சொற்கள் தொகுக்கப்படுகின்றன. வடமொழித் தாக்கம் காணப் படும் இலக்கண நூற்கள் மூன்று. அவை வீரசோழியம், பிரயோக விவேகம், இலக்கணக் கொத்து என்பவைகளாகும். வீரசோழியத் திலும், பிரயோக விவேகத்திலும் வடமொழிச் சொற்களும் இடம் பெற்றுள்ளன. பிரயோக விவேக ஆசிரியரான சுப்பிரமணிய தீக்ஷிதர் தமிழில் அச்சொற்களுக்கு இணையாக வரும் சொற்களையும தந்துள்ளார். இலக்கண ஆசிரியர்கள் எந்தெந்த சொற்களை எவ்வெவற்றிற்குப் பயன்படுத்தி உள்ளனர் என்பதைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

சான்றாக, வேர்ச்சொல் என்பதைக் குறிக்க இலக்கண ஆசிரியர் கள் பயன்படுத்திய சொற்களைக் காண்போம். புத்தமித்திரனார் வீரசோழியத்தில் ‘தாது’ என்று வேர்ச்சொல்லைக் குறிப்பிட, பவணந்தி, வைத்தியநாததேசிகர், சுவாமிநாததேசிகர், வீரமா முனிவர் ஆகியோர் ‘பகுதி’ என்று கூறியுள்ளனர். சுப்பிரமணிய தீக்ஷிதர், வைத்தியநாத தேசிகர், சுவாமிநாத தேசிகர் முதலியோர் ‘முதனிலை’ என்ற சொல்லை வேர்ச்சொல்லிற்கு இணையாகப் பயன்

படுத்தியுள்ளனர். இலக்கணக் கொத்து ஆசிரியரான சுவாமிநாத தேசிகர் ‘தனிவினை’ என்ற மற்றொரு சொல்லையும் கையாண்டுள்ளார். முத்துவீர உபாத்தியாயர் எழுத்ததிகாரத்தில் ‘மொழி’ என்ற சொல்லால் வேர்ச்சொல்லைக் குறிப்பிடுகிறார். எனவே, ‘வேர்ச்சொல்’ என்பதைக் குறிக்க தாது, பகுதி, முதனிலை, தன்வினை, மொழிஎன்னும் ஐந்து சொற்களை இலக்கண ஆசிரியர்கள் கையாண்டுள்ளனர் என்று அறியலாம்.

இவ்வாறு வரும் சொற்கள் எல்லாம் பின்வரும் அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ளன. இலக்கண நூல் வாயிலாக பயன்படுத்திய கலைச்சொல்லை அறிந்து கொள்ளும் முறையைக் கீழே காண்போம். சான்றாக, இலக்கணக் கொத்தில் ‘வியங்கோள்’ என்பது எவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை அறிய கீழ்க்காணும் முறையைப் பயன்படுத்தவேண்டும்.

முதலில் வியங்கோள் என்பது எந்த எண்ணால் குறிக்கப் பட்டுள்ளது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். பத்தாம் எண்ணில் (X) இலக்கணக்கொத்திற்கு நேராக உள்ள 1, 3 என்ற எண்களைக் குறித்துக் கொண்டு 1, 3 என்பது எந்த கலைச்சொல்லைக் குறிக்கும் என்று ‘விளக்கத்தின்’ வாயிலாக அறிந்து கொள்ள வேண்டும். 1, 3 என்பது வியங்கோள், வியங்கோள்முற்று என்பவைகளாகும்.

இடைநிலை என்பதைக் குறிக்க எந்த கலைச்சொல் எந்த நூலில் குறிக்கப்பட்டுள்ளது என்பதைக் காணும் முறையைப் பார்ப்போம். இடைநிலை என்னும் இரண்டாம் (II) பிரிவில் வரும் எண்களைக் குறித்துக் கொண்டு 1, 2 அவற்றின் விளக்கத்தை ‘அட்டவணை விளக்கம்’ வாயிலாக அறிந்து கொள்ள வேண்டும். பின் அட்டவணையில் அதே காலத்தில் கீழிருந்து மேலாக நோக்கினால் எந்த நூல் என்று அறியலாம். காலங்காட்டும் பிரத்தியம் (1) என்பது வீரசோழியத்திலும், இடைநிலை என்பது நன்னூல், இலக்கணவிளக்கம், இலக்கணக் கொத்து, தொன்னூல் விளக்கம் என்னும் நூல்களிலும் ‘இடைநிலை’யைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளன என்று அறியலாம்.

## அட்டவணை விளக்கம்

இலக்கண நூற்கள்
கலைச்சொற்கள்

I 1. தாது
2. பகுதி
3. முதனிலை
4. தனிவினை
5. வினை

II 1. காலங்காட்டும் பிரத்தியம்
2. இடைநிலை

III 1. சொல்
2. கிளவி
3. பிரத்தியம்
4. விகுதி
5. வினையின்விகுதி
6. பெயர்

IV 1. வினைமுதல்
2. செய்வது
3. கருத்தா
4. செய்பவன்

V 1. குறிப்பு
2. வினைக்குறிப்பு
3. குறிப்புமுற்று
4. குறிப்புவினை

VI 1. வினை
2. வினைசொற்கிளவி
3. தொழிற்பதம்
4. முற்று
5. தொழின்மொழி
6. முற்றுவினைப்பதம்
7. வினைமுற்று
8. விதிவினை
9. விதிச்சொல்
10. தெரிநிலைவினை

VII 1. வினைஎஞ்சுகிளவி
2. துமந்தப் பிரத்தியம், துவாந்தப் பிரத்தியம்
3. வினைஎச்சம்
4. துவாதுமுன்

VIII 1. பெயரெஞ்சுகிளவி
2. பெயரெச்சம்
3. கானச்சு, சதிர்ப் பிரத்தியம் (நிகழ் காலப் பெயரெச்சம்)

IX 1. தொழில்நிலை ஒட்டும் பெயர்
2. வினைப்பெயர் அல்பெயர்
3. வினைமுற்றுப் பெயர்
4. கிருதந்தம்
5. வினைப்பெயர்

X 1. வியங்கோள்
2. வியங்கோள் கிளவி
3. வியங்கோள் முற்று

XI 1. தொழிற்பெயர்
2. தொழிற்பெயர்க் கிளவி

XII 1. ஏவல்

XIII 1. எதிர்மறுத்துமொழி
2. தடைப்பொருள்
3. எதிர்மறுத்துச் சொல்லல்
4. எதிர்மறை
5. நேர்ந்தநிலை மறுக்கும்
6. மறைவினை, மறை, மறைச்சொல்
7. எதிர்மறுத்து உரைத்தல்

XIV 1. தன்வினை
2. கேவலத்தாது
3. அற்பனேபதம்

XV 1. காரிதம்
2. ஈரேவல்
3. பரஸ்மைபதம்
4. பிறவினை

XVI 1. காரிதம்

XVII 1. சகன்மகதாது, அகன்மகதாது
2. செயப்படுபொருள் குன்ருமை, குன்றல்

XVIII 1. தத்திதம்

| கலைச்சொற்கள் | தொ. | வி. | ஒ.த. | ந. | பி.வி. | இ.வி. | இ.தொ | தொ.வி. | மு.வி. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| I | * | 1 | * | 2 | 3 | 2,3 | 2,3,4 | 2 | 5 |
| II | * | 1 | * | 2 | * | 2 | 2 | 2 | * |
| III | 1,2 | 3 | * | 4 | * | 4 | 4 | 5 | 1,6 |
| IV | 1,2 | 3 | * | 1,4 | 3 | 1 | * | 3 | 1 |
| V | 1 | 2 | 1,2 | 2,3 | 3 | 1,2,3 | 2 | 2 | 1,2,4 |
| VI | 1,2 | 3 | 4 | 4 | 4 | 1,4,5 6,7 | 4,8,9 | 1,7 | 1,4,10 |
| VII | 1 | 2 | 3 | 3 | 4 | 1,3 | 3 | 3 | 1 |
| VIII | 1 | * | 2 | 2 | 3 | 1,2 | 2 | 2 | 2 |
| IX | 1 | * | * | 2 | 3,4 | 5 | 3 | * | * |
| X | 1,2 | * | 1 | 1 | 1 | 1,3 | 1 | 1 | 1 |
| XI | 1 | * | * | 1 | * | 1 | 1 | * | 1,2 |
| XII | * | 1 | * | 1 | 1 | 1 | 1 | 1 | * |
| XIII | 1 | 2 | 3 | 4 | 5 | 4 | 6 | 4 | 7 |
| XIV | 1 | 2 | * | * | 3 | * | 1 | * | 1 |
| XV | * | 1 | * | 2 | 3 | 4 | 4 | * | 4 |
| XVI | * | * | * | * | 1 | * | * | * | * |
| XVII | * | * | * | * | 1 | * | 2 | * | * |
| XVIII | * | 1 | * | * | 1 | * | * | * | * |

* கலைச்சொற்கள் பயன்படுத்தப்படவில்லை.

# பாடாண் எட்டு

வ. சுப. மாணிக்கம்
காரைக்குடி

தொல்காப்பியப் புறத்திணையில் பாடாண்டினை பற்றிவரும் பல நூற்பாக்கள் பொருள்விளக்கம் பெருமல் உள்ளன. இடைக்காலச் சில இலக்கிய மரபுகள் இவற்றின் பொருளாக எழுதப்பட்டுள்ளன. இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் கூறும் உரைகள் வரலாற்று மொழி நூலறிவுக்கும், சங்ககாலப் பண்பியலுக்கும் பொருத்தமாக இல. அமரர் என்ற சொல்லை வடசொல்லாகக் கொண்டு தேவர் என்று அன்னோர் பொருள் காண்பது வழக்கு முரணாகும். அச் சொல்லுக்குப் போர் மறவர் என்ற இயல்பான பொருளைக் கண்டார் நாவலர் பாரதியார். இதுவே தக்க பொருளாகும். பேராசிரியர் வெள்ளைவாரணர் கொண்ட உரைப்பொருள்களும் கூடுதலான பொருத்தம் உடையன. டாக்டர் துரையரங்கனர் பாடாண் நூற்பாக்களுக்குச் சமய மெய்ப் பொருளுரை எழுதி யிருப்பது, சுருங்கச் சொல்லின், திரிபுரையாகும்.

'அமரர்கண்' என்பது தொடங்கி, 'கொடிநிலை கந்தழி' என்பது வரை உள்ள எட்டு நூற்பாக்களும் ஒருங்கிணைந்த புதிய ஆய்வுக்கு உரியவை எனினும் இக்கட்டுரைக்கண், 'அமரர் கண்' என்ற ஒரு நூற்பாவை மட்டும் ஆராய்வோம்.

'பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே
நாடுங் காலை நாலிரண் டுடைத்தே' (புறம். 25)

'அமரர்கண் முடியும் அறுவகை யானும்
புரைதீர் காமம் புல்லிய வகையினும்
ஒன்றன் பகுதி ஒன்றும் என்ப' (புறம். 26)

முதல் நூற்பா பாடாண் எட்டுப் பகுதிப்படும் என்று கூறுகின்றது. அந்த எட்டு எவை என்று அடுத்த நூற்பா விரிப்பதாகவே கருதல் வேண்டும். கருதும் வண்ணந்தான் 'அமரர்கண் முடியும் அறுவகை' என எண்ணுப் பெயர் முதலடியிலேயே அமைகின்றது. 'ஈரேழ் துறைத்தே' என்று வெட்சித்திணையிலும், 'இருநால் வகைத்தே' என்று உழிஞைத் திணையிலும் கூறிய தொகை நிலைகளைப் பின்னொரு நூற்பாவில் தொல்காப்பியர் விரித்துக் காட்டுவர். அம்முறையை இப்பாடாண்டிணையிலும் காணலாம்.

இதுகாறும் உரைவரைந்தோர்' 'ஒன்றன் பகுதி ஒன்றும்' என்றவிடத்து, 'ஒன்றும்' என்பதனைச் செய்யும் என்னும் முற்றுகக் கொண்டு பொருந்தும் எனவும் ஒருங்கு வரும் எனவும் அமையும் எனவும் பொருள் கண்டனர். அதனை உடன்படின் இந்நூற்பா அறுவகை, புல்லியவகை என எழு பகுதிகளை மட்டும் விரிப்பதாகக் கொள்ளவேண்டும். 'நாலிரண்டு உடைத்தே' என்பதற்கு ஏற்ப எட்டுப்பகுதி இது என்று சொல்லாத நூற்குற்றம் தொல்காப்பியர்க்கு ஏற்படும். ஆதலின் இந்நூற்பா தன்னிலே எட்டும் உண்டு என்று காண்பதே முறையாகும்.

ஒன்றும் என்பது செய்யும் என்னும் முற்றன்று; ஒன்று என்பது எண்ணுப்பெயர். உம் எண்ணும்மையாகும். அறுவகையும் புல்லிய வகையும் ஒன்றன் பகுதி ஒன்றும் ஆக எட்டு என்ப என்று உரை செய்யவேண்டும். இதுவே நூற்பாவின் தொடர்முறையும் நூற்பாவின் நடைமுறையும் ஆகும். இனி, இந்நூற்பா நுதலும் எண் பகுதி யாவை என்று காண்போம்.

'அமரர் கண் முடியும் அறுவகை' என்பதற்கு போர் மறவர்களோடு தொடர்புடைய வெட்சி முதல் காஞ்சியீறான புறத்திணை ஆறு என நாவலர் பாரதியார் கொண்ட புதிய நல்லுரையும் அதனை உடன்பட்ட பேராசிரியர் வெள்ளைவாரணர் எழுத்தும் முற்றும் ஏற்றுக்கொள்ளத் தக்கவையே. 'புரைதீர்

காமம் புல்லிய வகை என்ற தொடருக்குக் குற்றமற்ற அகத்திணைக் காதல் வகை என்று பொருள் கோடல் பாடாண்டிணைக்கும் இலக்கியச் சான்றுக்கும் பொருந்தவில்லை என்பது என் கருத்து. ஐந்திணை ஒத்த இருபாற்காதல் ஆதலின் கைக்கிளைக்குப் புறம் எனப்படும் பாடாண்டிணையில் சொல்லுதற்கு உரியதன்று. மேலும் இன்பம் பற்றிய புகழ்ச்சித் துறைகள் அகத்திணையியல்களில் இடம் பெற்றுள்ளன. எனவே இந்நூற்பாவிற் கூறப்படும் காமவகை அகத்திணை சாராததாகல் வேண்டும் என்பது தெளிவு.

'காமப்பகுதி கடவுளும் வரையார்' (புறம். 2அ) எனவரும் நூற்பாவிற்குக் கடவுள் மாட்டுக் கடவுட் பெண்டிர் நயந்த பக்கம் என்று எல்லோருமே ஒத்து உரையெழுதியுள்ளனர். வெண்பா மாலை ஆசிரியரும் இக்கருத்துடையவரே. இவ்வுரைப்பொருள் பொருந்தும் இது தூய காதலாயினும் புரைதீர் காமமாயினும் மக்கள் நுதலிய என்று இனம் வரையறுக்கப்பட்ட ஐந்திணைக்குப் புறம் ஆதலின் பாடாண்டிணையின் ஒருவகையாயிற்று எனக் கொள்ளவேண்டும் புரைதீர் காமம் புல்லிய வகை என்ற இரண்டாவதுஅடி இக்கடவுளினக் காதலையே குறிக்கின்றது. இக்காதலின்கண் தலைவன் தலைவி இருவருமே கடவுளர் ஆதலின் 'பிறப்பே குடிமை' என்றபடி இனவொற்றுமை அடிப்படை இருப்பதைத் தெளியலாம். ஐந்திணைக்கண் தலைவனும் தலைவியும் மக்கட் பிறப்பு என்ற ஓரினப் பிறப்பு என்பதனை ஒப்புநோக்குக.

'ஒன்றன் பகுதி ஒன்றும்' என்ற எட்டாம் வகை அறிவு முட்டுத் தருவது, இருளும் ஒளியும் விராயது; எனினும் இதன் பொருளைக் காண முயலலாம். இத்தொடரில் முதலில் வரும் ஒன்று என்பது என்ன? அதன் பகுதி அன்று என்பது என்ன? திணைகளுள் ஒவ்வொரு கூறு எனவும் தேவர்க்குரிய பகுதி எனவும் செந்துறை வண்ணப் பகுதி எனவும் உரைத்த பொருள்கள் வலுவில.

> 'காமப் பகுதி கடவுளும் வரையார்
> ஏனோர் பாங்கினும் என்மனார் புலவர்' (புறம். 28)

முதலடியின் பொருள் கடவுளர் தம்முட் காதல் எனவும், புரைதீர் காமப் புல்லியவகைப் பாடாண் எனவும் முன்னர்க் காட்டினேன்.

'ஏனோர் பாங்கினும்' என்ற தொடருக்குக் கடவுளிடத்து மானிடப் பெண்டிரை நயந்த காதல் எனவும் கடவுள் மானிடப் பெண்டிரை நயந்த காதல் எனவும் எல்லோரும் ஒரு முகமாக எழுதிய உரையும் ஏற்கத்தகும். 'ஒன்றன் பகுதி ஒன்று' என்னும் தொல்காப்பிய நூற்பா இக்காதல் வகையையே எட்டாவதாகச் சுட்டுகின்றது. இக்காதல் வகை ஐந்திணைபோல் மக்களிடை காதலுமன்று; ஏழாவதாகச் சொல்லப் பட்ட புரைதீர் காம வகைபோலக் கடவுளிடைக் காதலுமன்று. கலப்பினக்காதலாதலின் தனிவகையாக எண்ணப்பட்டது. ஒன்றன் பகுதி ஒன்று என்ற தொடரில் ஒன்று என்பது முழுதும் கடவுளினக் காதல் வகையைக் குறிக்கும் எனவும் பகுதியொன்று என்பது அதனுள் ஒரு பாகமான கலப்பினக் காதல் வகையைக் குறிக்கும் எனவும் பொருள் காணவேண்டும். எனவே, போர்மறவரைச் சார்ந்த மக்கட் பாடாண் ஆறு எனவும் காதல் வகையைச் சார்ந்த தெய்வப் பாடாண் இரண்டு எனவும் ஆகப் பாடாண்வகை நாடுங்காலை நாலிரண்டு உடைத்து என உரைகாணத் தகும். பிறரெல்லாம் கொண்டாங்கு ஒன்றும் என்பதனைச் செய்யுமென் முற்றாகக் கொள்ளாமல் எண்ணும்மையாகக் கொண்டமையாற்றான் இப்புதிய உரைபொருள் காணமுடிந்தது எனக் கருதுவோமாக.

# செய்யா எனும் வாய்பாட்டு வினையெச்சம்

பெ. மாதையன்
சென்னைப் பல்கலைக்கழகம்

முன்னுரை

தமிழிலக்கிய வரலாற்றில் செய்யா எனும் வாய்பாட்டுச் சொற்கள் பலவின்பால் எதிர்மறை வினைமுற்று, எதிர்மறைப் பெயரெச்சம், வினையெச்சம் என மூவகைநிலையில் செயல்பட்டுள்ளன. இம்மூன்றனுள் ஈண்டு செய்யா எனும் வாய்பாட்டு வினையெச்சம் மட்டுமே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றது.

இலக்கணத்தில் செய்யா எனும் எச்சம்

தொல்காப்பியர், வினையெச்ச வாய்பாடுகளைச் சுட்டும் இடத்து இச்செய்யா எனும் வாய்பாட்டினைச் சுட்டவில்லை. ஆயினும் இது வினையெச்சச் சொல் என்பதில் அவர்க்கும் உடன்பாடுண்டு என்பதனைப் பின்வரும் எழுத்ததிகார நூற்பா நமக்குத் தெளிவுறுத்துகிறது.

செய்யா வென்னும் வினையெஞ்சு கிளவியும்
அவ்வியல் திரியா தென்மனார் புலவர் (தொல். எழுத்து 223)

தொல்காப்பியர் இவ்வாறு சுட்ட, நன்னூலார் இதனை வினையெச்ச வாய்பாடுகளில் ஒன்றாகவே சுட்டியுள்ளார் என்பது ஈண்டு எண்ணத்தக்கது.[1]

உடன்பாடா எதிர்மறையா ?

இலக்கணவியலாரும் உரைகாரரும் இச்செய்யாவென் வினையெச்சம் உடன்பாட்டினதா அன்றி எதிர்மறையினதா என்பதனை

எங்கும் வெளிப்படையாகச் சுட்டவில்லை. நன்னூலார் இதனை வினையெச்ச வாய்பாடுகளில் ஒன்றாகவே குறித்துள்ளார் என்பதனை முன்னமே கண்டோம். அவர் சுட்டிய ஏனைய வாய்பாட்டு வினையெச்சங்கள் அனைத்தும் உடன்பாட்டினதாகவே இருப்பதனை நோக்க இதையும் அவர் உடன்பாட்டினதாகவே கருதிச் சுட்டியிருக்கிறார் என எண்ணலாம்.[2]

### இலக்கியமும் செய்யாவென் வினையெச்சமும்

தமிழிலக்கிய வரலாற்றில் இவ்வெச்சம் செயல்பட்டிருக்கின்ற இடங்களை ஓரளவு தொகுத்து நோக்கும் பொழுது இவ்வெச்சம் செய்து என்ற உடன்பாட்டெச்சமாகவும் செய்யாது என்ற எதிர்மறை எச்சமாகவும் செயல்பட்டிருத்தலை உணரலாம். சுருங்கக் கூறின் செய்யா எனும் எச்ச இறுதி ஆகாரம் 'து' என்ற உடன்பாட்டு விகுதியாகவும் 'ஆது, ஆமல்' என்ற எதிர்மறை விகுதியாகவும் செயல்பட்டிருக்கின்றது.

(உ.ம்.) களிறு கதவெறியாச் சிவந்துராஅய்
நுதிமழுங்கிய வெண்கோட்டா (புறம். 4)
நறையும் விரையும் ஓச்சியும் அலவுற்று
எய்யா மையலை நீயும் வருந்துதி (குறிஞ்சிப்பா. 7,8)
பட்டிமையுங் காண்குறுவாய் நீயென்று விட்டகலா
சிலம்பு 21. 38)

நின்றாள் நினைந்தாள் நெடுங்கயற்கண் நீர்துடையாச்
சென்றாள்.............. (சிலம்பு 19. 74-75)

விடுமாற்றம் வேந்தர்க்கு உரைப்பான் வருமாற்றம்
வாய்சோரா வன்க ணவன் (குறள் 689)

தெரிந்துணரா நோக்கிய உண்கண் பரிந்துணராப்
பைதல் உழப்பது எவண் (குறள் 1172)

கைபிசையா வாய்மடியாக் கண்சிவவா வெய்துயிரா
மெய்குலையா.................

(தண்டியலங்காரம் உருத்திரச் சுவை)

மேற்காட்டுகளில் தடித்த எழுத்துகளில் காணப்படும் செய்யா எனும் வாய்பாட்டெச்சங்களாய எறியா, எய்யா, அகலா, துடையா,

சோரா, உணரா, பிசையா, மடியா, சிவவா, உயிரா, குலையா என்பன முறையே எறிந்து, எய்யாது, அகன்று, துடையாது சோர்ந்து, உணராது, பிசைந்து, மடிந்து, சிவந்து, உயிர்த்து, குலேந்து எனப் பொருள்பட்டு வருகின்றன. தமிழிலக்கிய வரலாற்றில் செய்யா எனும் வினையெச்சம் பெரும்பான்மையும் உடன்பாட்டிலும் சிறுபான்மை எதிர்மறையிலும் செயல்பட்டிருப்பது நன்கு நினையத்தக்கது.[3]

### செய்யா எனும் எச்சமும் ஆநின்று இடைநிலையும்

இடைக்காலத்தில் ஏற்பட்ட 'ஆநின்று' என்ற இடைநிலையின் தோற்றத்துக்கு இச்செய்யா எனும் வாய்பாட்டு வினையெச்சமே காரணம் எனலாம். பழந்தமிழில் செய்யா நின்ருள் என்பன இரு சொல் நீர்மையனவாய்க் கருதப்பட்டன. இதன்படி செய்யா என்பது வினைஎச்சம்: நின்ருன், நின்ருள் என்பன வினைமுற்று. இடைக்காலத்தில் இவை ஒருசொல் நீர்மையனவாய்க் கருதப்பட்டு, செய் + ஆநின்று + ஆன், ஆள் எனப் பகுக்கப்பட்டு ஆநின்று இடை நிலைபெற்ற நிகழ்கால வினைமுற்றுகளாகக் கொள்ளப்பட்டன.[4]

பழைய இலக்கியங்களில் செய்யா எனும் எச்சத்தினை நின்ருன், நின்ருள் என்பன போன்ற (நில் வினையடியாகத் தோன்றிய) முற்றுகள் தொடரும் போது அவை செய்து நின்ருன், செய்து நின்ருள் எனச் செய்தென் எச்சங்களாகக் கொள்ளப்பட்டன. இடைக்காலத்தில் செய்யா நின்ருன் என்பது நிகழ்கால வினை முற்ருகக் கொள்ளப்பட்டது. இடைக்கால இலக்கணக் கோட் பாட்டின்படி, செய்யா எனும் எச்சத்தினை 'நில்' என்ற வினையடி யாகத் தோன்றும் முற்றுகள் தொடரும் போது அவை 'ஆநின்று' இடை நிலை பெற்ற நிகழ்கால வினைமுற்றுகளாக கருதப்பட்டன. வேறு வினைமுற்றுகள் தொடரும் போது செய்யா என்பது ஆகார வீற்றுச் செய்தென் எச்சமாகக் கொள்ளப்பட்டது. இவற்றை, நன்னுலாரின் இலக்கணகோட்பாட்டில் காணப்பெறும் 'ஆநின்று' எனும் இடைநிலைப் பகுப்பாலும் செய்யா எனும் வாய்பாட்டு வினையெச்ச வரையறையாலும் உணரலாம்.

பெயரெச்சமும் வினையெச்சமும்:

செய்யா எனும் எச்சம் பெயரைத் தன்முடிபாகக் கொள்ளும் பொழுது 'செய்யாத' எனும் எதிர்மறைப் பெயரெச்சமாகச் செயல் படுகின்றது. இது வினைமுற்றினைத் தன்முடிபாகக் கொள்கின்ற பொழுது வினையெச்சமாகச் செயல்படுகின்றது. இத்தகு பெயரெச்ச வினையெச்சங்களுக்கு இடையே எவ்வித குழப்பமும் ஏற்படுவதில்லை; அது ஏற்கும் சொல் அது எவ்வெச்சம் என்பதனைத் தெளிவாக வரையறுத்து விடுகின்றது.

(உ.ம்) நிலையும் படிதமும் நீங்கா மரபிற் (சிலம்பு 6-65)
பட்டினப் பாக்கம் விட்டனர் நீங்கா
..........................................
இலங்கொலிச் சிலாதலம் மேலிருந் தருளப்
(சிலம்பு 10. 159-61)

மேற்காட்டுகளில் நீங்கா என்பது 'மரபு' எனும் பெயரை ஏற்கின்ற பொழுது நீங்காத எனப் பெயரெச்சமாகவும் 'மேலிருந்தருள' என வினையை ஏற்கின்ற பொழுது நீங்கி என வினையெச்சமாகவும் செயல்பட்டிருத்தல் நன்கு நோக்கத் தக்கது.

உடன்பாடும் எதிர்மறையும்:

செய்யா எனும் சொல் பெயரெச்சமாகவும் வினையெச்சமாகவும் செயற்படுகின்ற பொழுது எழாத குழப்பம் உடன்பாட்டு எதிர் மறை வினையெச்சங்களுக்கு இடையே எழுகின்றது. இரண்டும் வினைமுற்றினையே தம் முடிபாகக் கொண்டிருப்பதே இதற்கான காரணமாகும் உண்ணா வந்தான் என்பதே உண்டுவந்தான், உண்ணாதுவந்தான் எனப் பொருள்பட்டு வரலாம் பயின்ற இடச் சூழல் கொண்டே உடன்பாடா எதிர்மறையா என்பதை வரையறுக்கலாம்.

(உ ம்.) ஒண்கதிர் ஞாயிற் றுறளவாத் திரிதரும்
செங்கால் அன்னத்துச் சேவல் அன்ன
(மதுரைக்காஞ்சி 385. 86)

வான்பொய்ப்பினும் தான்பொய்யா
மலைத்தலைய கடற்காவிரி
புனல்பரந்து பொன்கொழிக்கும் (பட்டினப்பாலை 5-7)

மேற்காட்டுகளில் அளவா என்பது கருதி எனவும் பொய்யா என்பது பொய்யாமல் எனவும் பொருள்பட்டு வருதல் ஈண்டு நோக்கத்தக்கது. இவ்வாறு உடன்பாட்டு எதிர்மறை வினையெச்சங் கள் (செய்யா வாய்பாட்டின்) தொடரமைப்பில் ஒரே நிலையில் அமைந்திருத்தலான் இவற்றுக்கு இடையில் ஏற்படும் குழப்பம் தவிர்க்க இயலாததாகின்றது. தெளிவான பொருள் வரையறைக்கு இவ்வினையெச்சம் இடந்தராமையால் பிற்காலத்தவர் இவ்வாய் பாட்டு வினையெச்சங்களைக் கைவிட்டனர் போலும்.

முடிவுரை

நன்னூலார் உரைத்த ஏனைய வாய்பாட்டு எச்சங்கள் அனைத்தும் உடன்பாட்டினவாகவே இருத்தலான் செய்யா என்பதனை யும் உடன்பாட்டினதாகவே கருதலாம்.

இது உடன்பாடு எதிர்மறை என்ற இருவேறு நிலையில் தமிழிலக்கிய வரலாற்றில் செயல்பட்டுள்ளது. செய்யா என்பது உடன்பாட்டில் மட்டுமே வருதலன்றிச் செய்யாது என எதிர்மறை யிலும் செயல்பட்டிருத்தலான் செய்யா எனும் எதிர்மறை வினை யெச்சங்களை செய்யாது என்ற எதிர்மறை நோக்கி ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சம் எனலாம்.

இடைக்காலத்தில், நில் என்ற வினையடியாகப் பிறந்த நின்றான், நின்றார், நின்றன என்பன போன்ற முற்றுகள் செய்யா எனும் வாய்பாட்டுச் சொற்களைத் தொடரும்போது அவை ஆநின்று இடைநிலை பெற்ற நிகழ்கால வினைமுற்றுகளாகக் கொள்ளப் பட்டன. ஏனைய இடங்களில் இவை எச்சமாகக் கொள்ளப்பட்டன.

பிற்கால வழக்கில், இவ்வெச்சம் உடன்பாடா எதிர்மறையா என்ற குழப்பம் தோன்றக் காரணமாக அமைந்தமையால் வழக் கிழந்தது போலும்.

அடிக்குறிப்பு

1 செய்து செய்பு செய்யாச் செய்யூச்
செய்தென செயச் செயின் செய்யியர்
(நன்னூல். நூற்பா எண் 343)

2 பெயரெஞ்சு கிளவியும் வினையெஞ்சு கிளவியும்
எதிர்மறுத்து மொழியினும் பொருணிலை திரியா
(தொல். சொல். 230)

என்ற தொல்காப்பியரைப் போல்

உருபும் வினையு மெதிர்மறுத் துரைப்பினுந்
திரியா தத்தமீற் றுருபி னென்ப (நன்னூல் நூ. எண் 354)

என நன்னூலார் எதிர்மறுத்து வருதற்கு இலக்கணம் வகுத்தோதி வமையாலும் எதிர்மறைப் பெயரெச்ச, வினையெச்ச வாய்பாடுகளை வரையறுத்தோதாமையாலும் அவர் சுட்டிய வினையெச்ச வாய் பாடான செய்யா என்பது உடன்பாட்டினதே எனக்கருதலாம்.

3 இவ்வெச்சம் சங்க இலக்கியங்களில் பெரும்பான்மையும் உடன் பாட்டிலும் திருக்குறளில் பெரும்பான்மையும் எதிர்மறையிலும் செயல்பட்டிருப்பது ஈண்டுச் சுட்டத்தக்கது.

4 "ஆநின்று என்ற இடைநிலை அமைகின்ற சில சொல் வழக்கு கள் பழைய இலக்கியத்தில் காணப்படுகின்றன. சுரநனி வாரா நின்றனர் (ஐங்குறு 396) இறை இறைவா நின்றவளை (குறள் 1157) என்ற தொடர்களைப் பிற்காலத் தமிழில் பகுத்துக் காண்பது போல் பகுத்து 'ஆநின்று' என்ற நிகழ்கால இடைநிலை காணப் படும். இவற்றிற்கு உரையாசிரியர்கள் நிகழ்காலத்தில்தான் பொருள் கூறுகின்றனர். ஆனல் இந்த இரண்டு தொடர்களும் செய்யா எனும் வாய்பாட்டு வினையெச்சம் வினையைத் தழுவி நிற்பனவாகும்" எனும் டாக்டர் மோ. இசரயேல் அவர்களின் ஆய்வுக்குறிப்பு ஈண்டு நினையத்தக்கது.

# The Complementizer je and bole in Bengali and enru in Tamil

K. Meenakshi
Jawaharlal Nehru University,
New Delhi

Majority of Indian languages do not have the indirect construction of the type found in English, in clauses connected by *that* to the main clause; instead they use a quotative marker either before or after the reported speech. One finds a striking similarity in the uses of *that* - complementizer between IA and Dravidian languages. An attempt has been made, in this paper, to compare the uses of *that* - complementizer in Tamil and Bengali.

Before we take up Bengali, let us try to analyse, how this complementizer is used in Sanskrit, so that we will be able to find out the changes, if any, undergone in Bengali, a daughter language of Skt and also note the area of influence of non-Aryan languages, when we compare it with Tamil, one of the Dravidian languages.

Sanskrit uses *iti* and *yat* as *that* - complementizer. Besides its main function as quotative marker, *iti* has been used in all such instances where *yat* can be used, such as reason, motive, purpose etc. Consider the following:-

*iti*

*a:gamiṣya:mi:ty ava:di:h* "you have said *that* you would come"; *kṣatriyair dha ryate ca:po na:rtaśabdo bhaved iti.* (R. 3. 10.3) "The *kshatriyas* carry their bow *in order to* rescue the distressed"; *pura:ṇam ity eva na sa:dhu sarvam na ca:pi ka:vyani navam ity avadyam.* (Mal. 1 p. 3) "Not every old poem is to be approved for its age, nor is new poetry to be slamed only *because* it is new".

*yat*

*satyo' yam januprava:do yat sampat sampadam anu bhadhnati:ti* (K. 73) "The popular saying is true *that* one fortunate thing follows the other"; *priyam a:caritam late tvaya: me yad iyam punar maya: dṛṣṭa:* (V. 1.) "O Creeper, you have done me a service, *since* she has been once more seen by me".

The above examples show that *iti* is used to mark the end of a direct speech and also as an object complementizer. *Yat* is used as subject complementizer; and both *iti* and *yat* are used in clauses having cause and effect relationship.

Though all modern IA languages use some form or other for *that* – complementizer, none of these forms is a direct descendant of Skt *iti/yat*, excepting Bengali *je*, a derivative from *yat*. The complementizer *ki* in Hindi is derived from the interrogative morpheme *kim* of Skt. Marathi has a complementizer *mhaṇu:n*, a participle from *mhaṇ* 'say'. Bengali has two forms *je* and *bole*, the former is derived from the Skt relative morphome *yaṭ* and the latter a participle from the verb *bol* 'say'.

There is no clause final complementizer in Hindi. *Mhaṇu:n* in Marathi, is placed clause finally. Bengali is particularly interesting in that it has both an initial and final complementizer. The complementizer *je* is placed clause initially and *bole* is

placed clause finally. We find a striking similarity between the Dravidian languages on the one hand and Bengali and Marathi on the other, having a complementizer as a derivative from the verb 'saying' and in its placement in the clause final position.

*je* and *bole* in Bengali can be substituted for each other in such constructions where the verbs of saying, thinking, hearing etc. are used, e.g. *a:mi sunecchi je a:pni ḍha:ka:y ja:cchen* or *a:pni ḍha:ka:y ja:cchen bole ami sunecchi.* "I have heard you are going to Dacca"; *tini bolchilen je ka:l tini a:pna:r ba:ṛi ja:ben bole bolchilen* "He was saying that he would go to your house tomorrow".

When the clause means purpose, motive, reason etc. of some action, then only *bole* can be used. Consider the following:

*a:mi a:pis ja:bo bole beriyecchi*
"I have come out for going to the office"

*a:pni dekhechen bole eṣeche*
"I have come because you called me"

Certain constructions have both *je* and *bole* side by side; in such situations *bole* always denotes the reason, purpose etc. and *je* marks the end of a direct speech and behaves as a subject/object complementizer. Consider the following: *a:mi bolchi bolei je e ka:j korte hobe ta: na:y* ":It is not *that* this work has to be done *because* I am saying so".

Tamil complementizer *eṉṟu*, a participle derived from the verb *eṉ*'say' occurs in all situations, where Skt and Bengali complementizers are found to be used. Consider the following constructions.

*na:ṉ na:ḷai varuve:ṉ eṉṟu avaṉ coṉṉa:ṉ*
"He said that he would come tomorrow"

*ne:ram a:kiviṭṭatu en̲r̲u avan o:ṭin̲a:n*
"He ran because it was late".

*un̲akku en̲r̲u itai va:ṅkin̲e:n̲*
"I bought this for you"

*That* — Complementizer in Indian languages, may either behave as a quotative marker or subject/object complementizer or serve to denote the causes and effect relationship between the clauses so connected. In Skt *iti* behaves as a simple quotative marker and an objective complementizer. *yet* behaves as a subject and objective complementizer; and both *iti* and *yat* are used to connect the clauses showing cause and effect relationship.

In Bangali *je* behaves as a subject and object Complementizer and *bole* is used as object complimentizer and also is used to connect the clauses having cause and effect relationship. *en̲r̲u* is used as a quotative marker and object complimentizer.

A verbal noun *en̲patu* ◁ *en̲* is used as a subject complementizer in Tamil for eg.

*avan̲ varuva:n̲ en̲patu niccayam*
"It is definite that he would come"

